# ECONOMICS
## TEST – 5 Part - 1

| | | |
|---|---|---|
| 6th term – I | Unit 1 | பொருளியல் ஓர் அறிமுகம் |
| 7TH TERM 1 | Unit 1 | உற்பத்தி |
| 7TH TERM 3 | Unit 1 | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் |
| 8TH ECONOMICS | Unit 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் |
| | Unit 2 | பொது மற்றும் தனியார் துறைகள் |
| 9TH ECONOMICS | Unit 1 | மேம்பாட்டை அறிவோம் : தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை |
| | Unit 2 | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு |
| | Unit 3 | பணம் மற்றும் கடன் |
| | Unit 4 | தமிழகத்தில் வேளாண்மை |
| | Unit 5 | இடம்பெயர்தல் |
| 10TH ECONOMICS | Unit 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் |
| | Unit 2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் |
| | Unit 3 | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து |
| | Unit 4 | அரசாங்கமும் வரிகளும் |
| | Unit 5 | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்: |

# 6th பொருளாதாரம் தொகுதி - II
## அலகு– 1
## பொருளியல் ஓர் அறிமுகம்

- “கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை”.

**நுகர்வோர் பொருட்கள்:**
அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.
(எ.கா) அரிசி,துணிகள், மிதிவண்கள் போன்றவை.

- கிராமத்துலதான் பெரும்பாலான பொருட்கள் விளைவிக்கப்பட்டுச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன”.

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். - **குறள் 0479**
**விளக்கம்:**
தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

- “பழைய காலத்தில் பண்டமாற்று முறைன்னு ஒன்று இருந்தது ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் அது (எ.கா) ஒரு மூட்டை அரிசிக்குப் பதிலாகத் தேவையான அளவு துணியைப் பெற்றுக் கொள்வதாகும்”.

- ஒருவரிடம் அரிசி அதிகமாக இருக்கும், ஒரு நெசவாளரிடம் துணி அதிகமாக இருக்கும். அரிசி வைத்திருப்பவர் துணியை வாங்க விரும்புவார். ஆனால் துணியை வைத்திருப்பவர் அரிசியை வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பரிமாற்றம் நடக்கும்”.

**முதல் நிலைத் தொழில்கள்:**
- உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.
  - ❖ வேளாண்மை
  - ❖ கால்நடைகள் வளர்த்தல்
  - ❖ மீன் பிடித்தல்
  - ❖ கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்
  - ❖ கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல் மரம் வெட்டுதல்

- “பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளும்போது பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் வேறுபாடு பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க கண்டுபிடிக்கப்பட்ட கருவிதான் பணம்”.

- ‘‘பழங்காலத்துல வேட்டையாடிகளாக, உணவு சேகரிப்பாளர்களாக வாழ்ந்து வந்த மக்கள் படிப்பாடியாக வேளாண்மை செய்யக் கற்றுக் கொண்டனர்.

- இவ்வாறு அவர்கள் வேளாண்மை செய்வதற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே கிராமம், ஊர் என்று அழைக்கப்பட்டன. இன்றளவும் விவசாயம் நமது நாட்டின் பொருளாதார ஆணிவேராகத் திகழ்கிறது. மனிதனின் தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் அளவில்லை. அதன் அடிப்படையிலேயே புதிது புதிதாக தொழில்களைச் செய்யக் கற்றுக் கொண்டான். வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

- விவசாயம் போலவே இன்னும் சில தொழில்களையும் முதன்மையான தொழில்கள்னு சொல்லுவாங்க’’.

- ‘‘விவசாயம், தொழிற்சாலைகள் எல்லாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கு. உங்களுக்குப் புரியும்படி நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம்’’.

- ‘‘விவசாயம் தான் முதன்மையான வேலையாக இருக்கும் பட்டணம்னு சொல்லப்படுகின்ற நகரம் போன்று வசதிகள் அங்கே இருக்காது. அதே நேரம் அவர்களுக்குத் தேவையான அடிப்படையானவை கிடைக்கும்படி இருக்கும். சின்னச்சின்ன கடைகள் இருக்கும். அரிசி, பருப்பு மாதிரியே காய்கறி உற்பத்தியும் கிராமங்களில்தான் அதிகம். பால், காபி, டீ போன்ற பானங்களில் சேர்க்கும் சர்க்கரை, ஆலைகளில்தான் உற்பத்தியாகுதுன்னாலும் அதுக்கு மூலப் பொருளான கரும்பு கிராமங்களில்தான் விளையுது. மிளகாய் தொடங்கி கடுகு வரை சமையலுக்கான பெரும்பாலான பொருட்கள் கிரமத்துலேர்ந்துதான் வருது’’.

- அங்கே உற்பத்தி செய்யுறது மட்டும்தான் அவங்க. அப்பொருட்களை அவங்கட்ட இருந்து வாங்கி, விற்க நிறைய வியாபார இடை நிலை முகவர்கள் இருப்பதால், விவசாய உற்பத்தியாளர்களுக்குப் போய்ச்சேரும் பணம் குறைவாகத்தான் இருக்கும்’’.

**இரண்டாம் நிலைத் தொழில்கள்:**

- முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

- உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்:**

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் - பருத்தி, சர்க்கரை, உணவு பதப்படுத்துதல்
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் - காகிதத் தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்
- கனிமத் தொழிற்சாலைகள் - சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்
- கடல்சார் தொழிற்சாலைகள் - கடல் உணவு பதப்படுத்துதல்

- கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு. இதுவும் நான் சொல்லவில்லை. மகாத்மா காந்தியடிகள் சொன்னது’’.

**மூன்றாம் நிலைத் தொழில்கள்:**

- முன்னர் கூடிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

  - ❖ போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்
  - ❖ தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல்தொழில்நுட்பம்
  - ❖ வர்த்தகம் - பொருள்களைக் கொள் முதல் செய்தல், விற்பனை செய்தல்
  - ❖ வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்

- இன்று உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் தான் வாழ்கிறார்கள். நம்ம தமிழ்நாட்டில் 47 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கிறார்களாம்.

- தமிழ்நாடு உற்பத்தி தொழிலிலும் சேவைத் தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம். இவை நகரங்களை மையமாகக் கொண்டே இயங்குகின்றன.

- கிராமங்களைவிட நகரங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம். சிறுதொழில் செய்பவர்கள் தொடங்கி அமைப்பு சாரா தொழிலாளர்கள் வரை நகரத்தில் தான் அதிகமாக இருக்காங்க.

- கிராமத்தில் முடி திருத்தகம், துணிகளைத் துவைத்து, இஸ்திரி போட்டுக்கொடுக்கும் சலவை நிலையங்கள் எல்லாம் ஒண்ணோ ரெண்டோ தானே இருக்கும். ஆனால் நகரத்தில் இந்த மாதிரி சிறுதொழில் செய்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். இப்படி நகரத்தில் கிடைக்கக்கூடிய உபரி வருவாயும் அதிகமாக இருக்கும்.

- நன்கு வடிவமைக்கப்பட்ட சாலைகள், துறைமுகம், விமான நிலையம், ரியல் நிலையங்கள் போன்ற இடங்கள் எல்லாம் ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பாக நடக்கத் துணை புரிகின்றன. இதற்கு உதவுவதற்கு ஏற்றார் போல வங்கிக் கிளைகள் நகரங்களில் அதிகம். இப்படி அன்றாடப் பணப்புழக்கத்திற்குப் பெருமளவில் வங்கிகள் உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன.

- இவை அனைத்தையும் மூன்றாம் நிலை தொழில்கள் எனலாம்.

## 7th பொருளாதாரம்
## அலகு I உற்பத்தி

- பொருளாரத்தில், உற்பத்தியும் நுகர்வும் இரு இன்றியமையாத செயல்கள். அதேபோன்று, பொருளாதாரத்தில் உற்பத்தியாளர், நுகர்வோர் என இருவரும் இன்றியமையாதவர்களாக உள்ளனர். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே காணப்படும் சிறந்த செயலாற்றல், திறன்மிக்க நல்ல பொருள்கள் தயாரிப்பை உறுதிசெய்கிறது. இருவருக்குமிடையே நிகழும் இந்த இடைவினையாற்றல், நுகர்வோரை உற்பத்தியாளரின் வாடிக்கையாளர், வழங்குநர் என இருவழிகளில் செயல்பட வைக்கிறது. வழங்குபவராகவும் நுகர்வோர் செயல்படுகிறார். நுகர்வோர், தமக்குப் பயனளிக்கக்கூடிய பொருளைப் பெறும்வேளையில், பொருளை விற்பனை செய்யும் விற்பனையாளரும் தமக்கேற்ற வருமானத்தைப் பெறுகிறார். இவ்விருவரும் உற்பத்தியாளர், தாம் உற்பத்தி செய்யும் பொருளுக்கு அளிக்கின்ற உள்ளீடுகளுக்கு ஏற்ற விலையை அளித்துச் சமன் செய்கின்றனர்.

**பயன்பாட்டின் வகைகள் வடிவப்பயன்பாடு**

ஒரு விளைபொருளின் வடிவம் மாற்றப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளாகிய பருத்தியைக்கொண்டு ஆடைகள் உருவாக்கப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் உயர்கின்றன.

**இடப்பயன்பாடு**
ஒரு விளைபொருள், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளான அரிசி தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் கொண்டு செல்லப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் அதிகரிக்கின்றன.

**காலப் பயன்பாடு**
ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து சேமிப்புக் கிடங்கு வைக்கும்போது, அதன் பயன்பாடு மிகுகிறது.

எடுத்துக்காட்டாக, நுகர்வோர்களால் ஆண்டு முழுவதும் பயன்படுத்தக்கூடிய உணவுப் பயிர்களான நெல், கோதுமை போன்றவற்றைச் சேமித்து வைப்பதால், அவற்றின் தேவையும் பயன்பாடும் மிகுதியாகின்றன.

- பொருளாதாரத்தில் உற்பத்தி என்னும் சொல், மாற்றத் தக்க மதிப்புடைய பொருள்களையும் சேவைகளையும் உருவாக்குவதைக் குறிக்கிறது. அதாவது, பயன்பாட்டை என்பது, நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும். பயன்பாட்டை அதன் இயல்பைப் பொருத்து வடிவப் பயன்பாடு, இடப்பயன்பாடு, காலப் பயன்பாடு, பயன்பாடு என வகைப்படுத்தலாம்.

நம் இந்தியாவில் கலப்பு பொருளாதார நிலை காணப்படுகிறது. அதாவது,பொருளாதாரத்தில் தனியார் துறை நிறுவனங்களும் பொதுத் துறை நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன.

**உற்பத்தியின் வகைகள்**

- உற்பத்தியில் மூவகை உள்ளன. அவையாவன:

1. முதன்மை நிலை உற்பத்தி
2. இரண்டாம் நிலை உற்பத்தி
3. மூன்றாம் நிலை உற்பத்தி

1. **முதன்மை நிலை உற்பத்தி**

- இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாடுகளுக்குட்பட்ட நிலையை முதன்மை நிலை உற்பத்தி என்கிறோம். முதன்மைநிலையில் வேளாண்மைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இதனை வேளாண்மைத் துறை உற்பத்தி எனவும் கூறுவர்.

- வேளாண்மையும் அதனுடன் தொடர்புடைய செயல்கள், வனங்களைப் பாதுகாத்தல், மீன் பிடித்தல், சுரங்கத்தொழில், எண்ணெய் வளங்களைப் பிரித்தெடுத்தல் போன்ற செயல்பாடுகள் முதன்மை நிலை உற்பத்தியுள் அடங்கும். இந்தச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள், பூமியின் மேற்பரப்பிலிருந்தும் ஆழ்கடலிலிருந்தும் இயற்கை வளங்களைப் பிரித்தெடுக்கின்றன.

2. **இரண்டாம் நிலை உற்பத்தி**

- முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்திப் புதிய உற்பத்திப் பொருள்களாக உருவாக்கும் செயல்பாட்டை இரண்டாம் நிலை உற்பத்தி என்கிறோம். இரண்டாம் நிலையில் தொழிலுக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இதனைத் தொழில்துறை உற்பத்தி எனவும் கூறுவர். எடுத்துக்காட்டாக, மாவிலிருந்து ரொட்டி தயாரித்தல், இரும்புத் தாதுவிலிருந்து பயன்படக்கூடிய பொருள்களைத் தயாரித்தல் போன்றவற்றைக் கூறலாம். மேலும், நான்கு சக்கர வண்டிகள், ஆடைகள், இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் பொறியியல் துறை சாரந்த பணிகள், கட்டடப்பணிகள் சார்ந்த தொழில்களும் இரண்டாம் நிலை உற்பத்தியுள் அடங்கும்.

3. **மூன்றாம் நிலை உற்பத்தி**

- முதன்மை நிலை, இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தியாகும். மூன்றாம் நிலை உற்பத்தியாகும். மூன்றாம் நிலையில் சேவைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால் இதனைச் சேவைத்துறை உற்பத்தி எனவும் கூறுவர். சேவைத் துறை நிறுவனமானது, உற்பத்திப் பொருள்களைத் தொழில்துறை நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நேரடியாக வழங்குகிறது. எடுத்துக்காட்டாக வாணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித்தொடர்பு, சட்டம், நிருவாகம், கல்வி, உடல்நலப் பாதுகாப்பு போன்ற அரசுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் சேவைத்துறை உற்பத்தி நிறுவனங்களாக விளங்குகின்றன.

**எடுத்துக்காட்டு**

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உற்பத்தி

- பருத்தி (முதன்மைத் துறை) – பருத்தித் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) = ஆடை உற்பத்தி
- இரும்புத்தாது (முதன்மைத் துறை) - இரும்புத் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) = பொருள் தயாரிப்பு
- கோதுமைமாவு (முதன்மைத் துறை) – ரொட்டித் தொழிற்சாலை = உணவு உற்பத்தி (இரண்டாம் நிலை உற்பத்தி)

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பெரும்பங்கு வகிப்பவை பெரும்பங்கு வகிப்பவை மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை உற்பத்திகளே.

**உற்பத்திக்கான காரணிகள்**

- மனிதனின் செயல்பாடுகள் பொருளை உற்பத்தி செய்தல், நுகர்தல் என்னும் இரு கூறுகளில் உள்ளடங்கியுள்ளன. உற்பத்தியின்போது, பொருள்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்றம் செய்யப்படுகின்றன. அதாவது, உற்பத்திக்குக் காரணமாக அமையும் உள்ளீட்டுப் பொருள்கள் யாவும் வெளியீட்டுப் பொருள்களாக மாற்றப்படுகின்றன. ஆகவே, ஒரு பொருளின் உற்பத்திக்கு உதவுகின்ற காரணிகளை நிலம், உழைப்பு, முதலீடு என வகைப்படுத்தலாம்.

- ஒரு பொருளை உற்பத்தி செய்வதில், இம்மூன்று காரணிகளும் இணைந்து செயல்படுகின்றன. ஆனால், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கு நான்காவதாக ஒரு காரணி தேவை. அதுதான், அமைப்பு. ஏனெனில், பண்டங்களும் பொருள்களும் தாமாகவே உற்பத்தி செய்யமுடியாது. இவற்றை உற்பத்தி செய்வதற்குப் பொறுப்பு ஏற்கும் ஒரு காரணியே அமைப்பு அல்லது நிறுவனமாகும்.

- உற்பத்திக் காரணிகளை முதல்நிலை உற்பத்திக் காரணிகள் எனவும் மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக்காரணிகள் எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். முதல்நிலை உற்பத்திக்காரணிகளில் நிலமும் உழைப்பும் அடங்கும். இவை இரண்டும் இயற்கையின் கொடை. இவற்றின் துணையின்றி எந்தப் பொருள்களையும் நம்மால் உற்பத்தி செய்யமுடியாது.

- மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக் காரணிகளில் முதலீடும், அமைப்பும் அடங்கும். இவ்விரண்டு காரணிகளும் முதல்நிலை உற்பத்திக் காரணிகளுடன் ஒன்றிணைந்து செயல்படும்போது, மொத்த உற்பத்தியானது அதிகரிக்கிறது.

**நிலம்**

- ‘நிலம்’ என்னும் உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும். நிலப்பரப்பு, நீர், காற்று, கனிமவளங்கள், காடுகள், ஆறுகள் ஏரிகள் கடல்கள், மலைகள், தட்பவெப்பநிலை, காலநிலை ஆகிய அனைத்தும் நிலம் என்ற சொல்லுக்குள் அடங்குகின்றன. ஆகவே, இவையாவும் மனிதனால் உருவாக்கப்படாத பொருள்கள் ஆகும்.

| |
|---|
| குறிப்பிட்ட நிலப்பகுதி அமைந்துள்ள இடத்தில் கிடைக்கும் வளங்களைப் பொருத்து, நிலத்தின் வடிவம் மாற்றமடைகிறது. எடுத்துக்காட்டாக, வேளாண்மை செய்யும்போது, விளைநிலமாகவும் மனை விற்பனை செய்யும்போது, வீட்டு நிலமாகவும் மாறுகிறது. |

**நிலத்தின் சிறப்பியல்புகள்**

**1. நிலம் இயற்கையின் கொடை**

- மனிதன் மற்ற உற்பத்திக் காரணிகளைப் பெறுவதற்காக மனிதன் முயற்சி செய்கிறான். ஆனால் நிலம் என்ற உற்பத்திக் காரணியைப் பெறுவதற்கு அவன் எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. நிலமானது மனித உழைப்பினால் உருவானதன்று. மாறாக, அது மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே என தோன்றியதாகும்.

**2. நிலத்தின் அளிப்பு நிலையானது**

- நிலத்தின் மொத்த பரப்பளவையும் எந்த மாற்றத்திற்கும் உட்படுத்த இயலாது. மனிதன் மேற்கொள்ளும் முயற்சியால் நிலத்தின் அளவை அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியாது. நிலத்தின் மேற்பரப்பிலும் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. நிலத்தின் செழிப்பை உயர்த்த முடியுமே தவிர, அதன் அளவை மாற்ற முடியாது. எனவே நிலத்தின் அளிப்பு என்றென்றும் நிலையானது.

**3. நிலம் அழிவில்லாதது**

- மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பண்டங்களும் அழிந்து போகக் கூடியவை. ஆனால் நிலம் அழிவில்லாதது. நிலத்தின் அளிப்பு என்றும் மாறாததாக, அழிவற்றதாக உள்ளது.

4. **நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி**

- பண்டங்களை உற்பத்தி செய்திட நிலம் ஒரு முக்கியக் காரணியாகும். நாம் செய்கின்ற எந்த ஓர் உற்பத்திப் பொருளுக்கும் நிலமே அடிப்படையாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை அளிக்க உதவுகிறது. வேளாண்மை மூலம், பயிர்களை விளைவிக்க உதவுகிறது.

5. **நிலம் இடம் பெயரக் கூடியதன்று**

- நிலத்தை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. உதாரணமாக, இந்தியப் பரப்பின் எந்த ஒரு பகுதியையும் வேறு நாட்டிற்கு இடம் பெயரச் செய்ய இயலாது.

6. **நிலம் ஆற்றல் வாய்ந்தது**

- மனிதனால், அழிக்க முடியாத ஆற்றல்கள் சிலவற்றை நிலம் கொண்டுள்ளது. இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் நிலத்தின் செழிப்புத் தன்மையில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் அதனை முழுமையாக அழித்தல் இயலாது.

7. **நிலம் செழிப்புத் தன்மையில் மாறுபடும்**

- நிலம், அதனுடைய செழிப்புத் தன்மையின் அடிப்படையில் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அதனால் தான் நிலத்தின் உற்பத்தித் திறன் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஓரிடத்தில் அதிக உற்பத்தி இருந்தால் மற்றொரு இடத்தில் உற்பத்தி குறைவாக இருக்கும். நிலம் என்பது இயற்கையின் நன்கொடை. தொடக்க நிலையில் நிலத்திடமிருந்து நாம் பெறுவது ஒன்றுமில்லை. இருப்பினும், உற்பத்திக்காகப் பயன்படும் நிலம் போதுமானதாக இருப்பதில்லை. எனவே எங்கெல்லாம் நிலத்தின் மதிப்பு குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் பற்றாக்குறையைப் பொறுத்தே உற்பத்தி செய்யும் பொருள் சந்தையில் விலை பெறுகிறது.

## உழைப்பு (Labour)

- உற்பத்தியில், மனித உழைப்பு ஓர் உள்ளீடாகும். வேலையினால் ஏற்படும் துன்பத்தைக் கருதாமல் கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு என ஆல்பிரட் மார்ஷல் உழைப்பிற்கு விளக்கமளிக்கிறார்.

| |
|---|
| ஆடம்ஸ்மித் ''பொருளியலின் தந்தை'' என அழைக்கப்படுகிறார். இவரது கோட்பாடு, செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட 'செல்வ இலக்கணம் ஆகும்.' நன்னெறி கருத்துக் உணர்வுக் கொள்கை,'' நாடுகளின் செல்வமும், அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் ஓர் ஆய்வு'' (1776) என்பன, அவரின் சிறந்த இரு படைப்பு நூல்கள். |

**உழைப்பின் சிறப்பியல்புகள்**

- மற்ற உற்பத்திக் காரணிகளோடு ஏற்படும், உழைப்பு அழியக்கூடியதாக உள்ளது. அதாவது உழைப்பைச் சேமித்து வைக்க இயலாது. வேலையில்லாத தொழிலாளியின் உழைப்பு. அவர் வேலை செய்யாத நாளில் இழக்கப்படுகிறது. உழைப்பைத் திரட்டவோ அடுத்த நாள் தள்ளிப்போடவோ இயலாது. அதனை ஒருமுறை இழந்தால் மீண்டும் திரும்பப் பெற இயலாது.

  ❖ உற்பத்தியில் உழைப்பு என்பது ஓர் செயற்படு காரணியாகும். நிலமோ, மூலதனமோ உழைப்பும் இல்லாமல் அதிக உற்பத்தியை அளிக்க இயலாது.
  ❖ உழைப்பு ஒரே சீரானதல்ல. திறமையும் பயிற்சியும் நபருக்கு நபர் மாறுபகின்றன.

- ❖ உழைப்பை, உழைப்பாளரிடமிருந்து பிரிக்க இயலாது.
- ❖ உழைப்பு இடம் பெயரக்கூடியது. குறைந்த ஊதியம் பெறுதைக் காட்டிலும்அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதற்காக, மனிதர்கள் ஓரிடத்திலிருந்துமற்றொர் இடத்திற்கு இடம் பெயர்கிறார்கள்.
- ❖ தனியாக உழைக்கும் உழைப்பாளரிடம் பேரம்பேசும் ஆற்றல் குறைவு, தமக்கு வேலை அளித்தவரிடம் தம் உழைப்புக்கான கூலியை உயர்த்த வேண்டுமென்றோ பணிபுரியும் இடத்தை மேற்படுத்த வேண்டுமென்றோ போராட முறையாது. தொழிலாளிகள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து தொழிற்சங்கம் அமைத்துப் போராடுவதன் மூலம் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கிறது.

**வேலை பகுப்பு முறை**

- வேலை பகுப்பு முறையை, ஆடம்ஸ்மித், தனது "நாடுகளின் செல்வமும்" அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும், என்ற நூலின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார். ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலைப்பகுப்பு முறை எனப்படும். அதாவது, பல்வேறு கட்டங்களிலும் ஒரே தொழிலாளி ஈடுபடாமல், அவற்றைப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு கட்டப்பணியையும் ஒரு தொழிலாளி மேற்கொள்ள வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- ஒரு தையல்காரர் ஒரு சட்டையை முழுமையாகத் தைத்து உருவாக்குவதில் தையல்காரர் மட்டுமே ஈடுபடுகிறார். ஆனால், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில் துணிகளை வெட்டுதல், உடல்பகுதி துணிகளைத் தைத்தல், கைப்பகுதிகளைத் தைத்தல், பொத்தான் வைக்கும் பகுதிகளைத் தைத்தல் போன்ற ஒவ்வொரு பணிகளையும் தனித்தனி உழைப்பாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக, அனைத்து பகுதிகளையும் இணைத்துச் சிலர் தைக்கின்றனர். இந்நிலையில் அத்துணி முழுமையான ஒரு ஆடையாக உருவாகிறது.

**வேலைப்பகுப்பு முறையின் நன்மைகள்**

- உழைப்பாளி ஒருவர், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால், அந்த வேலையில் திறமையுடையவராக ஆகிறார்.
- இம்முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழி வகுக்கிறது. உதாரணம் கம்பியில்லாத் தந்தியின் கண்டுபிடிப்பு.
- காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைப்பகுப்பு முறையின் தீமைகள்**

- தொழிலாளி, ஒரே வேலையைத் திரும்ப, திரும்ப செய்வதால், சுவையற்ற, களிப்பற்ற, தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழக்கிறது.
- ஒரு பகுதி பணியினை மட்டும் ஒரு தொழிலாளி மேற்கொள்வதால், அவன் குறுகிய தேர்ச்சியை மட்டுமே பெறுகிறான். இதனால் வேலை வாய்ப்பின்மை பெருகும் நிலை உருவாகிறது.
- இம்முறை, கைவினைப் பொருட்களின் வளர்ச்சியினைப் பாதிக்கின்றது. ஒரு தொழிலாளி, ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மனநிறைவினைப் பெறுவதில்லை.

**மூலதனம் (Capital)**

- மூலதனம் என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். எளிமையாகக் கூறினால், மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் என்றும் மூலதனத்தைக் கூறலாம்.

மார்ஷலின் கருத்துப்படி,''இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக் கூடிய பிற வகைச் செல்வங்களே மூலதனம் ஆகும்.''

**மூலதனத்தின் வடிவங்கள்**

1. பரும்பொருள் மூலதனம் (அல்லது) பொருட்சார் மூலதனம். (எ.கா.) இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை
2. பணமூலதனம் அல்லது பணவியல் வளங்கள் (எ.கா.) வங்கி வைப்புகள், பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்றவை.
3. முனித மூலதனம் அல்லது மனிதத் திறன் வளங்கள் (எ.கா.) கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள்.

**மூலதனத்தின் சிறப்பியல்புகள்**

- ❖ மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி
- ❖ மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது
- ❖ இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இன்றியும் உற்பத்தி நடைபெறும்.
- ❖ மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது
- ❖ இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது
- ❖ மூலதனம் ஆக்கமுடையது
- ❖ மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்
- ❖ மூலதனத்தை ஈடுபடுத்துவதன் நோக்கம், எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.

**தொழில் முனைவோர் (அல்லது) தொழிலமைப்பு (Entepreneur)**

- தொழில் முனைவோர், எனப்படுபவர் பல உற்பத்திக் காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதம்) ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் ஆவார். அக் காரணிகளைச் சரியான அளவிலும், முறையிலும் தொடங்கி, இடர்ப்பாடுகளை ஏற்று உற்பத்தி அதிகரிக்க முயல்பவரே தொழில் முனைவோர் ஆவார்.

- தொழில் முனைவோர்,'தொழில் அமைப்பாளர்' எனவும் அழைக்கப்படுகிறார். தற்காலத்தில், தொழில் முனைவோர்,''சமுதாய மற்றும் காணும் முகவர்'' என அழைக்கப்படுகிறார்.

- இவர் சமுதாய விருப்பமுள்ள உற்பத்தியைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய் நலம் மேம்படவும் காரணமாகிறார்.

**தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்**

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்
- புதுமைகளை உருவாக்குதல்
- வெகுமதி செலவைத் தீர்மானித்தல்

இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.

## 7ம் வகுப்பு- தொகுதி -3
## அலகு 1- வரி மற்றும் அதன் முக்கியத்துவம்

**அறிமுகம்**

அரசு, சமூக நலத்திற்காகப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்கிறது. அவற்றை நிறைவேற்றுவதற்கு வருவாய் தேவைப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில், வருவாயைப் பெருக்குவதற்கான பல்வேறு வளங்கள் அரசிடம் உள்ளன. அவற்றுள் முதன்மையாகச் கருதப்படுபவை: வரிகள், கட்டணங்கள், விலைகள், குறிப்பிட்ட மதிப்புகள், ரா.்.பில் திட்டம் போன்றவை. மற்ற நாடுகளைப் போலவே, இந்திய நாட்டிலும் வருவாய் ஈட்டுவதில் வரிகள் இன்றியமையாத இடம்பெறுகின்றன.

**வரி விதிப்பு**

வழக்கமாக அரசால் விதிக்கப்படும் வரியையே 'வரிவிதிப்பு' என்னும் என்பது வருமானம், முதலீட்டால் பெறும் ஆதாயம், சொத்து போன்ற அனைத்து வகைக்கும் விதிக்கப்படும் வரியைக் குறிக்கும். வரி விதிப்பு என்பது, பெயராகவே செயலாகவோ இருக்கலாம். ஆயினும், அது செயல்பாட்டையே குறிக்கிறது. அச்செயலால் விளையும் வருவாயையே நாம் 'வரிகள்' என்கிறோம்.

**வரிகள்**

வரி செலுத்துவோர், எவ்வித நேரடியான பலனையும் எதிர்பார்க்காமல் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துபவையே வரிகள் ஆகும். பேராசிரியர் சேலிக்மனின் கூற்றுப்படி "வரிகள் என்பது ஒருவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயப் பங்களிப்பாகும். இதில், பெறப்பட்ட சிறப்புச் சலுகைகள் குறிப்பிடப்படுவதில்லை. இப்பங்களிப்பின் மூலம், பொது நலத்திற்கோ அரசு மேற்கொள்ளும் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**வரிகள் விதிக்கப்படுவதற்கான காரணங்கள்**

ஒவ்வொருவரும் சட்டத்திற்கு உட்பட்டு, வரி செலுத்த கடமைப்பட்டுப்பட்டுள்ளார்கள். வரியாகச் செலுத்தப்படும் மொத்தத் தொகையும் அரசுக் கருவூலத்தில் இருப்பு வைக்கப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட வரிப்பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பதையும் வரவு செலவுத் திட்டத்தை எவ்வாறு நிர்ணயிப்பது என்பதையும் அரசே தீர்மானிக்கிறது. வரி செலுத்துவது என்பது, ஒருவரின் தனிப்பட்ட விருப்பம் அன்று; மாறாக, ஒருவர் தாம் ஈட்டும் வருமானம், வருமான வரம்பிற்கு உட்பட்டதாயின் வரி செலுத்த வேண்டும். வருமான வரி செலுத்துதல், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். அதிகமாகப் பெறப்படும் வரிகள், மேன்மேலும் பல நலத்திட்டங்களைச் செயல்படுத்த அரசுக்கு உதவுகின்றன.

**வரி விதிப்புக் கோட்பாடு:**

வரி விதிப்புக் கோட்பாடுகள், இன்றைய காலகட்டத்திலும் வரிக் கட்டமைப்புக்கான அடிப்படையை உருவாக்குகின்றன.

**ஆடம் ஸ்மித்தின் நால்வகையான வரிவிதிப்புக் கோட்பாடுகள்:**
1. சமத்துவ விதி
2. உறுதிப்பாட்டு விதி
3. வசதி விதி
4. சிக்கன விதி

**1. சமத்துவ விதி:** மக்கள் தத்தமது வசதிக்கேற்ற வகையில் செலுத்துவதற்காக அரசு வரி விதிக்கும் முறைகளுள் ஒன்று, சமத்துவ விதியாகும். இதனால், அனைவரும் சமமாக வரி செலுத்த வேண்டும் என்பது பொருளன்று; மாறாக, மக்கள்மீது சுமத்தப்படும் வரியானது, எளிமையாகவும் நியாயமாகவும் இருக்க வேண்டும் என்பதையே இவ்வதியே விளக்குகிறது.

**2. உறுதிப்பாட்டு விதி:** வசூலிக்கப்படும் வரியின் மூலம், வரி செலுத்துவோர்க்கு ஓர் உறுதிப்பாட்டுத் தன்மையை, இவ்விதி உருவாக்குகிறது. பொருளாதார வளத்தை மேம்படுத்துகிறது. ஏனெனில், இவ்விதியின் மூலம், பொருளாதாரத்தில் ஏற்படும் அனைத்து வீண் செலவுகளும் தவிர்க்கப்படுகின்றன.

**3. வசதி விதி:** வரி செலுத்துவோர்க்கு அதிகபட்ச வசதிகளை வழங்கும் வகையில், வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. வரி செலுத்துவோர், தாம் செலுத்தும் வரியின் மூலம், குறைந்தபட்ச அளவிலேயே துன்பப்படுவர் என்பதை எப்போதும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

**4. சிக்கன விதி:** வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்பட வேண்டும். வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் அரசுக் கருவூலத்தின் இருப்பில் வைக்கப்பட வேண்டும்.

**வரி விதிப்பு வகைகள்:**

வரி விதிப்பில் மூவகை உள்ளன. அவையாவன:

1. விகிதாச்சார வரி (Propotional tax)
2. வளர் வீத வரி (Progressive tax)
3. தேய்வு வீத வரி (Regressive tax)

**விகிதாச்சார வரி:** வருமான அளவைப் பொருட்படுத்தாமல், ஒரே மாதிரியாக வரி விதிப்பது, விகிதாச்சார வரி ஆகும். வருமான விகிதத்திற்கேற்ப, வழி விகிதமும் மாறுபடும்.

எடுத்துக்காட்டாக, வருமானத்திறக்கு 5% வரி விகிதம் விதிக்கப்படுகிறது. ஒருவர்,ரூபாய் 1000 வருமானம் ஈட்டுகிறார் எனில், அவர் ரூபாய் 50/- செலுத்த வேண்டும். மற்றொருவர்,ரூபாய் 5000 வருமானம் ஈட்டுகிறார் எனில், அவரும் ரூபாய் 50/- செலுத்த வேண்டும். சுருங்கக் கூறின், விகிதாச்சார வரி என்பது, வரி செலுத்துபவர்களின் வருமான வரி விகிதத்தை மாற்றாமல் விட்டுவிடுகிறது.

**வளர்வீத வரி:** ஒருவரின் வருமானம் அதிகரிக்கும்போது, அதற்கேற்ப வரி விகிதமும் அதிகரிப்பது, வளர்வீத வரி ஆகும். எடுத்துக்காட்டாக, வளர்வீத வரி ஆகும். எடுத்துக்காட்டாக, ஒருவரின் ஆண்டு வருமானம் ரூபாய் 1000 எனில், அதற்கான வரி விகிதம் 10% ஆகவே, அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 100 ஆகும். இதனைப் போலவே, மற்றொருவரின் வருமானம் ரூபாய் 10,000 எனில், அவருக்கு விதிக்கப்படும் வரி விகிதம் 25%. அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 2,500/-. வேறொருவர் ரூபாய் 1,00,000 வருமானம் பெற்றால், வரி விகிதம் 50% எனில், அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 50,000% ஆகவே, வளர்வீத வரியானது, வருமானம் அதிகரிக்க, அதிகரிக்க வரி விகிதமும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதை விளக்குகிறது.

**தேய்வு வீத வரி:** அதிகமாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் ஒரே மாதிரியாக விதிக்கப்படும் வரி, தேய்வு வீத வரியாகும். இதனால், அதிக அளவு வருமானம் ஈட்டுபவர்களைக் காட்டிலும், குறைந்த அளவு வருமானம் ஈட்டுபவர்கள் அதிக வரி விகிதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய தேய்வு வீத வரியானது, வளர்வீத வரிக்கு எதிரானதாக உள்ளது.

**வரியின் முக்கியத்துவம்:**

வரிகள் இல்லையெனில், சமுதாய நலத்திற்குக் தேவையானவற்றைச் செய்ய அரசால் இயலாது. அரசுக்கு வரிகள் மிகவும் இன்றியமையாத வளங்களாக உள்ளன. ஏனெனில், வசூலிக்கப்பட்ட வரிப்பணம் பின்வரும் சமுதாய நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**1. நல்வாழ்வு**

சுகாதார நலவாழ்வுக்காக செலவழிக்கப்படும் தொகை, வரிப்பணத்தில் இருந்தே பெறப்படுகிறது. வரிகள் இலலையெனில், இத்தகைய செயல்கள் நடைபெறுவது கடினம். சமூக நல்வாழ்வு, மருத்துவ ஆய்வு, சமூக நலப் பாதுகாப்பு போன்றவற்றிற்காக வரிப்பணத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுகிறது.

**2. கல்வி**

அரசுக்குச் செலுத்தப்படும் வரிப்பணத்திலிருந்து அதிக அளவிலான தொகை, கல்விக்காகச் செலவிடப்படுகிறது. மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் கல்வியை மையப்படுத்துவதற்கும் அரசு அதிக முதன்மை அளிக்கிறது.

**3. ஆட்சியர் நிர்வாகம்**

அரசின் நிர்வாக அமைப்புகள் நன்முறையில் இயங்கினால்தான், ஆட்சியும் நன்முறையில் இயங்கும். நிர்வாக அமைப்புகள் சரியாக இயங்கவில்லையெனில், பொருளாதார வளர்ச்சியில் அவை, மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே, நன்முறையில் நிர்வகிக்கும் ஓர் அரசு, தான் வசூலிக்கும் வரிப்பணத்தை, நாட்டின் நலனுக்காகச் சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.

**உள்கட்டமைப்பு மேம்பாடு, போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற பிற பிரிவுகள்:**

அரசு, தான் வசூலிக்கும் வரிப்பணத்தைச் சமூக நலத்திட்டங்களுக்காகச் செலவு செய்கிறது. இது மட்டுமின்றி, மக்கள் நலன் காக்கும் வகையில் பாதுகாப்பு, அறிவியல் ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்குகிறது.

**நேர்முக வரி**

நேர்முக வரி என்பது தனியாளோ, நிறுவனமோ நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதைக் குறிக்கும். வரி செலுத்துபவர், பல்வேறு காரணங்களுக்காக அரசுக்கு நேர்முக வரியைச் செலுத்துகிறார். எடுத்துக்காட்டாக, உண்மையான சொத்து வரி,வருமான வரி அல்லது உறுதிமொழிப் பத்திரங்களின் மீதான வரி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மத்திய வருமானச் சட்டம் 1963ன்கீழ் ‘நேர்முக வரிகளுக்கான மத்திய வருவாய் வாரியம்’ என்னும் பெயரில் தனி வாரியம் (CBDT) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

பிற நேர்முக வரிகள் பின்வருமாறு

**நிறுவன வரி**

நிறுவனங்கள், அலுவகங்கள் ஆகியவை ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்படும் வரியே நிறுவன வரியாகும். காப்புரிமை, வட்டி, இந்தியாவிலுள்ள மூலதனச் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் பெறும் இலாபம், தொழில்நுட்பப் பணிகளுக்காகவும் பங்கீடுக்காகவும் (ஈவுத்தொகை) பெறப்படும் கட்டணங்கள் ஆகியவற்றின் மீது வரி விதிக்கப்படுகிறது.

**சொத்து வரி:**

ஒருவர் வைத்துள்ள சொத்துக்களின் மதிப்புக்கு ஏற்ப விதிக்கப்படும் வரி, சொத்துவரி ஆகும். ஒவ்வோர் ஆண்டும் நடைமுறையிலுள்ள சந்தை மதிப்புகளைப் பொருத்து, அதே அளவில் வரி வசூலிக்கப்படுகிறது.

**அன்பளிப்பு வரி:**

ஒருவர் வெகுமதியாக அல்லது அன்பளிப்பாகப் பெறும் பொருள்களின் மதிப்புக்கேற்ப விதிக்கப்படும் வரி, அன்பளிப்பு வரியாகும்.

**சொத்து வரி:**

முன்னோர்கள் சொத்துகளின் மீது விதிக்கப்படும் வரி, சொத்து வரியாகும். இத்தகைய வரிகளை அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. அரசுக்கு நேரடியாக வரி செலுத்தும் ஒருவரின் வருமானம் அல்லது சொத்துகளின் மீது, இவ்வரி விதிக்கப்படுகிறது.

**மறைமுக வரி:**

தொடக்கத்தில், ஒருவருக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமை, மற்றொருவர் மீது மாற்ற இயலும் முறையையே மறைமுக வரி என்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு பொருளை (மகிழுந்து / இரு சக்கர வண்டி போன்றவை) விற்பனை செய்யும் விற்பனையாளர், தொடக்கத்தில் அந்தப் பொருளுக்கான வரிச்சுமையை ஏற்கிறார். அவரிடமிருந்து, அந்தப் பொருளை யார் வாங்குகிறார்களோ, அவர்களே பின்னர் அந்தப் பொருளுக்கான வரிச்சுமை முழுவதையும் ஏற்கிறார்கள். ஆகவே, மறைமுகவரி என்பது, ஒருவரின் வரிச்சுமை மற்றொருவர் மீது சுமத்தப்படுவதைக் குறிக்கிறது. மறைமுக வரிகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

**சேவை வரி:**

சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது, சேவை வரியாகும். சேவையைப் பெறுபவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு, மத்திய அரசுக்குச் செலுத்தப்படுகிறது.

**விற்பனை வரி அல்லது (VAT):**

விற்பனை செய்யப்படும் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி, விற்பனை வரி. இ∴து ஒரு மறைமுக வரியாகும். ஏனெனில், பொருள் விற்பனை செய்பவர் செலுத்த வேண்டிய வரிச்சுமை, அந்தப் பொருளை வாங்குபவர் மீது சுமத்தப்படுகிறது. இதனால், பொருள் விற்பனை செய்பவர், தாம் விற்கும் பொருளின் விலையோடு அதற்குரிய வரியையும் சேர்த்தே விற்பனை செய்கிறார்.

**கலால் ஆயத்தீர்வை வரி:**

மொத்த விற்பனையாளரிடமிருந்தும் சில்லறை விற்பனையாளரிடமிருந்தும் பொருள்களை வாங்குபவர்கள் செலுத்த வேண்டிய வரி, கலால் வரியாகும். இந்தியாவில், இந்த வரியானது மத்திய அரசால் சுமத்தப்படுகிறது.

**பொழுதுபோக்கு வரி:**

மாநில அரசுகளால், பொழுது போக்கிற்காக ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் வரி, பொழுது போக்கு வரியாகும். எடுத்துக்காட்டாக, திரைப்படங்களுக்கான கட்டணங்கள், காணொலி விளையாட்டுகள், மேடை அரங்கேற்ற நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பொழுதுபோக்குப் பூங்காக்கள், விளையாட்டுப் தொடர்பான செயல்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**சரக்கு மற்றும் சேவை வரி (GST):**

பொருள்களின் விற்பனை, உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படுவது, பொருள் மற்றும் சேவை வரியாகும். தேசிய அளவில், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படுகிறது. சரக்கு மற்றும் சேவை மீது விதிக்கப்படும் மறைமுக வரிக்கு மாற்றாக, மத்திய, மாநில அரசுகளால் இவ்வரியானது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சரக்கு மற்றும் சேவை (GST) வரிகளின் வகைகள்**

**1. உள்மாநில பொருள் மற்றும் சேவை வரி**

i.மாநில சரக்கு மற்றும் சேவை வரி

ii.மத்திய சரக்கு மற்றும் சேவை வரி

**2. மாநிலங்களுக்கு இடையேயான சரக்கு மற்றும் சேவை வரி**

i. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி

**சரக்கு மற்றும் சேவை வரி:-**

முந்தைய முறைமுக வரி கட்டமைப்பு மற்றும் அதன் சிரமங்கள் இந்திய வரிவிதிப்பு வரலாறு பண்டைய காலத்திற்குச் செல்கிறது, கௌல்டியர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் கூற்றுப்படி, பண்டைய காலங்களில் வரி விதிக்கப்பட்டு ரொக்கமாகவும், வேறு வகையாகவும் சேகரிக்கப்பட்டது. மறைமுக வரிகளின் நவீன வரலாறு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து உப்பு, சர்க்கரை, வாகன எரிபொருள் போன்றவற்றுக்கு மத்திய கலால் வரி விதிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. படிப்படியாகக் கலால் வரிகளின் அடிப்படை விரிவுபடுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், தேசிய அளவில் மத்திய கலால் வரி வரி மற்றும் மாநில அளவில் விற்பனை வரி ஆகியவை நடைமுறையில் இருந்தன. நீண்ட கால முயற்சிகள் மற்றும் திருத்தங்களுக்கு பிறகு, 2003 ஆம் ஆண்டில் இந்திய மாநிலமான ஹரியானாவில் முதன்முதலில் மதிப்புகூட்டு வரி (VAT)அறிமுக்கப்படுத்தப்பட்டது. அதன் பிறகு, பஞ்சாப், சண்டிகர், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் டெல்லி உள்ளிட்ட 24 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் 2005 இல் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.

மதிப்புக்கூட்டுவரி முன்பு இருந்த விற்பனை வரியை விடப் பெரிய வளர்ச்சியாக இருந்திருந்தாலும், சரக்கு மற்றும் சேவை வரி உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். மேலும், நாட்டின் வரி விதிப்பு முழுமையை உணர்ந்து கொள்வதற்கான தர்க்க அடிப்படையிலான படியாகும். ஆரம்பத்தில் ஒரு முனை மற்றும் தேசிய அளவிலான சரக்கு மற்றும் சேவை வரி (GST) இருக்கும் என முன்மொழியப்பட்டது. இருப்பினும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதி இறுதியாக 2017 ஜூலை-1 முதல் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளது, இதனால் நாட்டின் ஒரு பொருளாதார அமைப்பு ஒரு வரி, ஒரு சந்தை மற்றும் ஒரு தேசத்துடன் உள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்பது நாம் வாங்கும் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி. இது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இது ஒரு வெளிப்படையான வரி நீங்கள் வாங்கும் பொருள்களுக்கான ரசீது கிடைத்தால், பின்வரும் தகவல்களை காண்பீர்கள்.

தயாரிப்பு மதிப்பு =ரூ.100 ரூ. 9

ஊபுளுவு 9%=ரூ. 9 ரூ. 118

மசோதாவில்,GST 18% அது சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநிலத்திற்கும் தனித்தனியாக ரூ. 9க்கு 9% எனவே ரூ.9 மாநில அரசுக்கும், மேலும் ரூ.9 மத்திய அரசுக்கும் செல்லும்.

தமிழ்நாட்டில் ஒரு விற்பனையாளர் ஒரு பொருளை வேறுமாநிலத்தில் வாங்குபவருக்கு விற்றால் (எடுத்துக்காட்டாக கர்நாடாகா), அது மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் என்று அழைக்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தை பொருத்தவரை. மசோதா கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியின் மதிப்பு =ரூ.100

IGST 18%=ரூ.18

மொத்தம் =ரூ. 118

ரூ.18 மத்திய அரசுக்குச் செல்லும் மத்திய அரசு ரூ.9 எடுத்து கர்நாடக அரசுக்கு மேலும் ரூ.9

அனுப்பும் வரி 0 சதவீதம், 12 சதவீதம், 18சதவீதம் மற்றும் 28 சதவீதம் என ஐந்து அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. GST மத்திய அரசால் வசூலிக்கப்பட்டாலும்,பெட்ரோலியப் பொருள்கள், ஆல்கஹால், மின்சாரம் ஆகியவற்றின் மீதான வரி தனித்தனியாக மாநில அரசால் வசூலிக்கப்படுகிறது. மற்றும் காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கையின் அனைத்து அத்தியாவசியப் பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

| சுங்க வரியும் சாலை வரியும் | தூய்மை பாரத வரி |
|---|---|
| அரசால் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். அதற்காக விதிக்கப்படும் வரி, சுங்கம் மற்றும் சாலை வரிகளாகும். எடுத்துக்காட்டாக, நாம் பயன்படுத்தும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவற்றைச் கூறலாம். சாலை/பாலம் வசதிகளின் பராமரிப்புப் பணிக்காகவும் குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும் இவ்வரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. | இந்திய அரசால் இவ்வரி விதிக்கப்படுகிறது. தூய்மை பாரதத்தின் பெயரால் வசூலிக்கப்படும் இவ்வரி, 2015ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கப்பட்டது. இ.்.து அனைத்து வகையான வரிச் சேவைகளுக்கும் பொருந்தும். இதன் வரி விகிதம் 0.5%ஆகும். தற்போது,14%க்கும் மேற்பட்ட சேவை வரி நடைமுறையில் உள்ளது. |

**நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கு இடையிலான வேறுபாடுகள்:**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| வரி செலுத்துவோர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது | ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையை மிக எளிதாக வேறொருவருக்கு மாற்ற இயலும். |
| தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்கள் மீது வரி விதிக்கப்படுகிறது. | பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின் மீது வரி விதிக்கப்படுகிறது. |
| பணவீக்க அழுத்தம் இல்லை | பணவீக்க அழுத்தம் உண்டு. |
| வரித் தாக்கமும் வரி நிகழ்வும் சமமாக உள்ளன. | வரித் தாக்கமும் வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன. |
| நெகிழ்வுத் தன்மை குறைவு. | நெகிழ்வுத்தன்மை அதிகம். |

**வரித்தேவையும் மக்கள் நலத் தேவையும்:**

நிதி நிர்வாகத்திற்கு வருவாயை உயர்த்துவதே, வரி விதிப்பதன் நோக்கமாகும். நிதிப் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகளைச் சமன் செய்ய, விலை மாற்றத்திற்கு உதவுகிறது. நிதி நிருவாக வரலாற்றில், மாநிலங்கள் வரி விதிப்பின் மூலமாகவே பல செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், பொதுமக்களின் பாதுகாப்பு, கல்வி, நலவாழ்வுத் திட்டங்கள், அறிவியல் ஆராய்ச்சி, கலையும், பண்பாடும், பொதுப்பணி, பொதுக் காப்பீடு மேலும் பல பொருளாதார உள்கட்டமைப்புகளுக்காகவும் வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது. ஓர் அரசின் திறனுக்கேற்ப, வரிகளை உயர்த்துவது அதன் 'நிதித்திறன்' என்றழைக்கப்படுகிறது.

செலவுகள், வரி வருவாயை விட அதிகமாகும்போது, அரசு கடன்களைத் திரட்டுகிறது. வாராக் கடன்களைத் திரட்டுவதற்கு, வரிகளிலிருந்து ஒரு பகுதியும் செலவழிக்கப்படலாம். மேலும், நல்வாழ்வுக்கும் பொதுப் பணிகளுக்கும் தேவைப்படும் நிதிகளுக்கு வரிப்பணம் பயன்படுத்தப்படுகிறது. கல்வித் திட்டங்கள், வயதானவர்களுக்கான ஓய்வூதியப் பலன்கள், வேலைவாய்ப்பு இல்லாதோருக்கான ஊக்கத் தொகைகள், பொதுப் போக்குவரத்துகள், ஆற்றல், நீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டுகளுக்கு உரியவை அனைத்தும் பொதுப் பணிகளுக்குள் அடங்கும்.

பண உருவாக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில், ஒப்புறுதிப் பணம் அளிப்பதற்கு அரசு கேள்வி கேட்கும்வரை, அரசின் வருவாய்க்கு வரிகள் தேவைப்படா, நாணய மதிப்பைத் தக்கவைத்தல், சொத்துப் பங்கீடு தொடர்பான பொதுக்கொள்கை வெளியிடுதல், குறிப்பிட்ட சில

தொழிற்சாலைகள் அல்லது குழுக்கள் நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற தனிப்பட்ட வகையில் நன்மை தருவன ஆகியவற்றிற்கு மானியம் அளித்தல் போன்றவை வரி விதிப்பின் நோக்கங்களாகும்.

---

## 8ம் வகுப்பு

## அலகு – 1 பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**அறிமுகம்:**
பணம் ஒரு கண்கவர் பொருள் மட்டுமல்லாமல், ஆர்வத்தை தூண்டக்கூடியதாகும். இது மாணர்களுக்கு பிடித்தமான முக்கிய கூறு. பணத்தின் வரலாறு மற்றும் பணத்தை பல்வேறு காலங்களில் எவ்வாறு வெவ்வேறு வகைகளாகப் பயன்படுத்தப்பட்ட முறை ஒரு சுவாரஸ்யமான கதை, நவீன வடிவங்களில் பணம், வங்கி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

பணம் ஒரு அடிப்படை கண்டுபிடிப்பு. அன்றாட பரிவர்த்தனைகளுக்கு இது எளிதானது. மதிப்பு மிக்க பொருட்கள் மற்றும் சேவைகளை சேமித்து வைத்து எதிர்காலத்தில் செல்வத்தையும், வர்த்தகத்தையும் நாம் பெற முடியும். ”பொது ஏற்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எதனையும் பணம் என்று கூறலாம்” - இராபர்ட்சன்.

**பணத்தின் பரிணாம வளர்ச்சி:**
பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான ”மொனேட்டா ஜுனோ” விலிருந்து பெறப்பட்டது. இது ரோமின் பெண் கடவுள் மற்றும் ரோம் பேரரசின் குடியரசு பணமாகும். இந்தியாவின் ”ரூபாய்” என்ற சொல் சமஸ்கிருத வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. “ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள். இன்று நாம் காகித பணமாகவும், நாணயங்களாகவும் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த பரிணாம நிலைகள் ஒரே இரவில் நடைபெறவில்லை. இந்த நிலைகளை அடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனது.

பணத்தின் பரிணாமம் பல நிலைகளை கடந்துள்ளது. ஆரம்ப மற்றும் பழங்கால நிலைதான் பண்டமாற்று முறையாகும்.

**பண்டமாற்று முறை:**

பண்டைய காலத்தில் பணம் பயன்படுத்தபடாமல் பண்டத்திற்கு பண்டம் பரிமாற்றம் நடைபெற்றதை பண்டமாற்று முறை என்றனர். பண்டமாற்று முறை ஒரு பழைய பரிமாற்ற முறையாகும். பணம் கண்டுபிடிப்பதற்கு முன்பாக இந்த முறை பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டது. மக்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை மற்றொரு பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு பரிமாற்றம் செய்திருக்கிறார்கள். பண்டமாற்று பொருட்களின் மதிப்புப் பற்றி மற்ற குழுக்களுடன் விவாதம் செய்தனர். பண்டமாற்று செயலில் பணத்தின் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு நன்மையாகும்.

**பண்டமாற்று முறையில் சில குறைபாடுகளாவன**
1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. பொருட்களின் பகுபடாமை
4. செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்

**பணத்தின் பல நிலைகள் பின்வருமாறு:**
பண்டப் பணம், உலோக பணம், காகித பணம், கடன் பணம், நிகர் பணம் போன்றவைகள் சமீப கால பணத்தின் வடிவங்கள் ஆகும். காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பணம் பல நிலைகளில் உருவானது.

**பண்டப் பணம் :**
பொதுவாக நாகரீகத்தின் தொடக்க காலத்தில் அனைவராலும் ஏற்கக்கூடிய எந்த பண்டம் பொதுவாக தேவைப்படுகிறதோ அந்தப் பண்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றை பணமாக பயன்படுத்தினர். உரோமம், தோல், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற பண்டங்கள் பொதுவாக பணமாக பயன்படுத்தினர். அந்த வகையான பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குதலை ”பண்டமாற்று முறை” என அழைத்தனர்.

**உலோக பணத்தின் வரலாறு:**
தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற விலை மதிப்பற்ற உலோகங்கள் உலோக பணமாக பயன்படுத்தப்பட்டன. உலோகத்தின் நிலையான எடை மற்றும் துல்லியம் குறிப்பாக தங்கம், வெள்ளி ஆகியவை முத்திரையுடன் பரிமாற்ற கருவியாக செய்யப்பட்டது. அவைகள் வெவ்வேறு பிரிவுகளாக,எளிதாக பரிப்பதற்கும், எடுத்து செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன.

பண்டைய வரலாற்று ஆசிரியரான ஹெரோடோடஸ் கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் உலோக நாணயத்தை கண்டு பிடித்தார். ஆனால் லிடியாவை விட பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.

உலக நாணயங்கள் வெளியீட்டார்களில் சீனா மற்றும் மத்திய கிழக்கு லிடியாவுடன் பண்டைய இந்தியாவும் உள்ளன. இந்தியாவில் கி.மு 6ம் நூற்றாண்டில் முதன் முறையாக மஹாஜனபதங்கள் ஆட்சியில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களை மௌரியர்கள் துளையிட்டு வெளியிட்டனர். இந்திய கிரேக்க குஷாண அரசர்கள் கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தினர். 12வது நூற்றாண்டில் டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணங்களில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துக்களை பொறித்து வெளிட்டனர். தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்களை டாங்கா என்றும், மதிப்பு குறைந்த நாணங்களை ஜிட்டால் என்றும் அழைத்தனர்.

1526 யில் இருந்து முகலாய சாம்ராஜ்யம் முழு சாம்ராஜயத்திற்கான பணவியல் முறையை ஒருங்கிணைத்தும், இந்த சகாப்த பரிணாம பண வளர்ச்சியில் செர்ஷா சூரி, ஹுமாயூனை தோற்கடித்து ஆட்சியில் இருந்த போது 178 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அது “ரூபியா” என அழைக்கப்பட்டது மற்றும் 40 தாமிர துண்டுகள் அல்லது பைசா போன்றவற்றை பயன்படுத்தினர். முகலாய காலம் முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆம் ஆண்டில் முகலாய நாணயத்தை பிரபலப்படுதியது. ஆனால் 1717 ல் முகலாய பேரரசர் பாருக்ஷாயர், ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்தனர். ஆங்கில தங்க நாணங்கள் கரோலினா என்றும், வெள்ளி நாணயங்களை ஏஞ்ஜேலினா என்றும், செம்பு நாணயங்களை கப்ரூன் என்றும் மற்றும் வெண்கல நாணயத்தை டின்னி எனவும் அழைத்தனர்.

**உலோக பணம்**
மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தில் பண்ட பணம், உலோக பணமாக மாறியது. தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்களை எளிமையாக கையாளப்பட்டதால் அவற்றின் அளவு எளிதாக அறிந்துக் கொள்ளப்பட்டது. பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் பெரும் பகுதியில், இவ்வகையான பணம் முக்கிய பங்கு வகுத்தது.

**காகித பணம்**
தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது சிரமமாகவும், ஆபத்தானதாகவுமாக இருந்தது. ஆகையால், காகித பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாக கருதப்பட்டது. தங்கத்தை சேமிப்பதன் அடிப்படையில் ஆரம்பித்த காகித பணத்தின் வளர்ச்சி அந்த சேமிப்புக்கு பொற்கொல்லர்கள் “இரசீது“களை வழங்கினர். பொற்கொல்லர்களின் “இரசீது“ பணத்தின் பொற்கொல்லர்களின் “இரசீது“ பணத்தின் பதிலியாகவும் மேலும் காகித பணமாகவும் மாறியது. காகிதப் பணத்தை கட்டுப்படுத்துவதும், ஒழுங்குபடுத்துவதும் அந்நாட்டின் மைய வங்கியாகும். (இந்திய ரிசர்வ் வங்கி) தற்போது பணத்தின் பெரும்பகுதி முக்கியமாக செலாவணிப் பணம் அல்லது காகிதப் பணம் மத்திய மைய வங்கியால் வெளியிடப்பட்டதாகும்.

**கடன் பணம் அல்லது வங்கிப்பணம்**
காகித பணமும், கடன் பணமும் கிட்டதட்ட ஒரே நேரத்தில் வளர்ந்தது. மக்கள் தங்கள் பணத்தின் ஒரு பகுதியை வங்கியில் வைப்பு தொகையாக வைத்து அந்த தொகையை வசதியாக காசோலை மூலம் திரும்ப பெறலாம். காசோலை (கடன் பணம் அல்லது வங்கிப் பணம்) என்று அழைக்கப்படுகிறது. காசோலை என்பது பணத்தைக் குறிப்பதல்ல. ஆனால் பணத்தின் பணிகளை மேற்கொள்ளும்.

**நிகர் பணம்:**
உண்டியல், கருவூலக பட்டியல், பத்திரம், கடன் பத்திரங்கள், சேமிப்பு பத்திரங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள் பண பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாகும்.

**பணத்தின் சமீபத்திய வடிவங்கள் நெகிழிப் பணம்:**
கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் சமீபத்திய நெகிழிப் பணமாகும். பணமில்லா பரிவர்த்தனை இதன் நோக்கமாகும்.

**மின்னணு பணம்:**
மின்னணுப் பணம் என்பது வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னனு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.

**நிகழ்நிலை வங்கி (இணைய வங்கி):**
நிகழ்நிலை வங்கி அல்லது இணைய வங்கி என்பது வாடிக்கையாளர் அல்லது பிற நிதிநிறுவனங்கள் வலைதளத்தின் மூலம் ஒரு பரந்த நிதிப் பரிவர்த்தனைகளை நடத்தும் ஒரு மின்னனு முறையாகும்.

**மின்வங்கி:**
மின்னணு வங்கியை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (நேகுவு) என்றும் அழைக்கலாம். காசோலை அல்லது ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.

**பணத்தின் மதிப்பு:**
பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும். ஆகையால், இது பண்ட பணிகளின் விலை அளவை சார்ந்திருக்கும். ஆனால் பணத்தின் மதிப்பும் விலையின் அளவும் எதிர்மறை தொடர்புடையது. பணத்தின் மதிப்பு இரு வகைகள்.

பணத்தின் மதிப்பு இரு வகைகள்
1. பணத்தின் அக மதிப்பு
2. பணத்தின் புற மதிப்பு

பணத்தின் அக மதிப்பு என்பது உள் நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தியை குறிக்கும். பணத்தின் புற மதிப்பு என்பது வெளி நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும்.

**பணத்தின் (ரூபாய்) குறியீடு:**
இந்தியா ரூபாய் தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த திரு. உதயகுமார் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது 15- ஜூலை – 2010 அன்று இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**பணத்தின் தன்மை:**
பணத்தின் பொருள் மற்றும் தன்மை குறித்து அதிகப்படியான சர்ச்சைகள் மற்றும் குழப்பங்கள் நிலவுகின்றன. ஸ்டோவ்ஸ்கி (Scitovsky)வின் கருத்து படி ‘‘பணம்’’ என்பது ஒரு கடினமான கருத்தாகும். ஏனெனில் அது வேறுபட்ட துறைகளில் ஒன்றல்ல,மூன்று பணிகளை குறிப்படுகிறது. அவை, ஒவ்வொன்றும் கணக்கீடின் அலகு, மதிப்பின் நிலைகலன்களை குறிக்கிறது. சர்ஜான் ஹிக்ஸ் கூற்றுப்படி,‘‘பணம் அதன் பணிகளால் வரையறுக்கப்படுகிறது. எதுவெல்லாம் பணமாக

கருதப்படுகிறதோ அவை பணமாக பயன்படுத்தப்படுகிறது''. பேராசிரியர்இ வாக்கர் ''எதையெல்லாம் செய்யவல்லதோ. அதுவே பணம்'' என கூறுகிறார்.

பணத்தின் வரையறைகள் அனைத்தும் அதனுடைய செயல்பாட்டைப் பொறுத்தே வரையறுக்கப்பட்டுள்து. சில வல்லுநர்கள்,''பணமாக பிரகடனம் செய்யப்படும் எவையும் பணமாகும்'' என்று பணத்தை சட்டபபூர்வமான சொற்களால் வரையறுத்துள்ளனர் பணம் அனைவரிடமும் பொதுவான ஏற்புத்திறனை பெற்றுள்ளது மற்றும் அவை கடன்களை திருப்பித் தருவதற்கான சட்டபூர்டவமான அதிகாரத்தையும் கொண்டுள்ளது. ஆனால் சட்டரீதியான ஒப்பந்தப் பணத்தை செலுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளை விற்க மறுத்தால், சட்ட ரீதியான பணத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மற்றொன்று, கடன்களை தீர்ப்பதற்கு பணத்தை போல சட்ட பூர்வமான வரையறுக்கப்படாத வேறு சிலவற்றையும் மக்கள் பணமாக ஏற்றுக்கொள்கின்றனர். ஏனெனில் பணம் சுதந்திரமாக பரவக்கூடியதாகும்.

**பணத்தின் பணிகள்:**
பணத்தின் பணிகளை முதன்மை பணிகள், இரண்டாம் நிலை பணிகள் என வகைப்டுத்தப்படுகின்றன.

**முதன்மை அல்லது முக்கிய பணிகள்:**
பணத்தின் முக்கிய பணிகள் பொருளாதாரத்தில் செயல்பட்டு அவை பிரதான பணிகளின் கீழ் வகைப்படுத்தபமுகிறது.

**1. பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை:**
பணம், பண்ட மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தபடுகிறது.

**2. மதிப்பின் அளவுகோல்:**
அனைத்து மதிப்பையும் பணத்தால் அளவிடலாம். பலவகையான பண்டங்கள் மற்றும் இடையில் பரிமாற்ற விகிதத்தை எளிது.

**இரண்டாம் நிலை பணிகள்:**

1. **எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு:**
   ஏதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இன்று ஒரு கடனாளி கடன் வாங்குகிறார். குறிப்பிட்ட தொகையை கூறிய படி, குறிப்பிட்ட காலத்தில் செலுத்துவது கடமையாகும்.

2. **மதிப்பின் நிலை கலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்:**
   சில பண்டங்கள் அழிந்து போகக்கூடியதால், பண்டமாற்று முறையில் சேமிப்பை ஊக்குவிப்பதில்லை. பணத்தின் அறிமுகத்திற்கு பிறகு எதிர்காலத்திற்காகப் பணத்தை சேமித்தார்கள். அது அழிய கூடியதில்லை.

3. **மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி:**
   பணத்தால் தொலைதூர இடங்களுக்கும், வெளி நாட்டிற்கும் பண்டங்களை பரிமாற்றம் செய்ய முடியும். ஆகவே, வாங்கும் சக்தியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அவசியம் என உணரப்பட்டது.

**வரையறுக்கப்பட்ட பணிகள்**

1. கடன் அடிப்படையில் இயக்கப்படுகிறது.
2. மூலதனத்தின் உற்பத்திறன் அதிகரிப்பு
3. நாட்டு வருவாயின் அளவீடு மற்றும் விநியோகம்

பணம் ஒன்று கண்டறியப்படவில்லையெனில் - கற்பனை செய.

**பணவீக்கம் மற்றும்**
**பணவாட்டம்**

- பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து. பணத்தின் மதிப்பு

வீழ்ச்சியடைவதையும் குறிக்கும்

- பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

**வங்கியில் சேமிப்பு மற்றும் முதலீடுகள்:**

**சேமிப்புகள்:**

வருவாயில் நடப்பு நுகர்வுக்கு பயன்படாத ஒரு பகுதி சேமிப்பு என வரையறுக்கப்படுகிறது. அவை தற்போதைய நுகர்வுக்காக பயன்படுத்தப்படாமல் எதிர்கால பயன்பாட்டிற்கு ஒதுக்கி வைக்கப்படுகிறது. ஒரு நபர் பணத்தை சேமிக்க பல வழிகள் உள்ளன. வங்கியில் வெவ்வேறு வகையான கணக்குகளின் மூலம் பணத்தை சேமிக்கலாம்.

**மாணவர்கள் சேமிப்பு கணக்கு**

சில வங்கிகள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கிற மாணவர்களுக்கான சேமிப்பு கணக்குகள் துவக்கியுள்ளனர். இவை நெகிழ்வான விதிமுறைகளுடன் பூஜ்ஜிய இருப்புத் தொகையில் கொண்டது. இதன் முக்கிய அம்சமாகும்.

**சேமிப்பு வைப்பு**

வாடிக்கையாளர்கள் தன்னுடைய நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பிக்கும் கணக்கிற்கு சேமிப்பு கணக்கு எனப்படும். நுகர்வோர், பணம் தேவைப்படும் போது அவர்கள் கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அந்த வைப்பு தொகைக்கு வங்கி பெயரளவு வட்டி அளிக்கிறது.

**நடப்பு கணக்கு வைப்பு**

நடப்பு கணக்குகள் பொதுவாக வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ள நடப்பு கணக்கு உதவுகின்றது.

**நிரந்தர வைப்பு**

நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும், வரும்புவார்கள் நிரந்தர வைப்பை "காலவைப்பு எனவும் அழைக்கலாம். அவை குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

**சேமிப்பின் நன்மைகள்:**

- நீங்கள் விரைவில் நிதி ரீதியாக தனித்து இருக்கலாம்.
- நீங்கள் எந்த எதிர்பாராத செலவுகளைப் பற்றியும் கவலைபட வேண்டியதில்லை.
- நீங்கள் உங்கள் வேலையை இழந்தால், எதிர்காலத்தில் நிதியுதவியாக இருக்கும்.
- உங்கள் சூழ்நிலை மாறினாலும், நீங்கள் தயாராக இருப்பீர்கள்
- நீங்கள் பணி ஓய்வில் வசதியாக இருப்பீர்கள்
- இன்றைய சேமிப்பு, நாளைய பாதுகாப்பு

**மாணவர்களுக்கிடையே சேமிப்பினை ஊக்குவித்தல்:**

- வரி மற்றும் கணக்கியல் பற்றி கற்று கொடுத்தல்.∴.
- வளர்ந்து வரும் பணம் சார்ந்த முடிவுகளில் ஈடுபடுத்துதல்
- உதவித்தொகை விண்ணப்பிக்க ஊக்கப்படுத்துதல்
- வரவு செலவு திட்டம் போடவும், மாணவ கடன்களுக்கு விண்ணப்பிக்கவும் உதவி செய்தல்
- தனிப்பட்ட சேமிப்புக்கு கற்றுக் கொடுத்தல்
- மாணவர்களை சஞ்சாயிகா திட்டத்தை ஆரம்பிக்க ஊக்குவித்தல்

**முதலீடுகள்:**
பல்வேறு முறைகளில் முதலீடு செய்யும் முறைக்கு முதலீடுகள் என அழைக்கப்படுகிறது. அதாவது பணம், நேரம், முயற்சிகள் அல்லது பிற மூலங்களில் ஏதேனும் ஒன்றினைப் பயன்படுத்தி முதலீடு செய்து அதற்கு மாற்றாக எதிர்காலத்தில் வருமானமாக திரும்பப்பெறுவதாகும்.

பல்வேறு முதலீட்டுக் கருவிகளில் முதலீடு செய்யலாம். அவைகள்
1. பங்கு வர்த்தகம்
2. பத்திரங்கள்
3. பரஸ்பர நிதி
4. பண்டங்களின் எதிர்காலம்
5. காப்பீடு
6. ஆண்டுத்தொகை
7. வைப்பு கணக்கு அல்லது வேறு பல பத்திரங்கள் அல்லது சொத்துக்கள்

எந்த ஒரு முதலீட்டுக் கருவிகளிலும் முதலீடு செய்யும் பொழுது சில இடர்பாடுகள் ஏற்பட்டு பணத்தை இழக்கும் நிலை ஏற்பட்டாலும், அதே முதலீட்டின் மூலம் அதிகப் பணத்தை மீளவும் பெறமுடியும் என்பது உண்மையேயாகும். முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் இயல்புடையது.

**பணம் மதிப்பிழப்பு:**
2016 நவம்பர் 8 ஆம் தேதி இந்தியாவில் இந்திய அரசாங்கம் கருப்பு பணத்திற்கு எதிராக அனைத்து ரூ 500 மற்றும் ரூ 1000 நோட்டுக்களை பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தது.

**சேமிப்பு மற்றும் முதலீடுகள் - ஒப்பீடு:**

| ஒப்பீட்டின் அடிப்படை | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|
| பொருள் | சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும். | முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல்முறையை குறிக்கிறது. |
| நோக்கம் | சேமிப்பு குறுகிய கால அல்லது அவசரகால தேவைகளை நிறைவேற்றும் | மூலதன உருவாக்கத்திற்கும், வருவாய்க்கும் முதலீடு உதவுகிறது. |
| இடர்பாடு | குறைந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட அளவு | மிக அதிகம் |
| வருவாய் | இல்லை அல்லது குறைவு | ஒப்பீட்டளவில் அதிகம் |
| நீர்மை நன்மை | அதிக நீர்மை | குறைந்த நீர்மை |

**கருப்பு பணம்:**
கருப்பு பணம் என்பது அரசாங்கத்திற்கு செலுத்தாத எந்தவொரு பணத்தையும் குறிக்கும். நாட்டின் ஒழுங்கு கட்டுபடுத்துகையில் சட்ட விரோதமாக சம்பாதிக்கும் பணம் அனைத்தும் கருப்பு பணமாகும். கருப்பு பண வருவாய்கள் வழக்கமாக மறைமுக பொருளாதார நடவடிக்கை மூலம் பணமாக பெறப்படுவதால் அதற்கு வரியில்லை.

குற்றவாளிகள், கடத்தல்காரர்கள், பதுக்குபவர்கள், வரி ஏய்ப்பவர்கள் மற்றும் சமுதாயத்தில் மற்ற சமூக விரோதிகள் மூலம் கருப்பு பணம் சேர்க்கப்படுகிறது. இந்தியாவில் சட்ட விரோதமாக சந்தையில் கருப்பு பணம் சம்பாதித்து அந்த வருமானத்திற்கு எந்த வரியும் செலுத்துவதில்லை. வெளிநாட்டு வங்கியில் இந்தியர்கள் வைப்புகளாக வைத்துள்ள மொத்த கருப்புப்பணத்தின் இருப்பைக் கண்டறிய முடியாது. நாட்டில் கருப்பு பணம் அதிகரித்து வருவதற்கான அடிப்படை காரணம் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை இங்கு வழங்கப்படுவதில்லை.

**பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள்:**

1. இரட்டை பொருளாதாரம்
2. உண்மை அளவை குறைத்து மதிப்பீட செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
6. ஆடம்பர நுகர்வு செலவு
7. உற்பத்தி முறையில் விலகல்
8. பற்றாக்குறை பணத்தை விநியோகித்தல்
9. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்
10. உற்பத்தி மீதான விளைவுகள்

**கருப்பு பணத்திற்கு எதிராக சமீபத்திய நடவடிக்கைகள்**

1. இந்தியா மற்றும் பிற நாடுகளின் அழுத்தத்தினால் சுவிட்சர்லாந்து உள்ளூர் சட்டங்களில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி சுவிஸ் வங்கி வெளிநாடுகளுக்கு உதவுகிறது.

2. உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் கருப்பு பணத்தை கண்காணிக்க சிறப்பு விசாரணை குழு நியமிக்கப்பட்டது.

3. பண மதிப்பிழப்பு செய்யப்பட்டது.

**கருப்பு பணத்திற்கு எதிராக சில சட்டரீதியான கூட்டமைப்பு**

1. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் 2002.
2. லோக்பால் மற்றும் லோகாயுக்டா சட்டம்
3. ஊழல் தடுப்புச் சட்டம் 1988.
4. வெளிக் கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா (வரி விதித்தல்) – 2015.
5. பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் 1988, 2016 ல் திருத்தப்பட்டது

ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

## பொருளியல்
## அலகு– 2 பொது மற்றும் தனியார் துறைகள்

### அறிமுகம்

இந்தியா சுதந்திரம் அடைந்தபொழுது அடிப்படையில் ஒரு வேளாண்மை பொருளாதார நாடாகவும் பலவீனமான தொழில் துறையை கொண்ட நாடாகவும் இருந்தது. நாட்டில் அதிக அளவில் வறுமை, கல்வியறிவின்மை, வேலையின்மை நிலவியது. இந்தியா மிகவும் மோசமான பொருளாதார மற்றும் சமுதாய அடிப்படை பிரச்சனைகளை எதிர்கொண்டு இருந்தது. இதன் காரணமாக நாட்டை முன்னேற்றுவதில் அரசு ஒரு விரிவான பங்கினை வகிக்க வேண்டிய நிலையில் இருந்தது. எனவே இந்திய பொருளாதாரமானது சமதர்ம அடிப்படையில் இருக்க வேண்டும் என்று இந்தியா கருதியது. தனியார் துறை மற்றும் பொதுத்துறை கைகோர்ப்பதனால் ஒரு நிலையான அதிகபட்ச பொருளாதார வளர்ச்சி அடையலாம் என்றும் நாடு கருதியது. இந்தியாவில் கலப்பு பொருளாதார முறையை பின்பற்றி தனியார் மற்றும் பொது நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பொது மற்றும் தனியார் துறை

சிறிய அல்லது பெரிய, தொழில்துறை அல்லது வர்த்தகம், தனியாருக்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து வகையான வணிக அமைப்புகளும் நம் நாட்டில் உள்ளன. இந்த நிறுவனங்கள் நமது அன்றாட பொருளாதார வாழ்வில் பங்கு கொள்வதால், இவை இந்திய பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக திகழ்கிறது. இந்திய பொருளாதாரம் தனியாருக்கு சொந்தமான மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக நிறுவனங்களைக் கொண்டிருப்பதால், இது ஒரு கலப்பு பொருளாதாரம் என்று அழைக்கப்படுகிறது. இந்திய அரசியல் பொருத்தமான தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் இணைந்து கலப்புப் பொருளாதாரத்தை செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, பொருளாதாரத்தை இரு துறைகளாக அதாவது தனியார்துறை மற்றும் பொதுத்துறை என இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது.

சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் பொதுத்துறை நலனை மேம்படுத்துவதில் பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளுக்கான பணிகள் ஒதுக்கப்படுகின்றன. பொதுத்துறை தொழில்கள் அதன் அரசாங்கத்தின் உரிமையின் கீழ் உள்ளன. அதே நேரத்தில் தனியார் துறை தொழில்கள் தனியார் நபர்களின் உரிமையின் கீழ் உள்ளன. பொதுத்துறை ஒரு பொருளாதாரத்தின் முழு வளர்ச்சியை செயல்படுத்துகிறது. பொதுத்துஜற சேவை நோக்கத்திலும், தனியார் துறை இலாப நோக்கத்திலும் செயல்படுகிறது.

| |
|---|
| கலப்புப் பொருளாதாரம் என்பது முதலாளித்துவம் மற்றும் பொதுவுடமையின் கலவையாகும். |

### பொதுத்துறையின் வரையறை

அரசு, பொது மக்களுக்கு பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள துறை பொதுத்துறை ஆகும். நிறுவனங்கள், முகவர் நிலையங்கள் மற்றும் அமைப்புகள் என முழுவதும் சொந்தமானவையாகவும் அரசாங்கத்தால் நடத்தப்படும், கட்டுப்படுத்தப்படும் மத்திய அரசு, மாநில அரசு அல்லது உள்ளூர் அரசாங்கமாகவும் இருக்கும்.

### பொதுத்துறையின் வரலாறு

1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, அது பலவீனமான தொழில்துறை தளத்தைக் கொண்ட வேளாண்மையை முதன்மையாக கொண்ட நாடாகும். ஆங்கிலேயர்கள் நிறுவிய பதினெட்டு இந்திய போர் தளவாட(Ordnance) தொழிற்சாலைகள் மட்டுமே நாட்டில் இருந்தன. தங்கள் சொந்த பொருளாதார நலனுக்காகவும், துணைக்கண்டத்தை முரட்டுத்தனமாக படைகளைக் கொண்டு ஆளவும், தேசிய ஒருமித்த கருத்து பொருளாதாரத்தின் விரைவான தொழில்மயமாதலுக்கு ஆதரவாக

இருந்தது. மற்றும் இது பொருளாதார வளர்ச்சிக்கு திறவுகோலாக கருதப்பட்டது. அது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி பொருளாதார இறையாண்மையையும் மேம்படுத்தியது.

பம்பாய் திட்டத்தை(1940) கட்டமைப்பதற்கு, அரசாங்கத்தின் தலையீடு மற்றும் ஒழுங்கு முறைகளின் தேவையை நோக்கமாகக் கொண்டு 1948ஆம் ஆண்டு முதல் தொழில்துறை கொள்கை தீர்மானத்தின் அறிவிப்பில் தொழில்துறை வளர்ச்சியின் யுக்திகளை பரந்த வரையறைகளைக் கொண்டு வகுத்தது. அதைத் தொடர்ந்து, மார்ச் 1950இல் அமைச்சரவை தீர்மானத்தால் திட்டக்குழு அமைக்கப்பட்டது மேலும், தொழில்துறை வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் 1951ஆம் ஆண்டில் தொழில்துறை சட்டம் இயற்றப்பட்டது.

பிரதமர் ஜவஹர்லால் நேரு இறக்குமதிக்கு மாற்று தொழில்மயமாக்கலின் அடிப்படையில் ஒரு பொருளாதாரக் கொள்கையை ஊக்குவித்து. கலப்பு பொருளாதாரத்தை ஆதரித்தார். இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கலுக்கு, அடிப்படை மற்றும் கனரக தொழில்களை நிறுவுவது என்று அவர் நம்பினார். இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் (1956-60), 1956ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானமும் நேருவின் தேசிய தொழில்மயமாக்கல் கொள்கையை பூர்த்தி செய்ய பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சியை வலியுறுத்தியது. அவரது பார்வையை ''இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களின் தந்தை'' என்று அழைக்கப்படும் டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி முன்னெடுத்துச் சென்றார். இந்திய புள்ளிவிவர நிபுணர் பேரா.பி.சி.மஹலானோபிஸ் அதன் உருவாக்கத்திற்கு கருவியாக இருந்தார். இது பின்னர் ப்ரீட்மேன் - மஹலானோபிஸ் (Friedman-Mahalanobis Model) மாதிரி என்று அழைக்கப்பட்டது.

1991ஆம் ஆண்டின் தொழில்துறை கொள்கை முந்தைய அனைத்து கொள்கைகளிலிருந்தும் தீவிரமாக வேறுபட்டது. அங்கு அரசாங்கம் பொதுத்துறை முதலீடு செய்ய திட்டமிட்டு தனியார் துறைக்கு அதிக சுதந்திரத்தை அனுமதித்தது. அதே நேரத்தில் இந்தியாவுக்கு வெளியே உள்ள வணிக நிறுவனங்களிலிருந்து அந்நிய நேரடி முதலீட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறு, ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் செயல்படும் பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய பொருளாதாரத்தில் நுழைந்தன. இவ்வாறு, இந்திய பொருளாதாரத்தில் பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

**பொதுத்துறை நிறுவனங்கள்:**

இரண்டு வகையான பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன, அதாவது அரசாங்கத்தின் வசூல் வரி, கடமைகள், கட்டணங்கள் போன்றவற்றால் அவர்கள் திரட்டும் வருவாயின் மூலம் அரசாங்கம் அவர்களுக்கு முழுமையாக நிதியளிக்கிறது. நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் 51%க்கும் அதிகமாக உள்ளது. இது பல்வேறு அமைச்சகங்களின் கீழ் செயல்பட்டு வருகிறது. நிறுவனங்கள் சேவை நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ளன.

இது மிகப்பெரிய துறையாகும், இது மக்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் மேம்பாட்டிற்காக செயல்படுகிறது: அஞ்சல் சேவைகள், இரயில்வே சேவைகள், பாதுகாப்பு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளை குறைந்த செலவில் வழங்குதல், மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை.

**பொதுத்துறையின் உறுப்புகள்:**

**1. அரசுத்துறைகளால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள்**

ஒரு அரசாங்க துறையின் நிர்வாகம் என்பது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் பொதுவானதாகும்.

**எடுத்துக்காட்டு:** தபால் மற்றும் தந்தி, இரயில்வே, துறைமுக அறக்கட்டளை, இந்தியாவிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவை.

**2. கூட்டுத்துறை நிறுவனங்கள்**

இது ஒரு நிறுவன சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் அரசாங்கம் ஒரு பிரதான பங்குதாரராக இருந்து கட்டுப்படுத்தப்படுகிறது.

**எடுத்துக்காட்டு:** இந்தியன் ஆயில் பெட்ரோனாஸ் தனியார் நிறுவனம், இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கிங் நிறுவனம், ரத்னகிரி கேஸ் அண்ட் பவர் தனியார் நிறுவனம், இந்தியன் செயற்கை ரப்பர் நிறுவனம்.

**3. பொதுக் கழகம்**

பொதுக் கழக அமைப்பானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தினால் பொதுக் கழகத்தினை நிறுவுவதே ஆகும்.

**எடுத்துக்காட்டு:** ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (டுஜஊ), ஏர் இந்தியா, இந்திய ரிசர்வ் வங்கி, மின்சார வாரியம்.

**பொதுத்துறையின் நோக்கங்கள்**

- உள்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் விரிவாக்கம் செய்வதன் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களை உருவாக்குதல்.
- வருமானம் மற்றும் செல்வங்களை மறுபகிர்வு செய்வதை ஊக்குவித்தல்.
- வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- சிறிய அளவிலான மற்றும் துணைத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் இறக்குமதிக்கு மாற்றீடை துரிதப்படுத்துதல்.

**தொழில்களை வகைப்படுத்துதல்**

- இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் இந்திய அரசின் 1956ஆம் ஆண்டு தொழிற்கொள்கை தீர்மானத்தின் வாயிலாக அதன் தோற்றத்தை கண்டன. இந்த 1956 தீர்மானமானது தொழில்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துகிறது. அரசுக்கே உரிய சொந்தமான தொழில்கள் **அட்டவணை –A**என குறிப்பிடப்படுகின்றன.
- தனியார் துறை தொழில்கள், மாநிலம் தன் முழுப் பொறுப்பில் தொடங்கும் புதிய அலகுகள் மற்றும் முயற்சிகளுக்கு துணை புரியக்கூடிய தொழில்கள் **அட்டவணை –B** என குறிப்பிடப்படுகின்றன.
- மீதமுள்ள தொழில்கள் தனியார் துறையில் **அட்டவணை –C** என குறிப்பிடப்படுகின்றன.

**பொதுத்துறைகள் பின்வரும் வகைகளாக பிரிக்கப்படுகின்றன.**

1. பொதுத்துறை நிறுவனங்கள், பொருளாதார மேம்பாட்டுக்கு அத்தியாவசிய உள்கட்டமைப்பை வழங்க வேண்டும். இவைகள் முதன்மை பொதுப் பயன்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன. விமான நிறுவனங்கள், கப்பல் போக்குவரத்து, இரயில்வே, மின் உற்பத்தி, தொலைத்தொடர்பு போன்றவையாகும்.
2. பொதுத்துறை நிறுவனங்கள் "கட்டளைப் பொருளாதாரத்தின் அதிகாரங்களை (Commanding heights of the economy) தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக பாதுகாப்பு, வங்கிகள், நிலக்கரி சுரங்கங்கள், எண்ணெய், எ்.கு போன்றவைகளாகும்.
3. பொதுத்துறை ஒரு தொழில்முனைவோர் பங்கினை வகிக்க வேண்டும். அதாவது வேறுவிதமாக கூறினால் இதனை மூலதன தீவிர தொழில்கள் என்றும் அழைக்கலாம். எடுத்துக்காட்டு:

இரும்புத்தாது, பெட்ரோ – வேதிப்பொருள், உரம், சுரங்கம், கப்பல் - கட்டுமானம், கனரக பொறியியல் போன்றவை.
4. அரசின் முற்றுரிமையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் இதில் அடங்கும். தொலைத்தொடர்பு உபகரணங்கள், பாதுகாப்பு உற்பத்தி, இரயில்வே, ரோலிங் ஸ்டாக் போன்றவை.
5. உயர் தொழில்நுட்ப தொழில்களுக்கு மட்டுமே பிரத்தியேகமாக இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் எடுத்துக்காட்டு: அணுசக்தி
6. நுகர்வோர் சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள். எடுத்துக்காட்டு: மருந்து, காகிதம், உணவகம் போன்றவை.
7. நலிவடைந்த தனியார் நிறுவனங்களை கையகப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள். எடுத்துக்காட்டு: ஜவுளி, பொறியியல் போன்றவை.
8. வர்த்தக கழகமாக அமைக்கப்பட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்கள்: எடுத்துக்காட்டு: இந்திய உணவுக் கழகம் (FCI),(CCI) முதலியன.
9. ஆலோசனை மற்றும் பொறியியல் சேவையை வழங்கும் பொதுத்துறை நிறுவனங்கள். எடுத்துக்காட்டு: மெக்கான் நிறுவனம் (MECON)

**நிதி ஆயோக்**

- நிதி ஆயோக் என்பது 65 ஆண்டுகள் பழமையான திட்டக் குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்ட குழுவாகும். அமைச்சகங்களுக்கும், மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்க திட்ட குழுவிற்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இந்த அதிகாரம் தற்போது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- நிதி ஆயோக் அடிப்படையில் ஒரு மதியுரையகக் குழுவாகவும் உண்மையான ஆலோசனைக் குழுவாகவும் 2015 ஜனவரி-1ஆம் தேதியிலிருந்து செயல்பட துவங்கியுள்ளது.

**சமூக பொருளாதார மேம்பாடு**

சமூக பொருளாதார மேம்பாடு என்பது ஒரு சமூகத்தில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையேயாகும். சமூக பொருளாதார மேம்பாட்டை பின்வரும் குறியீடுகள் கொண்டு அளவிடப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), ஆயுட்காலம், கல்வியறிவு மற்றும் வேலைவாய்ப்பின் அளவு போன்றவைகளாகும்.

புதிய "மதியுரையகக் குழு"(Think Tank) எனப்படும் நிதி ஆயோக் (NITI Aayog)என்ற அமைப்பினால் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சமூக துறை முயற்சிகளை ஒருங்கிணைப்பதில் பொருத்தமான தளத்தை உருவாக்க முடியும்.

**சமூக – பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகள்**

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (புனூ) சமூக-பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் துணைபுரிகிறது. தொழில் துறையில், தனியார் மற்றும் பொதுத்துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதம் அதிகரித்துள்ளது. இது அரசின் நிதியை அதிகரிப்பதோடு பொதுச் செலவுகளையும் அதிகரிக்கிறது.

**ஆயுட்காலம்**

2011ஆம் ஆண்டு இந்தியாவின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சராசரி ஆயுட்காலம் ஆண்களுக்கு 65.80 ஆண்டுகள் மற்றும் பெண்களுக்கு 68.33 ஆண்டுகள் ஆகும். பல்வேறு திட்டங்கள் மூலம் அரசாங்கம் அதிக அளவு சுகாதார நடவடிக்கைகளை வழங்குகிறது. ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு சேவை செய்வதற்காக 2018-19 மத்திய வரவு செலவுத் திட்டத்தில் "தேசிய சுகாதார உற்பத்தி திட்டத்தை"(NHPS) அரசாங்கம் அறிவித்தது.

**கல்வியறிவு**

சமூக பொருளாதார வளர்ச்சிக்கு கல்வி திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. அனைவருக்கும் கல்வி இயக்கம்(SSA) இந்திய அரசின் முதன்மை திட்டத்தின் அங்கமாகும். 6-14 வயதுடைய குழந்தைகளுக்கு வாழ்க்கைத் திறன்களுடன் கூடிய இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்குவதற்காக செயல்படுத்தப்பட்டது. கல்வியில் தரத்தின் அளவை அதிகரிப்பதற்காக அனைவருக்கும் இடைநிலை கல்வித்திட்டம் (RMSA), திறன் வகுப்பு(Smart Class) மின்னணு-கற்றல் (E-Learning), இலவச கணினி திறன் வகுப்புகள் மற்றும் சூழல் - நட்பு (Eco-Friendly) கற்பதற்கான இயற்கையான சூழல் வழங்குதல் போன்ற திட்டங்களும் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**வேலைவாய்ப்பு**

வேலை வாய்ப்பானது, முதன்மை துறையிலிருந்து இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக்கு வேலைவாய்ப்பு மாறியுள்ளது என்பது தெளிவாகிறது. அதிக எண்ணிக்கையிலான மக்கள் வேலை தேடி நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்கின்றனர். இதனால் அரசாங்கம் "திறன் நகரம்"(Smart City) திட்டத்தை தொடங்கியது. இது நகரங்களில் மருத்துவமனைகள், பள்ளிகள், வீட்டு வசதிகள் மற்றும் வணிக மையங்கள் போன்ற பல வசதிகளை அளிக்கிறது. வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதற்காக குறைந்த கட்டணத்தில் மின்சார வரிச்சலுகை போன்ற பல சலுகைகளை வழங்குவதன் மூலம் பின்தங்கிய பகுதிகளில் தொழில் துறையை தொடங்க தனியார் துறைகளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. இதனால் வட்டார ஏற்றத்தாழ்வுகளை நீக்குகிறது.

**வீடு, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் வழங்குதல்**

அரசுத் துறையானது வீட்டு வசதிகள், சுத்தமான குடிநீர் வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வழங்குகிறது. சுத்தமான நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதால் நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குகிறது. இது போன்ற வசதிகளை வழங்குவதால், மக்களின் வாழ்க்கை சுழற்சி அதிகரிக்கிறது.

**பொதுத்துறையின் முக்கியத்துவம்**

எந்தவொரு பொருளாதாரத்தின் வளர்ச்சியிலும் பொதுத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இது பின்வரும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

1. **பொதுத்துறை மற்றும் மூலதன உருவாக்கம்:**
   திட்டமிடல் காலத்தில் சேமித்து, முதலீடு செய்வதில் பொதுத்துறையின் பங்கு மிக முக்கியமானதாக விளங்கியது.

2. **பொருளாதார மேம்பாடு:**
   பொருளாதார வளர்ச்சி முக்கியமாக தொழில்துறை வளர்ச்சியைப் பொறுத்தது சிறு தொழில்களுக்கு மூலப்பொருட்களை வழங்க இரும்பு மற்றும் எ·கு, கப்பல் போக்குவரத்து, சுரங்கம் போன்ற கனரக மற்றும் அடிப்படை தொழல்கள் தேவைப்படுகிறது.

3. **சமச்சீரான வட்டார வளர்ச்சி:**
   பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் ஆலைகளை மாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் அமைத்துள்ளன. இந்த பகுதிகளில் மின்சாரம், குடிநீர் வழங்கல், தன்னாட்சி நகரியம் மற்றும் மனித சக்தி போன்ற அடிப்படை தொழில்துறை மற்றும் குடிமை வசதிகள் இல்லை. பொது நிறுவனங்கள் இந்த வசதிகளை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் இந்த வட்டாரங்களில் உள்ள மக்களின் சமூக – பொருளாதார வாழ்க்கையில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

4. **நாட்டில் உருவாக்கம்:**
   நாட்டில் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க பொதுத்துறை இலட்சக்கணக்கான வேலைகளை உருவாக்கியுள்ளது. 2011ஆம் ஆண்டில் பணியமர்த்திய நபர்களின் எண்ணிக்கை

150 இலட்சம் ஆகும். ஒரு மாதிரி முதலாளியாக பணியாற்றுவதன் மூலம் தொழிலாளர்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பொதுத்துறை அதிக அளவில் பங்களிப்பு செய்துள்ளது.

5. **ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் அந்நிய செலாவணி வருவாய்:**
சில பொது நிறுவனங்கள் இந்தியாவின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு அதிக பங்களிப்பு செய்துள்ளன. மாநில வர்த்தக நிறுவனம் (STC), தாதுக்கள் மற்றும் உலோக வர்த்தக நிறுவனம் (MMTC), இந்துஸ்தான் எஃகு நிறுவனம், பாரத மின்னணு நிறுவனம், இந்துஸ்தான் இயந்திர கருவிகள் போன்றவை ஏற்றுமதி மேம்பாட்டில் மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ளன.

6. **நலிவடைந்த தொழில்களுக்கு பாதுகாப்பு:**
நலிவடைந்த பிரிவு மூடப்படுவதைத் தடுப்பது, பொறுப்பை ஏற்றுக்கொள்வது மற்றும் பலர் வேலையில்லாமல் இருப்பதைத் தடுப்பது, இதுமட்டுமல்லாமல் மூலதனம், நிலம் கட்டடம், இயந்திரங்கள் போன்றவற்றை தேவையற்ற முறையில் மூடுவதை பொதுத்துறை தடுக்கிறது.

7. **இறக்குமதி மாற்று:**
சில பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பாக முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்காகவும், அந்நிய செலாவணியை சேமிப்பதற்காகவும் தொடங்கப்பட்டன. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆணையம் ( முபேஊ), இந்திய எண்ணெய் நிறுவனம், பாரத மின்னணு நிறுவனம் போன்றவை இறக்குமதி மாற்றீடு மூலம் அந்நிய செலாவணியை சேமித்துள்ளன.

| |
|---|
| இந்திய இரயில்வேயானது அதிக அளவில் பணியாளர்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனமாகும். |

**பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடு**

நாட்டை வளர்ச்சியடைய செய்வதற்காக பொதுத்துறையும் தனியார் துறையும் ஒன்றிணைந்து செயல்பாட்டாலும் அவை வெவ்வேறு குறிக்கோள்களையும் நோக்கங்களையும் கொண்டுள்ளன. அவற்றிற்கிடையேயான முக்கிய வேறுபாடுகள் சிலவற்றை இங்கே காணலாம்.

| **வ.எண்** | **பொதுத்துறை** | **தனியார் துறை** |
|---|---|---|
| 1 | தொழில்களின் உரிமையானது அரசாங்கத்திடம் உள்ளது. | தொழில்களின் உரிமையானது தனநபர்களிடம் உள்ளது. |
| 2 | பொதுவருவாய், வருமானம் பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கும் வரியை பொருத்தது | பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வழங்குதல் அல்லது கடன் வாங்குவதைப் பொருத்தது. |
| 3 | பொதுத்துறை தொழிலாளர்களுக்கு முறையான ஊதியத்தை உறுதி செய்கிறது. | தனியார்துறை தொழிலாளர்களை சுரண்டுகிறது. |
| 4 | இது ஒரு சிலர் கைகளிலோ அல்லது பணக்காரர்களிடம் பெரும் செல்வத்தை குவிக்க அனுமதிக்காது. | இது ஒரு சிலர் கைகளில் அல்லது பணக்காரர்களிடம் பெரும் செல்வத்தை குவிக்க அனுமதிக்கிறது. |
| 5 | பொதுத்துறை நிறுவனங்களுக்கு NLC,SAIL, BSNLபோன்றவை உதாரணமாகும். | தனியார் துறை நிறுவனங்களுக்கு TVS Motors,Ashok Leyland, TATA Steel |

| | | |
|---|---|---|
| | | போன்றவை உதாரணமாகும். |
| 6 | வரி ஏய்ப்பு இல்லை | வரி ஏய்ப்பு உண்டு |
| 7 | இது சேவை நோக்கமுடையதாகும் | இது முற்றிலும் இலாப நோக்கம் உடையது |
| 8 | சமூகரீதியாக பின்தங்கிய மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுகிறது. | இது சமூகரீதியாக பின்தங்கிய வர்க்க மக்களை பொருட்படுத்தாது. இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. |

**பொதுத்துறை நிறுவனங்களின் பட்டியல்**

இந்தியாவில், 2017ஆம் ஆண்டைப் பொறுத்தவரை 8-மகாரத்னா தொழில்கள், 16-நவரத்னா தொழில்கள் மற்றும் 74-மினிரத்னா தொழில்கள் உள்ளன. கிட்டத்தட்ட 300 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் (CPSEs) உள்ளன.

**மகாரத்னா தொழில்கள் (MaharatnaIndustries)**

சராசரியாக ஆண்டுக்கு நிகர லாபம் ₹.2500 கோடி அல்லது சராசரி ஆண்டு நிகர மதிப்பு 3-ஆண்டுகளுக்கு ₹.10,000கோடி அல்லது சராசரி ஆண்டு வருவாய் 3-ஆண்டுகளுக்கு ₹.20,000 கோடி (முன்னர் பரிந்துரைக்கப்பட்ட ₹.25,000 கோடிக்கு மாற்றாக). கொண்டுள்ள தொழில்கள் மகாரத்னா தொழில்கள் என்று அழைக்கப்படுகிறது.

- தேசிய அனல் மின் கழகம் (NTPC)
- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆணையம் (ONGC)
- இந்திய இரும்பு ஆலை ஆணையம் (SAIL)
- பாரத மிகு மின் நிறுவனம் (BHEL)
- இந்திய எண்ணெய் நிறுவனம் (LOCL)
- இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL)
- கெயில்(இந்தியா) நிறுவனம் (GAIL)
- பாரத பெட்ரோலிய நிறுவனம் (BPCL)

**நவரத்னா தொழில்கள் (Navratna Industries)**

அறுபது என்ற (நூற்றுக்கு என்ற அளவில்) ஆறு அளவீடுகள் இதில் நிகரலாபம், நிகர மதிப்பு, மொத்த மனிதவள செலவு, மொத்த உற்பத்தி செலவு, சேவைகளில் செலவு, PBDIT(Profit before Depreciation Interest and Taxes) தேய்மானத்திற்கு முன் லாபம், வட்டி மற்றும் வரிகள், மூலதனம் பணியமர்த்தல் போன்றவை மற்றும் ஒரு நிறுவனம் முதலில் மினிரத்னாவாக இருந்து அதற்கு முன் அதன் குழுவில் 4 சுதந்திரமான இயக்குநர்கள் இருக்க பெற்றால் அதை ஒரு நவரத்னா நிறுவனமாக மாற்ற முடியும்.

- பாரத மிகு மின் நிலையம் (BHEL)
- இந்திய கொள்கலன் நிறுவனம் (CONCOR)
- இந்திய பொறியாளர்கள் நிறுவனம் (EIL)
- இந்துஸ்தான் இந்தியா நிறுவனம் (HIL)

- இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் (HPCL)
- மகன் அகர் தொலைப்பேசி நிறுவனம் (NALCO)
- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (NLCIL)
- இந்திய ஆயில் எண்ணெய் நிறுவனம் (OIL)
- இந்திய கப்பல் நிறுவனம் (SCI)

**மினிரத்னா தொழில்கள் - 1 (Miniratna Industries -1)**

மூன்றில் ஒரு வருடம் நிகர லாபம் ₹.30 கோடி அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் லாபம் ஈட்டிய தொழிற்சாலையாகும்.

சில மினிரத்னா தொழில்கள் -1, அவை

- இந்திய விமான நிலைய ஆணையம் (AAI)
- பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனம் (BSNL)
- பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனம் (BSNL)
- சென்னை பெட்ரோலிய நிறுவனம் (CPCL)
- இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (ITPO)
- இந்திய மாநில வர்த்தக கழகம் (STCI)

**மினிரத்னா தொழில்கள் - 2 (miniratna Industries -2)**

மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக லாபம் ஈட்டியுள்ள மற்றும் நேர்மறையான நிகர மதிப்பு கொண்ட தொழிற்சாலைகளாகும்.

சில மினி ரத்னா தொழில்கள் -2, அவை

- HMT பன்னாட்டு நிறுவனம்
- இந்திய மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் நிறுவனம் (IMPCL)
- MECON நிறுவனம்
- கனிம ஆய்வு நிறுவனம்
- தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம்
- பாரத பாம்புகள் & அமுக்கிகள் நிறுவனம்.

நவரத்னா என்ற சொல் ஒன்பது விலைமதிப்பற்ற ரத்தினங்களைக் குறிக்கிறது. இது பின்னர், குப்த பேரரசர் விக்ரமாதித்யன் மற்றும் முகலாய பேரரசர் அக்பர் ஆகியோரின் அவையில் இச்சொல்லானது ஒன்பது அறிஞர்களை குறிப்பிடுவதாக அமைந்தது.

**தனியார் துறையின் வரையறை**

தனியார் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு சொந்தமான, அவர்களால் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்படும் ஒரு தேசிய பொருளாதாரத்தின் பிரிவு தனியார் துறை என்று அழைக்கப்படுகிறது. தனியார் துறை நிறுவனங்கள் தனியார் அல்லது பொது வர்த்தக நிறுவனங்களின் அளவுகளின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன. அவை இரண்டு வழிகளில் உருவாக்கப்படுகிறது. அதாவது ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்குவதன் மூலமாகவோ அல்லது எந்தவொரு பொதுத்துறை நிறுவனத்தையும் தனியார்மயமாக்குவதன் மூலமாகவோ உருவாகிறது.

தனியார் துறை என்பது நாட்டின் பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாகும். இது அரசாங்கத்தை விட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் நடத்தப்படுகிறது. பொதுத்துறை பரந்து விரிந்து இருந்தாலும் கூட, தனியார் துறையின் பங்களிப்பு தொடர்ந்து மிகப்பெரியதாக இருக்கிறது.

இது நடுத்தர, சிறிய மற்றும் மிகச்சிறிய அல்லது நுண்ணிய அளவிலான தொழில் வளர்ச்சியால் ஏற்பட்டது.

மேலும் குடிசை மற்றும் கிராமத் தொழில்கள் மற்றும் சிறிய அளவு தொழில்களின் உற்பத்தியின் பங்களிப்பு மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தின் முக்கிய பகுதி ஆகும். தேசிய உற்பத்தியில தனியார் துறையின் பங்களிப்பு பொதுத்துறையை விட அதிகமாக உள்ளது. சாலை, கப்பல் மற்றும் விமான வழி போக்குவரத்து மற்றும் நுகர்வோர் தொழில்களிலும் தனியார் துறை ஆதிக்கம் செலுத்துகிறது.

**முக்கிய தனியார் நிறுவனங்கள்**

- இன்போசிஸ் நிறுவனம்
- ஆதித்யா பிர்லா நிறுவனம்
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரியல் நிறுவனங்கள்
- டாட்டாகுழும நிறுவனங்கள்
- விப்ரோ நிறுவனம்
- இந்துஸ்தான் யூனிலீவர் நிறுவனம்
- ஐசிஐசிஐ வங்கி நிறுவனம்.

**தனியார் துறையின் பணிகள்**

- தனியார் துறையின் முக்கிய செயல்பாடு புதுமை மற்றும் நவீனமயமாதலை உருவாக்குவதாகும். இலாப நோக்கத்தோடு இயங்க கண்டறிவதற்கும், உற்பத்தியின் புதியநுட்பங்களை கண்டுபிடிப்பதற்கும், உற்பத்தி நடவடிக்கைகளை விஞ்ஞான முறையில் நிர்வகிப்பதற்கும் அவர்களை தூண்டுகிறது.
- உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- இருக்கின்ற வணிகங்களை ஊக்குவித்தல், விரிவுபடுத்துதல்
- மனித மூலதன வளர்ச்சியை ஊக்குவித்தல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு குறிப்பாக தொழிலாளர் சந்தையில் பங்கேற்க உதவுதல் மற்றும் சமூக வணிக மற்றும் கூட்டுறவு, உள்ளூர் பரிமாற்ற அமைப்புகள் மற்றும் முறைசாரா கடன் போன்றவற்றை ஊக்குவிப்பதன் மூலம் சமூக வளர்ச்சியை ஊக்குவித்தல்
- சிறு, நுண் மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMME) வழங்குவதன் மூலம் அளிப்பு பக்க நடவடிக்கைகள் மற்றும் தேவை பக்க நடவடிக்கைகளை கோருதல் மற்றும் நகரத்தில் முதலீட்டை ஈர்த்தல்.

இந்தியா ஒரு கலப்பு பொருளாதார நாடாக இருப்பதால், விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு நாட்டில் உள்ள தனியார் துறைக்கு பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது. தொழில்கள், வர்த்தக மற்றும் சேவைத் துறையில் தனியார் துறைக்கு அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட பங்கை நிர்ணயித்துள்ளது. இந்தியாவின் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் துறையான வேளாண்மை மற்றும் பால் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற பிற தொடர்புடைய நடவடிக்கைகள் முற்றிலும் தனியார் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவ்வாறு முழு வேளாண்மைத் துறையை நிர்வகிப்பதிலும், அதன் மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு முழு உணவு விநியோகத்தையும் வழங்குவதில் தனியார் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும், தொழில்துறையின் பெரும்பகுதி மற்றும் இலகுவான பகுதிகளில் ஈடுபட்டுள்ளது. நிலைத்த மற்றும் நிலைக்காத பொருட்கள், மின்னணு மற்றும் மின்சார பொருட்கள், வாகனங்கள், ஜவுளி, ரசாயனங்கள், உணவு பொருட்கள், ஒளி பொறியியல் பொருட்கள் போன்ற பல்வேறு நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. நாட்டின் முன் சமூக மற்றும் பொருளாதார சவால்கள் மிகப்பெரியவை. கட்டமைப்பு மாற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் இலக்குகளை பூர்த்தி செய்ய பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஆகியவை ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

9ம் வகுப்பு
பொருளியல்

## அலகு 1 மேம்பாட்டை அறிவோம் : தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை

**அறிமுகம்**:
நாம் பரவலாக 'மேம்பாடு' என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகிறோம். இது ஒரு குறிப்பிடடத் துறையின் அல்லது ஒரு குறிப்பிட்ட நபரின் மேம்பாட்டைக் குறிக்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பதே அதன் 'பொருளாதார மேம்பாடு' என்று அறியப்படுகிறது. இருப்பினும் இக்கருத்தாக்கத்தின் விளக்கம் தொடர்ந்து மாறிக் கொண்டே இருப்பதும் நபருக்கு நபர் அதன் பொருள் மாறுவதும் தொடர் நிகழ்வாக அமைகின்றது.

**மேம்பாடு பற்றிய பல்வேறு தொலைநோக்கு கருத்துக்கள்:**
ஒவ்வொரு மனிதரும் தங்களின் குறிக்கோள் அல்லது விருப்பத்தை அடைய அவரவர் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறார்கள். அதே போல், ஒரு நாடு எவ்வாறு முன்னேற வேண்டும் என்று மக்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இதற்கான காரணங்களைக் கண்டறிந்து செயல் படுத்தினால் நமது இலக்குகளை அடைவதற்கான வழிகள் நாட்டினை முன்னேற்றத்திற்கு கொண்டு செல்லும். இதுவே மேம்பாடு எனப்படும்.

**மேம்பாடு சொல் பல்வேறு மக்களால் பல்வேறு விதமாக உணரப்படுகிறது என்பதை கற்பனை செய்க.**

மேலே உள்ள வரைபடத்தை நீங்கள் கவனித்தால் வருமானம் தவிர மக்கள் அவர்களுடைய சுயமான வளர்ச்சியை நாடுவதை அறியலாம். உயர்ந்த வருவாய், தரமானக் கல்வி, நல்ல உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை, நிலைத்தச் சமவாய்ப்பு போன்றவை வாழ்க்கைத்தரத்தில் மேம்பாட்டைக் குறிக்கிறது.

பொருளாதார மேம்பாடு என்பது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியையும். புதிய தொழில் நுட்பங்களோடு முறையோடு ஏற்றுக் கொள்வதாகும். "பொருளாதார மேம்பாடு" என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நிலையான நாட்டின் வளர்ச்சியையும் குறிக்கிறது.

**பொருளாதார மேம்பாட்டிற்கான குறியீடுகள்:**
நிகர நாட்டு உற்பத்தி (NNP), தனிநபர் வருமானம்ட (PCI) வாங்கும் திறன் சமநிலை (PPP), மனித வள மேம்பாட்டுக் குறியீடு (HDI) ஆகியவை பொருளாதார முன்னேற்றத்தின் முதன்மையான குறியீடுகளாகும்.

| |
|---|
| ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும். |

**நிகர நாட்டு உற்பத்தி:**
நிகர நாட்டு உற்பத்தி தேசிய உற்பத்தியின் உண்மையான அளவாக கருதப்படுகிறது. இது நாட்டு வருமானம் என்றும் அறியப்படுகிறது. தனிநபர் வருமான உயர்வு எப்போதும் மொத்த உண்மையான உற்பத்தியின் உயர்வு என்று பொருள்படும். எனவே, தனிநபர் வருமானமே நாட்டின் மேம்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு ஆகும்.

நாடுகளின் மேம்பாட்டை அளவிடுவதற்கு வருமானம் மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதிக வருமானம் கொண்ட நாடுகள் குறைவான வருமானத்தைக் கொண்ட நாட்டைவிட அதிக வளர்ச்சியடைந்த நாடாக கருதப்படுகின்றன. எனவே, நாட்டு வருமானமே பொருளாதார மேம்பாட்டின் குறியீடாகக் கருதப்படுகிறது.

**தலா வருமானம்:**
நாடுகளின் வளர்ச்சியினை ஒப்பிட, மொத்த வருவாயைக் கணக்கிடுவது ஒரு பயனுள்ள நடவடிக்கையாக இருக்க முடியாது. ஏனெனில், ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு வித மக்கள் தொகை காணப்படுகிறது. நாட்டின் மொத்த வருவாயை ஒப்பிட்டு சராசரி தனிநபர் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளதென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டிலுள்ள மக்களைவிட வேறொரு நாட்டில் உள்ள மக்களிடையே அதிக வருமானம் உள்ளதா? எனவே. நாட்டின் தலா வருமானத்தை கணக்கிட நாட்டின் மொத்த வருமானத்தை நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க வேண்டும். சராசரி வருவாயை தலா வருமானம் என்று அழைக்கிறோம். அனைத்து நாடுகளின் தனிநபர் வருமானத்தின் கணக்கீடுகள் சர்வதேச அளவில் ஒப்பிடுவதற்காக அமெரிக்க டாலரில் மட்டுமே கணக்கிடப்படுகிறது.

தலா வருமானம்:
உலக வங்கியின் அறிக்கையின்படி, நாடுகளின் வருமான அளவீடுகள் கீழ்க்கண்டவாறு புதியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (2017 – 18)

| வ.எண் | நாடுகளின் வகைகள் | தலா வருமானம் (அமெரிக்க டாலரில்) |
|---|---|---|
| | | < 1005 |
| 2. | குறைந்த நடுத்தர வருவாய் | 1006 – 3955 |
| 3. | உயர் நடுத்தர வருவாய் | 3956 – 12,235 |
| 4. | உயர்ந்த வருவாய் | >12,235 |

**வாங்கும் திறன் சமநிலை:**
வாங்கும் திறன் சமநிலை என்பது ஒரு நாட்டினுடைய நாணங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, ஒரு சந்தையில் அமெரிக்க டாலரில் வாங்குவதற்கேற்றவாறு, உள்நாட்டு சந்தையில் அதே அளவிலான பொருட்களையும் வாங்குவதற்குத் தேவைப்படுகிறது.

வாங்கும் திறன் சமன்பாட்டின் நுட்பம் என்பது இரு நாடுகளின் இரண்டு நாணயங்களுக்கிடையேயான பரிமாற்றம், அந்தந்த நாடுகளில் உள்ள இரண்டு நாணயங்களின் துல்லியமான வாங்கும் திறனை வெளிப்படுத்தத் தேவை என்பதை மதிப்பிடுவதற்கு உதவுகிறது. சமீபத்தில், வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உள்ளளது. மேலும் சீனா முதலிடத்திலும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் இரண்டாவது இடத்திலும் உள்ளது.

**மனிதவள மேம்பாட்டு குறியீடு:**
எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வளங்கள் அவசியமாகும். உற்பத்தித் துறையில் பயன்படுத்தக் கூடிய மனித வளங்களை கொண்டிருக்கும் மக்களையே மனித வளம் என்ற சொல் குறிக்கிறது.

மனித வள மேம்பாடு என்பது மனிதனின் உடல்திறன் மனத்திறன் மற்றும் சுகாதாரத் திறன்களை கல்வி கல்வி, மருத்துவம் மற்றும் பயிற்சியின் மூலம் மேம்படுத்துவதாகும். எனவே மனித வளத்தில், கல்வி மற்றும் உடல் நலத்தில் செய்யப்படும் முதலீடு எதிர்காலத்தில் உயர்ந்த வருமானத்தை அளிக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் நல்ல கல்வி, சிறந்த சுகாதாரம் எதிர்காலத்தில் அவர்களுக்கு அதிக வருமானம் பெறக்கூடிய முதலீடு ஆகும். இது அவர்களின் உற்பத்தியின் மூலம் சமூகத்திற்குப் பெரும் பங்களிப்புத் தந்து அதிக வருமானம் அளிக்க முடியும். மனித வளர்ச்சி குறியீடு என்பது சமூகத்திலுள்ள மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த மேம்பாட்டைக் குறிக்கிறது. கடந்த காலங்களில் பொருளாதார வல்லுனர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் விகிதத்தை, மக்களின் உடல் உழைப்பை மூலதனம் ஆக்குவதன் மூலமே முதலீட்டை அதிகரிக்க முடியும் என்று நம்பினர். ஆனால் மனித உழைப்பின் முதலீடு என்பது உடல்நலத்தின் மீது செய்யப்படும் முக்கியமான முதலீடு என்பதை பின் நாட்களில் அவர்கள் உணர்ந்தனர்.

இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு மனித வள மேம்பாட்டு அமைச்சகம் பொறுப்பாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் சாஸ்திரி பவனில் அமைந்துள்ளது.

**நிலையான மேம்பாடு**

நிலையான பொருளாதார மேம்பாடு என்பது, தற்போதுள்ள சுற்றுச்சூழலைச் சேதப்படுத்தாமல் மேம்பாடு அடைய வேண்டும். எதிர்கால சந்ததியினரின் தேவைகளுக்காக எவ்வித சமரசமும் செய்து கொள்ளக் கூடாது.

சுற்றுசூழல் சீரழிவின் விளைவுகள் தேசிய மாநில எல்லைகளுக்கு உட்பட்டது மட்டும் அல்ல. அறிவியல் அறிஞர்கள் பொருளாதார வல்லுநர்கள், தத்துவவாதிகள் மற்றும் பிற சமூகவியலாளர்கள் போன்றோர் ஒன்று சேர்ந்து உழைப்பதன் விளைவாக நிலையான மேம்பாடு அமையும்.

இயற்கை வளங்களை புதுப்பிக்கத் தக்க மற்றும் புதுப்பிக்கததகாத வளங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

புதுப்பிக்கத் தக்க வளங்களை புதுப்பிக்க இயலும். எ.கா: சூரிய காந்தி

புதுப்பிக்க இயலாத வளங்களை புதுப்பிக்க இயலாது. எ.கா: நிலக்கரி, பெட்ரோல்
நிலத்தடி நீர் என்பது புதுப்பிக்கத் தகுந்த வளங்களின் ஒரு எடுத்துக்காட்டாகும். வளங்களை மீண்டும் பயன்படுத்துவதற்குக் பதிலாகச் செலவு செய்து விட்டால் எவ்வாறு நிலையான மேம்பாடு சாத்தியமாகும் என்ற கேள்வி எழுகிறது. புதுப்பிக்கத் தகாத வளங்கள் பல ஆண்டுகளுக்குப் பயன்படுத்தியப் பிறகு தீர்ந்து விடும். மேலும் அவற்றைப் உருவாக்க இயலாது.

நிலையாக மேம்பாட்டு அடைவதற்கு பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தன்மையை சம நிலையில் வைத்திருக்க வேண்டும்.
பொதுவாக மேம்பாடு அல்லது முன்னேற்றம் பற்றிய கேள்வி தொடர்ந்து இருந்து கொண்டே வருகிறது. சமூக உறுப்பினராகவும் தனிப்பட்ட நபராகவும் நாம் செல்ல வேண்டிய பாதை, நம் பங்கு மற்றும் இலக்குகள் பற்றி தெளிவான கருத்துக்களுடன் இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டின் கல்வியறிவு வீதம் தென்மாநிலங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தேசியச் சராசரியை விட அதிகமாக உள்ளது.
தமிழ்நாட்டில் உயர் கல்விக்கான சேர்க்கையானது இந்தியாவில் மிக உயர்ந்ததாகும்.

| வ. எண் | அளவுகள் | மாநிலங்கள் | | | | | தமிழ் நாடு | இந்தியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆந்திரப் பிரதேசம் | கர்நாடகம் | கேரளா | குஜராத் | உத்திரப் பிரதேசம் | | |
| 1. | கல்வியறிவு விகிதம் %(2011) | 67.02 | 75.36 | 94 | 78.03 | 69.72 | 80.09 | 74.04 |
| 2. | பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு தலா பெண்களின் எண்ணிக்கை (2011) | 993 | 973 | 1084 | 919 | 912 | 996 | 943 |
| 3. | உயர்கல்வியில் சேர்க்கை % (2015 – 16) | 30.8 | 26.1 | 30.8 | 20.7 | 24.5 | 44.3 | 24.5 |

**நிதி ஆயோக் (Niti Aayog):**

| புதுப்பிக்கத் தக்க வளங்கள் | புதுப்பிக்க இயலாத வளங்கள் |
|---|---|

| | |
|---|---|
| புதுப்பிக்கத் தக்க வளங்கள் மாசற்ற மற்றும் சுற்றுச்சூழல் நலம் காக்கிறது. இந்த வளங்கள் புதுப்பிப்பதற்கான ஒரு குறுகிய நேரத்தை எடுத்துக் கொள்கிறது. எடுத்துக்காட்டு: சூரியகாந்தி, காற்று சக்தி. நீர், மரம், காகிதம் | புதுப்பிக்கத் தகாத வளங்கள் சூழலை மாசுப்படுத்தவும் சேதப்படுத்தவும் செய்கின்றன. இந்த வளங்கள் உருவாக்குவதற்குப் பலநூற்றாண்டுகள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டு: உலோகங்கள், கண்ணாடி, புதைப்படிவ எரிபொருட்கள் (நிலக்கரி, பெட்ரோல், இயற்கை எரிவாயு, டீசல்) |

**நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகள்:**
**மரபு சாரா வளங்களை பயன்படுத்துதல்:**
இந்தியாவின் மின்சார தேவைகளைப் பூர்த்தி செய்ய அனல் மின்சார மற்றும் புனல் மின்சார நிலையங்களைச் சார்ந்திருக்கிறது. இந்த இரண்டு உற்பத்தி நிலையங்களும் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்தைக் கொண்டுள்ளன. அனல் மின் நிலையம் சூழலை மாசுபடுத்தும் அதிக அளவு கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றி சுற்றுச் சூழலை மாசுபடுத்துகிறது.

**இந்தியாவில் சூரிய சக்தி:**
சூரிய சக்தி என்பது சூரிய ஒளி மூலம் மின்சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்தப்படுத்துவதாகும். சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்ற சூரிய ஒளியை வேதி வினைக்கு உட்படுத்தி ஆற்றலாக மாற்றுகிறது. சூரிய மின் தகடு அமைப்பின் மூலம், வீடு மற்றும் அலுவலகத்திற்கு தேவையான மின்சாரம் தயாரிக்க முடியும். இந்த சூரிய மின் சக்தி அமைப்புகள் பெரும்பாலும் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் மின் செலவைக் குறைக்க அவர்களால் நிறுவப்படுகின்றன.

சூரிய சக்தி உற்பத்தி தொழில், இந்தியாவில் வேகமாக வளர்த்துவருகிறது, தமிழ்நாடு அதிக அளவில் சூரிய மின்தகடு அமைப்பு (solar Panels) கொண்ட மாநிலமாக உள்ளது. இந்தியாவில் சூரிய சக்தி மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் முன்னணியில் உள்ளது. தமிழகத்தில் 2017 ஆம் ஆண்டு சூலை 31 ஆம் நாள் வரை நிறுவப்பட்ட சூரிய அமைப்புகளின் மூலம் பெற்ற மின் திறன் 1697 மெகாவாட் ஆகும்.

**இந்தியாவில் சுற்றுச்சூழல் கொள்கைகள்:**
இந்தியா தன் சுற்றுச்சூழல் கொள்கைகளைக் கடந்த முப்பது ஆண்டுகளாக உருவாக்கிக் கொண்டு வந்துள்ளது. காற்று, நீர் மாசுபாடு, கழிவு மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சிக்கல்களைப் பாதுகாக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியா குறைந்த வளங்களுடன் பொருளாதார மேம்பாட்டை அடைய பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நிலையற்ற காலநிலை, குறைந்த வளங்கள், வெளிகாரணிகள் போன்றவற்றை எதிர்கொண்டு அணுகு முறைகளில் மாற்றம் செய்து, இந்தியா தனது பாதையில் சவால்களைச் சந்தித்து நிலையான மேம்பாட்டை அடைந்துள்ளது.

இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 51A (g) காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் காட்டு உயிர்கள் மற்றும் இயற்கைச் சூழலைப் பேணவும், மேம்படுத்தவும் அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்கவும் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் கடமைப்பட்டுள்ளனர் என்று வலியுறுத்துகிறது.

நாட்டின் பொருளாதார மேம்பாடே வாழ்க்கைத் தரத்தை நிர்ணயம் செய்கிறது. இதன் பொருள் மக்களுக்கு அதிக வருமானம், திறன் மிக்க கல்வி, சிறந்த சுகாதாரம், ஊட்டச்சத்து உணவு, வறுமையற்ற நிலை மற்றும் சம வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதற்கு ஏற்ற

சூழலை ஏற்படுத்துவதாகும். இதற்கான சட்டங்களை உருவாக்குவதே இந்தியாவின் சுற்றுச் சூழல் கொள்கைகள் ஆகும்.

**இந்தியாவில் சுற்றுசூழல் சட்டங்கள்**

| வ.எண் | சட்டம் | செயல்பாடு |
|---|---|---|
| 1. | தேசியப் பசுமை தீர்ப்பாய சட்டம், 2010 | சுற்றுசூழல் பாதுகாப்பு, காடுகள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறது. |
| 2. | பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம், 2002 | பல்லுயிர்மைகளைப் பாதுகாத்தல் |
| 3. | சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 | சுற்றுசூழலை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான அதிகாரம் வழங்குதல் |
| 4. | வன (பாதுகாப்பு) சட்டம், 1980 | காடுகள் அழித்தல் தடைசெய்தல் மற்றும் காடுகள் அல்லாத பகுதிகளில் மரம் வளர்த்தலை ஊக்கப்படுத்துதல் |
| 5. | நீர் (நீர் பாதுகாப்பு மற்றும் மாசுபடுத்துதல் தடுப்பு) சட்டம், 1974 | அனைத்து வகையான ஆறுகள், ஏரிகள், குளங்களை மீட்டு பராமரித்தல் |
| 6. | வனவிலங்குகள் பாதுகாப்பு சட்டம், 1972 | காடு விலங்கள் மற்றும் பறவைகளுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது. |

**தமிழ்நாட்டின் வளர்ச்சி:**
தமிழ்நாடு குறைந்த காலகட்டத்துக்குள் மிக விரைவான வளர்ச்சியை எட்டிய சில மாநிலங்களுள் ஒன்று ஆகும். வறுமை, அடிப்படை வசதி, சமத்துவமின்மை போன்ற மிக மோசமான நிலையிலிருந்து மிக வேகமாகத் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறது.

தற்காலத்தில் தமிழ்நாடு துணிச்சலான சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்தது. அனைத்துத் பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள். பொதுப்போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்கல் போன்றப் பல திட்டங்களைக் குறிப்பிடலாம்.
பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் இன்று சிறப்பான பொதுப் சேவைகள் உள்ளது. அந்தச் சேவைகளில் பெரும்பாலானவை பாகுபாடின்றி அனைவருக்கும் கிடைக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். வளர்ச்சிப் பாதையை பொறுத்தவரை தமிழ்நாடு, கேரளா, இமாச்சலபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன.
இறுதியாக ஒரு முக்கியமான ஒன்று: மனிதத் திறன்களைப் பயன்படுத்தாமல் இந்த விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்ட முயன்ற பெரும்பாலான இந்திய மாநிலங்களைவிட மனிதத் திறன்களைபயன்படுத்திய தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் அதிகமாகும் வறுமைநிலையும் பெரும்பாலான மாநிலங்களை விட ஒப்பீட்டளவில் குறைவாகும் பொருளாதார வளர்ச்சியானது சமூகநலத் திட்டங்களை சாத்தியப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியும் மக்கள் ஆதரவும் ஒன்றுக்கொன்று இணக்கமாக செயல்படுவதே முக்கியமான காரணம் ஆகும்.
ஆதாரம்: An Uncertain Glory புத்தகத்திலிருந்து நோபல் பரிசு பெற்ற அறிஞர் அமர்த்தியா சென்.

9ம் வகுப்பு

## அலகு– 2 இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

**அறிமுகம்:**

உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய உலகில் அந்தப் பட்டியலில் வேலைவாய்ப்பு என்ற ஒற்றையும் சேர்க்கப்பட வேண்டியது முக்கியம். இவ்வுலகில் வாழ்வதற்காக வருவாய் ஈட்ட நம் அனைவருக்கும் வேலை அவசியம். பொருளியல் செயல்பாடுகளில் மேல்நிலையில் அலுவலர்களாகவும் மற்றும் கீழ்நிலையில் தொழிலாளர்களாகவும் பங்கு பெறுவோர் ஊழியர் எனப்படுவர். இந்த ஊழியர்களைப் பணியமர்த்தி, அவர்களின் பணிக்கு ஏற்ப ஊதியம் தருவோரை, பணியமர்த்துவோர் என்று குறிப்பிடப்படுவர்.

உழைப்பாளர் குழு என்பது நாட்டு மக்களில் வேலையில் இருப்போரும், கூடவே வேலை செய்யும் திறன் பெற்ற நபர்களும் ஆவர். உழைப்பாளர் குழுவைத் கணக்கிடுவதில் 15 முதல் 60 வயது வரையிலும் உள்ளவர்களை நாம் எடுத்துக் கொள்கிறோம். 15 வயதுக்குக் குறைந்தவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். 60 வயதைக் கடந்தவர்கள், உற்பத்தி சார்ந்த வேலையை மேற்கொள்வதற்கு உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் அல்ல என்பதால் அவர்கள் உடல் உழைப்பைச் செய்ய முடியாது என விலக்கப்படுகின்றனர். மக்கள் தொகையில் பெரும்பகுதிகுழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் இருந்தால், உழைப்பாளர் குழுவின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கும். இதனால் நாட்டு முன்னேற்றம் மெதுவாகநடைபெறும். மேலும்,குறைந்த உழைப்பாளர்கள் குழுவானது, உழைப்பாளர் அல்லாத பெரிய குழுக்களுக்குச் சிறிய தேசிய உற்பத்தியிலிருந்து உணவளித்துப் பராமரிக்க வேண்டியிருக்கும்.

**இந்தியாவில் வேலை வாய்ப்பு அமைப்பு:**

இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மையானது பலபரிமாணங்கைளக் கொண்டது. சிலருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு ஓராண்டில் சில மாதங்களுக்கே வேலை கிடைக்கும். முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறை, இரண்டாம் துறை அல்லது தொழில் துறை, மூன்றாம் துறைசார்புத் துறை அல்லது சேவைத் துறை எனப் பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாகவகைப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளியல் அமைப்பின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு அமைப்பு குறிக்கிறது. வேலைப் வாய்ப்பு முறைகள் நாட்டுக்கு நாடுமாறுகின்ற போதிலும் இந்தியா போன்றவளரும் நாடுகளில் உழைப்பாளர் குழ பெரும்பகுதி முதன்மைத் தொழிலிலும் சிறிய குழுக்கள் இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். நன்கு வளர்ந்தநாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர் குழுவின் பங்கு சிறியதாகவும், தொழில் மற்றும் சேவை துறைகளில் ஈடுபட்டிருக்கும் உழைப்பாளர் குழுவின் பங்கு பெரிதாகவும் இருக்கும்.

இந்திய வளர்ச்சிக் கொள்கையின் ஒரு முக்கியமான கூறாக வேலைவாய்ப்பு எப்போதுமே இடம் பெற்றுள்ளது.
1972 – 73 ஆம் ஆண்டுகளில் தொடங்கி கடந்த நான்கு பாத்தாண்டுகளில் வேலைவாய்ப்பு வளர்ச்சி, சராசரியாக 2% அளவுக்கு உயர்ந்துள்ளது.

| |
|---|
| இடைக்கால வரலாற்றுக் காலத்தில் இந்தியாவின் டெல்லிசுல்தான் பெரோஸ் ஷா துக்ளக், வேலை வாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார். |

**வேலைவாய்ப்பின் வகைகள்:**
**ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள்:**

பதிவு செய்யப்பட்டதும், அரசாங்க விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பின்பற்றுவதும், ஊழியர்களையும் ஊழியர் சங்கங்களையும் கொண்டுள்ள துறை ஒழுங்கமைக்கப்பட்டத் துறை

எனப்படும். இந்தியாவில் வங்கிகள், ரயில்வே, காப்பீடு, உற்பத்தித் உற்பத்தி தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மாநிலஅரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறைகள் ஒழுங்கமைக்கப்பட்டத் துறைகள் என கூறலாம். இந்தத் துறைகள், சட்டத்திலுள்ள குறிப்பிட்டவிதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் படிசெயல்படுகிறது. இந்த ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உண்டு என்பதோடு அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் இருப்பவரைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறுகின்றனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் நல்லஊதியம், நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம்,ஊதியத்துடன் கூடியவிடுமுறை, மருத்துவ உதவித்தொகை மற்றும் காப்பீடு போன்றவை வழங்கப்படும்.

**ஒழுங்கமைக்கப்படாத துறைகள்:**

அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாததுறைகள் என்பதுவீட்டுஉபயோகப் பொருள்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்றவற்றைக் கூறலாம். இதற்கு விதிகளும் ஒழுங்குமுறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இவற்றில் வேலை செய்வோருக்குக் குறைந்த கூலி கொடுக்கப்படுவதோடு பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்குக் ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறைநாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இருக்காது. வேலை உத்தரவாதம் கிடையாது. வேலையில்லாத போது அவர்கள் தொழில் கூடங்களிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். தெருக்களில் விற்பனை செய்வோர், பழுதுகள் சரி பார்ப்போர், சிறிய அளவிலானதொழில் செய்வதில் ஈடுபட்டுள்ள ஏராளமான எண்ணிக்கையிலான மக்களை இந்தத் துறை உள்ளடக்கியுள்ளது.

அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் வேலைவாய்ப்பு வரையறைகள் நிலையானதாக, ஒழுங்கு படுத்தப்பட்டதாக இல்லை. தொழிலாளர்களுக்குச் சிறப்பு ஆதாயங்களோ வேலை நிரந்தரமோ கிடையாது. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தில் பதிவுபெற்றவை அல்ல.

**பொதுமக்கள் துறையும் தனியார் துறையும்:**
சொத்துகளின் உரிமையாளரையும், சேவைகள் அளிப்பதற்குப் பொறுப்பானவரையும், அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்கான வேறுபாடுகள்:**

| வ.எண் | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | சேவை நோக்கம் கொண்டது | இலாப நோக்கம் கொண்டது |
| 2. | சொத்துக்கள் அரசாங்கத்துக்குச் சொந்தம் | சொத்துக்கள் தனிநபர்களுக்குச் சொந்தம் |
| 3. | ஊதியம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. | ஊதியம் உரிமையாளரால் வழங்கப்படுகின்றன |

**எடுத்துக்காட்டுகள்:**
**பொதுத்துறை நிறுவனங்கள்:**
- நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவனம்
- இந்திய உருக்கு ஆணையம்
- பாரத தொலைபேசி நிறுவனம்

**தனியார் துறை நிறுவனங்கள்:**
- டிவிஎஸ் மோட்டார் நிறுவனம்
- அசோக் லேலண்ட்
- டாடா இரும்புமற்றும் எஃகு தொழிற்சாலை

**தற்போதைய வேலைவாய்ப்பு போக்கு:**

சமீப ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அமைப்பில் ஒருமாறுதல் எற்பட்டுள்ளதோடு இது பணியமர்த்துவோர்,அவர்களின் ஊழியர்களிடையே அதிகநெகிழ்ச்சியோடு பணிபுரியும் முறையை வளர்த்தெடுக்க உதவியது. தற்கால வேலைவாய்ப்பு போக்குகளாவன.

1. அதிகரித்து வரும் சுய-வேலை வாய்ப்பு
2. நிறுவனங்கள் ஒரு சில நிரந்தர ஊழியர்களையே பயன்படுத்துல் மற்றும் குறுகிய கால ஒப்பந்தப் பணிகளைத் தருவதும் ஆகும்.
3. பகுதி நேர வேலை வாய்ப்பில் ஒரு வளர்ச்சி இருந்து வருகிறது. மக்களின் வாழ்க்கை முறையே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**தமிழகத்தில் வேலைவாய்ப்புப் போக்குகள்:**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் தமிழகத்தில் விவசாயமே அதிகம் பேருக்கு வேலையளித்துக் கொண்டிருக்கிறது இதற்குக் காரணம், விவசாயமல்லாத துறைகள், உழைப்பாளர்கள் குழு தொழில்களை மாற்றி கொள்வதற்குப் போதுமான அளவுவேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. தமிழ் நாட்டின் வேலைவாய்ப்பு வளர்ச்சியின் பெரும்பகுதி, குறைந்த வருமானங்களை அளிக்கின்ற அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத முறை சாரா துறைகளின் பங்களிப்பாகவே உள்ளது.

**இருவேல்பட்டுவில் வேலைவாய்ப்பு: ஒரு கள ஆய்வு:**

வேலை வாய்ப்பு நிலவரங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேசிய அல்லது மாநில அளவில் மட்டும் தான் புரிந்துகொள்ள முடியும் என்றில்லை, கிராமத்தை ஆய்வு செய்வதிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். இரு வேல் பட்டு என்பது தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். இந்தக் கிராமம் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்தகிராமம் ஸ்லேட்டர் கிராமம் என்றும் கூறப்படும், ஏனெனில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர் முதன் முதலில் தனது மாணவர்களுடன் கள ஆய்வு செய்வதற்காக இந்தகிராமத்திற்கு 1916 ஆம் ஆண்டு சென்றார். காலப் போக்கில் பல ஆய்வாளர்கள் கிராமத்தவர்களின் வேலை குறித்து கணக்காய்வு செய்து, கிராமத்திலுள்ள ஒவ்வொருவர் குறித்தும் மேலும் பலவிவரங்களைச் சேகரித்துள்ளனர்.

இந்தக் கிராம வளர்ச்சியின் காரணம் கிராம மக்களிடையே ஆரம்ப சுகாதாரநலம், பள்ளிகள் அமைத்தது, பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் மீது சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியது காரணமாகும். இந்தக் கிராமம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ள போதிலம் இன்னமும் அவர்களின் வேலை வாய்ப்புக்கு முக்கியமாக விவசாயத்தையே சார்ந்துள்ளது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். 1981 ஆம் ஆண்டில் 100 குடும்பங்களில் 24 குடும்பங்கள் விவசாய மல்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். 2008 ஆம் ஆண்டில் விவசாயமல்லாத வேலைகளில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. 1981 – 2008 காலத்தில் விவசாயத்தில் - விவசாயக் கூலிகளாகவும், பயிரிடுவோராகவும் - ஈடுபட்டிருந்த குடும்பங்களின் விகிதம் குறைந்துள்ளது. எனவே விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடுபவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை காணலாம்.

**இருவேல˙பட்டுவில் இருந்த குடும்பங்களின் வேலைவிவரங்கள் (சதவீதத்தில்)**

| தொழில் | குடும்பங்கள் % | |
|---|---|---|
| | 1981 | 2008 |
| பயிரிடுவோர் | 42 | 33 |
| விவசாயக் கூலிகள் | 32 | 26 |
| விவசாயமல்லாத தொழிலாளர்கள் | 24 | 41 |
| மொத்த குடும்பங்கள் | 100 | 100 |

## 9^TH BOOK

### அலகு – 3 பணம் மற்றும் கடன்

**அறிமுகம்:**
இப்பாடம் பணத்தின் வரலாறு பற்றியும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் கூறுகிறது. நம் நாட்டின் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கினைப் பற்றி எடுத்துரைக்கிறது. அந்நியச் செலாவணி, பண விநியோகம், பல்வகைான கடனுதவிகள் போன்றவற்றையும், விளக்குகிறது. இவை மட்டுமின்றி, இக்காலத்தில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், வங்கிச் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் நடைபெற எவ்வாறு துணைபுரிகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

மனிதர்களாகிய நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களில் பெரும்பான்மையான பொருள்கள் பணத்தால் மதிப்பிடப்படுகின்றன. மக்களின் உழைப்பிற்கான ஊதியம், கூலி, சேவைக் கட்டணங்கள் முதலியன பணத்தின் மதிப்பில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் நாம் செலுத்தும் வரிகள், தீர்வைகள் ஆகியவையும் பணத்தின் மதிப்பிலேயே செலுத்தப்படுகின்றன. நம் வீட்டில் ஒவ்வொரு மாதமும் நமது பெற்றோர் அந்த மாதத்துக்கான செலவுகளை மதிப்பிடுவதைப் பார்த்திருப்போம். அப்போது இந்த மாத வருமானம் எவ்வளவு? எதிர்பார்க்கப்படும் செலவுகள் எவை? சேமிப்பு, வட்டி செலுத்த வேண்டியது எவ்வளவு? என்பதைப் பணத்தின் அடிப்படையில் கணக்கிடுவதைக் காணலாம்.

வீடு மட்டுமல்லாமல் ஒரு நாட்டின், மாநிலத்தின் நிதிநிலை அறிக்கைகள்கூட பணத்தின் அடிப்படையில்தான் தயாரிக்கப்படுகின்றன. அரசு மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், போன்றவைகூட தமது நிதிநிலையைப் பணத்தின் அடிப்படையில் கணக்கிடுகின்றன. இவ்வாறு பணம் என்பது நமது வாழ்வில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

**பண்டமாற்று முறை:**
மனிதர்கள் எப்போதுமே பணத்தினைப் பயனபடுத்தி வந்தார்களா என்று கேட்டால், இல்லை என்பதே பதில் ஆகும். அப்படியானால் மனித வாழ்வில் பணம் எப்போது எந்த வடிவில் அறிமுகமானது? அது எவ்வாறு காலப்போக்கில் புதிய வடிவங்கள் பெற்றது? என்பன குறித்து இப்பாடத்தில் அறிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் மனிதர்கள் வேட்டையாடுபவர்களாகவும் உணவு சேகரிப்பவர்களாகவும் தமக்கான உணவைப் பெற்றனர். அவர்கள் குகைகள், காடுகளில் வாழ்ந்தனர். படிப்படியாக வேட்டையாடுவதற்காகவும் உணவு சேகரிப்பதற்காகவும் கருவிகளைக் கண்டுபிடித்தனர். தொடர்ந்து நெருப்பின் பயனையும் வேளாண்மை செய்யவும் கற்றுக்கொண்டனர். மண்ணைப் பயன்படுத்தித் தமக்கான வீடுகளைக் கட்டிக்கொண்டு, ஒரே இடத்தில் வாழத் தொடங்கினர். மேலும் மண்ணைப் பயன்படுத்தி மட்பாண்டங்களையும் தயாரித்தனர்.

வேளாண்மை மூலம் உற்பத்தி அதிகரித்ததால் கைவினைப் பொருள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். இவ்வாறு உபரியாக மீதமாகும் உணவுப்பொருள்களையும் தாங்கள் தயாரித்த மண்பாண்டம் போன்ற பொருள்களையும் அவை தேவைப்படும் மனிதர்களுக்குப் பரிமாற்றம் செய்தனர். எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்திடம் அதிக உணவுப்பொருட்கள் இருந்தால், அவற்றை மண்பாண்டங்கள் உபரியாக வைத்திருப்பவர்களிடம் பண்ட மாற்றம் செய்தனர். அதேபோல, ஒரு பகுதியில் அதிகம் உற்பத்தியாகும் தானியம் இன்னொரு பகுதியில் அதிகம் காணப்படும் விளைபொருளுக்குப் பண்டமாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு மண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள்களே வணிகத்தின் முதல் வடிவம் என்று கூறலாம்.

**நாணங்கள்:**
நாகரிகங்கள் உருவான அனைத்துப் பகுதிகளிலும் பண்டமாற்று முறை செல்வாக்குப் பெற்றிருந்தது. ஒரே நாகரிகத்திற்குள் மட்டுமல்லாமல் வேறு வெறு நாகரிகங்களுக்கு இடையிலும் பண்டமாற்று முறையில் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. இதுவே பன்னாட்டு வணிகத்தின் முதல் வடிவம் எனலாம்.

சிந்து வெளி நாகரிகக் காலகட்டத்தில காணப்பட்ட பொருள்கள் எகிப்து,ஈராக் (மெசபடோமியா) பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வாறு பொருள்களைப் பண்டமாற்றம் செய்வதிலும் காலப்போக்கில் சிக்கல்கள் உருவாகின. எடுத்துக்காட்டாக, தமக்குத் தேவையான பொருளுக்குப் பண்டமாற்றம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. ஒருவரிடம் நெல் உள்ளது. அவருக்கு மண்பாண்டம் தேவை. ஆனால் மண்பாண்டம் வைத்திருந்திருந்தவருக்கு நெல் தேவையில்லை. இவ்வாறு பலருக்கும் தமது தேவைகள் நிறைவேறவில்லை. பண்டமாற்றுப் பொருள்களின் அளவு மற்றும் மதிப்பை கணக்கிடுவதில் பிரச்சனைகள் இருந்தன.

இப்பிரச்சனைகளுக்கு விடை காண பண்டங்களை மாற்றிக்கொள்ளப் பொதுவான மதிப்புள்ள ஒரு பொருளை நிர்ணயம் செய்தனர். இது பெரும்பாலும் உலோகமாக இருந்தது. ஆகவே இந்த உலோகங்களே முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட பணம் எனலாம். உலோகம் அப்போது அரிய பொருளாகவும் நீண்ட காலம் பராமரிக்கக்கூடியதாகவும் மதிப்பு மாறாததாகவும் இருந்தது, இதற்குக் காரணமாக இருக்கலாம்.

தனது அரசாட்சியில், ஷெர்ஷா சூரி (1540 – 1546) குடிமக்களுக்கும், இராணுவத்திற்குமான ஒரு புதிய நிர்வாக முறையை அமைத்தார். அவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 178 கிராம் எடை கொண்ட வெள்ளி நாணயம் 'ருபியா' என்றழைக்கப்பட்டது. அந்நாணயம் முகலாயர், மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் காலம் வரை புழக்கத்தில் இருந்தது.

தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் இவ்வாறு பண்டமாற்று முறைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன. இவை புராதன பணம் என்றும் அனுமதிக்கப்பட்டனர். மேலும், பிற்காலச் சோழர்கள் ஆட்சியின்போது தமிழக வணிகர்களின் ஏற்றுமதித் தேவையை ஈடுசெய்ய சிறு வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் கடன் உதவி அளித்ததற்கான வரலாற்றுச் சான்றுகளும் காணப்படுகின்றன.

**இயற்கையான பணம்:**
படிப்படியாகத் தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்கள் உலகம் முழுவதும் மதிக்கப்படும் உலோகங்களாக ஏற்கப்பட்டன. இதையொட்டி, இந்த ஒரு உலோகங்கள் நாடுகளுக்கு இடையிலான பண்டமாற்றத்தில் பொது மதிப்பீடாகப் பயன்படுத்தப்பட்டன. இவையே இயற்கையான பணம் என்றும் அழைக்கப்பட்டன.

**காகிதப்பணம்:**
நாளடைவில் இயற்கையான பணத்திலும் சிக்கல்கள் உருவாயின. வணிகத்தின் விரிவாக்கத்துக்கு எற்ப தங்கம் மற்றும் வெள்ளி இருப்பு இருப்பதில்லை. அதே நேரத்தில் சுரங்கங்களிலும் தங்கம், வெள்ளி வரம்புக்குள் தான் இருந்தன. இதனால் குறைந்த மதிப்பு கொண்ட உலோகங்களைக் கொண்டு நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. இவை சிறிய மதிப்பிலான பொருள்கள் வாங்கவும் விற்கவும் பயன்படுத்தப்பட்டன. ஏழை மக்களின் பணமாக இவை பயன்படுத்தப்பட்டன.

இதனால், இந்தக் குறைந்த மதிப்பு நாணயங்கள் அதிகமாகத் தயாரிக்கப்பட்டன. இதன் அடுத்த கட்டமாகத்தான் காகிதப் பணம் புழக்கத்துக்கு வந்து. இந்த உருவமற்ற பணமும் வங்கிகளில் அதனைச் சேமிக்கும் வழக்கமும் வெகுவாகப் புழக்கத்திற்கு வந்தன. அப்போது உலகம் முழுவதும் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் இதற்கான காரணங்களில் ஒன்று.

பணம் என்பது ஒவ்வொருவரின் வாழ்விலும் பிரிக்க முடியாத பகுதியாக மாறிவிட்டது. உலகப் பொருளாதாரச் சூழலில் பணம் பல வடிவங்களில் மாறியுள்ளது. மின்னணு உலகில் பணப்பரிமாற்றங்கள் பல முறைகளில் நடைபெறுகின்றன.

**மின்னணுப் பரிமாற்றங்கள்:**
வங்கிச் சேமிப்பில் உள்ள பணத்தை எடுப்பதற்கு நேரடியாக வங்கிக்குச் சென்று படிவம் நிரப்பி அல்லது காசோலை வழங்கி, பெறுவதற்குப்பதிலாக, பணம் எடுக்கும் இயந்திரம் மூலம் தேவையான பணத்தை எடுக்க தானியங்கி பணம் வழங்கும் அட்டை பயன்படுகிறது. இதன் மூலம் ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ள பணம் எடுக்கும் இயந்திரம் மூலம் எந்த நேரமும் நமக்குத் தேவையான பணத்தினை

நமது கணக்கிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளலாம். இதேபோல வங்கிக்குச் செல்லாமலேயே நமது கணக்கில் பணம் செலுத்தும் வசதி சில வங்கிகளில் உள்ளது.

இதேபோல முன்னதாகப் பணம் பெற்று, பின்னர் செலுத்தும் வகையில் கடன் அட்டை (Credit card) பயன்படுத்தப்படுகிறது.

**ரிசர்வ் வங்கியின் பங்கு:**
பணப்பரிமாற்றத்தைப் பராமரிக்கும பொறுப்பும் கண்காணிக்கும் கடமையும் ஓர் அரசுக்கு இருக்கிறது. பொதுவாகப் பணம் பதுக்கி வைக்கப்படுவது பொருளியலில் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் வங்கிகளில் பணம் சேமிக்கப்படுகிறது.

பணப்பரிமாற்றம் செய்வதற்குக் காசோலை (Cheque) அல்லது கேட்பு வரைவோலை (Demand Draft) போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக இணைய வழி பரிமாற்றங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. இதன் மூலம் நினைத்த நேரத்தில் உலகின் எந்த மூலையில் இருப்பவருக்கும் நொடியில் பணப்பரிமாற்றம் செய்யலாம்.

இதேபோல அலைபேசிமூலமும் மின்னணு பரிமாற்றம் செய்யும் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது.

வங்கிகளில் சேமிக்கப்படும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் அனைத்து வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளதை (1969) அறிவோம். இந்தியாவில் பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் பணியினை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்கிறது.

**பணத்தின் வரலாறு:**

இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பட தொடங்கியது. 1937 லிருந்து நிரந்தரமாக மும்பையில் இயங்கி வருகிறது. இது 1949 இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. அச்சடிக்கப்பட்டப் பணத்தில் 85% புழக்கத்தில் விடப்படுகிறது. ஆகஸ்ட் 2018 நிலவரப்படி இந்தியாவில் ரூபாய் 19 லட்சம் கோடி மதிப்பிலான பணம் புழக்கத்தில் உள்ளது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 'பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்'(The problem of the rupee and its solution) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் அடிப்படையில் தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் 1934 ல் உருவாக்கப்பட்டது.

**பணம் - விலைத் தொடர்பு:**
பணத்துக்கும் பொருள்களின் விலைக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. ஏனெனில் தற்போது உலகில் தயாரிக்கப்படும் பொருள்களில் 90 விழுக்காடு விற்பனை அல்லது சேவைத்தொழிலை இலக்காகக் கொண்டே தயாரிக்கப்டுகின்றன. வேளாண்மையிலும் சொந்தத் தேவைக்காக விளைவிப்பதை விட பணப் பயிர்களை அதிகம் உற்பத்தி செய்யப்படுவது சந்தை மற்றும் பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

பணத்துக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு பணவியல் கொள்கையோடு தொடர்புடையது.
பண விநியோக வளர்ச்சிக்கும் நீண்ட கால விலை வீழ்ச்சிக்கும் இடையிலான நெருங்கிய உறவினை நாம் காணமுடியும். ஒரு நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையில் விலைக் கட்டுப்பாட்டுக்கு முக்கியப் பங்களிப்பு உள்ளது. இந்தியாவில் ரிசர்வ் வங்கி இதனைக் கண்காணித்து வருகிறது.
நாடுகளுக்கு இடையிலான பணம் செலாவணி என அழைக்கப்படுகிறது. இந்தியாவின் செலாவணி ரூபாய் என்று அழைக்கப்படுகிறது. உள்ளநாட்டில் அன்னிய நாட்டுச் செலாவணி வெளிநாட்டுச் செலாவணி என அழைக்கப்படுகிறது.

உலக நாடுகளுக்கு இடையிலான செலாவணி அமெரிக்க டாலர் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. உலக வணிகத்தின் பெரும்பகுதி அமெரிக்க டாலர் மதிப்பிலேயே நடைபெறுகிறது.

**பணத்தின் செயல்பாடுகள்:**
பண்டமாற்று முறையினால் உருவாகும் சிக்கல்களுக்கு மாற்றாக பணத்தின் வரவு பெரிதும் உதவி வருகிறது. பணம் என்பது ஒரு பரிமாற்ற ஊடகமாகவும், ஒரு கணக்கின் அலகாகவும் மதிப்புச் சேமிப்பாகவும் மாறுபடும் பண வழங்கீடுக்கான தரப்படுத்தலாகவும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| நாடு | செலாவணியின் பெயர் |
|---|---|
| இந்தியா | ரூபாய் |
| இங்கிலாந்து | பவுண்டு |
| ஐரோப்பிய ஒன்றியம் | யூரோ |
| கனடா | டாலர் |
| ஜப்பான் | யென் |
| சீனா | யுவான் |
| சவுதி அரேபியா | ரியால் |
| ஆஸ்திரேலியா | டாலர் |
| மலேசியா | ரிங்கிட் |
| பாகிஸ்தான் | ரூபாய் |
| இலங்கை | ரூபாய் |

**பரிமாற்ற ஊடகம்:**
ஒரு நாட்டில் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் தடையின்றி ஏற்கப்பட வேண்டும்.

**கணக்கு அலகு:**
ஒரு நாட்டில் அனைத்து நுகர்பொருள்கள், தயாரிப்புகள், சேவைகள் என அனைத்துக்குமான மதிப்பினைக் கணக்கிடுவதில் பணம் பொதுவான, தரப்படுத்தப்பட்ட அலகாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு புத்தகத்தின் விலை 50 என்றால் அப்புத்தகத்தின் விலை 50 பண அலகுகளுக்கு இணையானது என்று பொருள். ஒரு நாட்டில் நடைபெறும் நிதி பரிவர்த்தனைகளை அளவிடவும் கணக்குகளாக பராமரிக்கவும் பணம் பயன்படுகிறது.

**மதிப்பீட்டினைச் சேமித்தல்:**
பணத்தினைச் சேமிப்பதன் மூலம் எதிர்காலத்துக்கான வாங்கும் ஆற்றலைச் சேமிப்பதாகும்.

**கடன்:**
விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதை, இடுபொருள்கள் மற்றும் செலவுகளுக்காக பருவகாலங்களின் போது கடன் பெறுவதைக் காணலாம். அதேபோல சிறு தொழில்களில் ஈடுபடுபவர்கள், வணிகர்கள் தங்கள் தேவைகளுக்குக் கடன் பெறுகின்றார்கள். பெரிய தொழில் நிறுவனங்கள் கூட தங்கள் புதிய திட்டங்களுக்காகக் கடன் பெறுகின்றன.

**கடன் கிடைக்கப்பெறும் நிறுவனங்கள்:**

- முறைப்படி நிதி நிறுவனங்களான நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள்.
- முறைசாரா நிதி நிறுவனங்கள்.
- சுய உதவிக்குழுக்கள் மூலம் பெறப்படும் நுண்கடன்கள் என மூன்று வழிகளில் கடன் பெறப்படுகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை கடனுக்காக வட்டி குறைவு. ஈடு வைக்கப்படும் பொருளுக்கான பாதுகாப்பு அதிகம்.

**முறைசாரா நிதி நிறுவனங்கள்:**
முறைசாரா தனியார் நிறுவனங்களை வாடிக்கையாளர்கள் அணுக எளிதாக இருப்பதும் ஏதுவாக உள்ளதும் சாதகமான அம்சங்களாகக் கருதப்படுகிறது. அதே சமயத்தில் அதிக வட்டி,ஈடு வைக்கப்படும் பொருளின் பாதுகாப்பு மற்றும் வசூலிக்கும் முறைகள் ஆகியவற்றில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்கள் அல்லது குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுபவர்கள் குழுவாக அமைந்து சிறு சேமிப்பில் ஈடுபடுகின்றனர் இவர்கள் சுய உதவி குழுக்கள் எனப்படுகின்றனர். இவ்வாறு செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு அரசு வங்கிகள் கடனுதவி அளிக்கின்றன. சுய உதவிக்குழுக்கள் நடைபாதை வியாபாரிகள், மீனவர்கள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களுக்குப் பயன் அளிப்பதாக உள்ளது.

தமிழ்நாட்டில் 10,612 வங்கிக் கிளைகள் உள்ளன. 2017 – 2018 நிதியாண்டில் ஏறத்தாழ 15 லட்சம் கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் நடைபெறுகிறது.

**இந்தியாவில் பணம் எவ்வாறு அச்சிடப்படுகிறது?**
இந்தியாவில் 1917-ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935-ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்து. அதன்பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940-ல் மீண்டும் இந்தியாவில் 1917-ல்தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935-ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன்பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940-ல் மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுளை வெளியிட்டது. 1947-ம் ஆண்டுவரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசால் நோட்டுகள் வெளியிடப்பட்டன.

ஆங்கிலேய அரசு, 1925ல் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாசிக்கில் ஒரு அச்சகத்தை அமைத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூபாய் நோட்டுகளை அச்சடிக்க தொடங்கியது. மத்தியப்பிரதேசத்திலுள்ள தேவாஸில் 1974-ல் ஓர் அச்சகம் தொடங்கப்பட்டது. இந்த இரு அச்சகங்களைத் (Security Printing and Minting Corporation of India Ltd),) தவிர, 1990 களில் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூரிலும், மேற்கு வங்காளத்திலுள்ள சல்பானியிலும் ரூபாய் மற்றும் வங்கிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சடிக்க மேலும் இரு அச்சகங்களை இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கியது.

எவ்வளவு பணம் அச்சடிக்க வேண்டும் என்பதையும், எப்படிப் பாதுகாப்பாக உரிய இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இந்திய ரிசர்வ் வங்கியே முடிவு செய்கிறது. இங்கு சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இலங்கை, பூடான்,ஈராக், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த நாட்டுப் பணம் இந்த அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

பத்தாயிரம் ரூபாய் மதிப்புடைய நோட்டுகள் அச்சடிக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இருந்தாலும், தற்போது அதிகபட்சம் இரண்டாயிரம் ரூபாய் மதிப்பு வரையிலான பணத்தை மட்டுமே அச்சடிக்கிறது.

## அலகு – 4 தமிழகத்தில் வேளாண்மை

**அறிமுகம்:**
இந்தியா விடுதலை பெற்றபோதும் அதன் பின் நாற்பது ஆண்டு காலம் வரையும் தமிழக மக்களில் பெரும்பான்மையினோர் வேளாண் தொழிலையே நம்பியிருந்தனர். அந்த நிலை சமீப காலங்களில் மாறி வருகிறது. 2011 அம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் விவசாயிகளின் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டு காலத்தில் குறைந்தது தெரியவந்துள்ளது. அதேபோல், விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த தொழிலாளர்களில் 49.3 விழுக்காட்டினர் வேளாண்துறையில் இருந்தனர். பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அளவு 42.1 விழுக்காடு என குறைந்தது. 2011 ஆம் ஆண்டு தமிழகத்தில் மொத்தமாக மூன்று கோடியே 29 லட்சம் தொழிலாளர்கள் இருந்தனர். அவர்களுள் 96 லட்சம் பேர் விவசாயத் தொழிலாளர்கள் ஆவர்.

ஏறத்தாழ 55 விழுக்காடு பெண்கள் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த 2011 ஆம் ஆண்டில் மூன்றில் ஒரு பகுதிக்கும் (35.3%) கூடுதலான ஆண்டுகள் மட்டுமே அத்துறையில் ஈடுபட்டனர்.

**வேளாண் தொழிலில் ஈடுபடுவோரின் பிரிவுகள்:**
வேளாண் தொழிலில் ஈடுபடுவோரில் பெரும்பகுதியினர் நிலமற்ற கூலித் தொழிலாளிகள் ஆவர். நிலம் படைத்தோர் எல்லோரிடமும் ஒரே அளவில் நிலம் இருப்பதில்லை. பலரிடமும் சிறிய பரப்பளவில்தான் நிலம் இருக்கும். வெகு சிலரிடம் மட்டுமே பெரிய அளவில் நிலம் இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை நிலத்தைச் சாகுபடி செய்வோரின் எண்ணிக்கை 2015 – 16ல் 79,38,000 ஆக இருந்தது. ஆனால் ஐந்த ஆண்டுகளுக்கு முன்பு 81,18,000 விவசாயிகளாக இருந்தனர். இந்த ஐந்து ஆண்டுகளில் இவர்களின் எண்ணிக்கையில் 1,80,000 குறைந்துள்ளது. இதேபோல் சாகுபடி செய்யப்படும் பரப்பளவும் 64.88 லட்சம் ஹெக்டேர்கள் என்பதிலிருந்து 59.71 லட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்து போனது. அதாவது சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 1,03,400 ஹெக்டேர் சாகுபடி நிலத்தை, கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகம் இழந்துள்ளது.

தமிழகத்தின் பெரும்பாலான விவசாயிகள் குறுவிவசாயிகள் ஆவர் (ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்) மொத்த விவசாயிகளின் எண்ணிக்கையில் குறுவிவசாயிகள் 78% உள்ளனர். ஆனால் அவர்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு மொத்தச் சாகுபடி பரப்பளவில் 36% மட்டுமே. அடுத்ததாக சிறுவிவசாயிகள் (1 – 2 ஹெக்டேர் சாகுபடி செய்வோர்) 14% உள்ளனர். அவர்கள்து விவசாயம் செய்யும் பரப்பளவு 26% ஆகும்.

தமிழகத்தில் விவசாயம் செய்பவர்களில் நூற்றில் ஒருவர் மட்டுமே பட்டியலினத்தவர். அவர்களில் 96 விழுக்காட்டினர் சிறு, குறு விவசாயிகள்.

தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதிலுமே சாகுபடி செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு சுருங்கிக் கொண்டே வருகிறது. குறு விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. தமிழகத்தில் நேர்மாறாக, இவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. மக்கள் வேளாண் தொழிலைவிட் விலகுவதையே இது சுட்டுகிறது.

**நிலப் பயன்பாட்டு வகைகள்:**
தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு ஒரு கோடியே முப்பது லட்சத்து முப்பத்து மூன்றாயிரம் ஹெக்டேர்கள் ஆகும். இப்பரப்பில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு மட்டுமே பயிர் செய்யப்பயன்படுகிறது. (45,44,000 ஹெக்டேர்). வேளாண் அல்லாத பயன்பாட்டுக்கு 17 விழுக்காடு நிலம் பயன்படுத்தப்படுகிறது. எறத்தாழ இதே அளவு நிலம் (2,125 ஆயிரம் ஹெக்டேர்கள்) காடுகளாக உள்ளன. மொத்த நிலப்பரப்பில் சற்றேறக் காடுகளாக 4 விழுக்காடு நிலங்கள் பயன்படுத்த முடியாதவை. தற்போதைக்குத் தரிசாகக் கிடக்கும் நிலத்தின் அளவு பத்தில் ஒரு பகுதியாகும். மற்ற தரிசு நிலங்கள் 13 விழுக்காடு ஆகும். ஆக, நான்கில் ஒரு பகுதி நிலம் தரிசாக விடப்பட்டுள்ளது. தரிசாக போடப்படும் நிலம் கூடுதலாகி வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவையன்றி, மேய்ச்சல் நிலங்கள், மரங்கள் வளர்க்கப்படும் நிலங்கள் ஆகியவை மொத்த நிலப்பரப்பில் 5 விழுக்காடுக்கும் சற்றே கூடுதலாக உள்ளன.

தமிழகத்தில் நிகரமாக பயிர் செய்யப்படும் பரப்பளவு 45,44,000 ஹெக்டேர்கள் ஆகும். இப்பரப்பு ஆண்டுக்கு ஆண்டு மாறும். மழைப்பொழிவு காலத்தில் போதுமான அளவு மழை இருந்தால் இப்பரப்பு கூடும். மழைபொய்த்தாலோ, குறைந்தாலோ இப்பரப்பு குறையும். இப்பரப்பில் ஒரு சிறு பகுதி மட்டும் ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் பயிர் செய்யும் வாய்ப்பை வழங்கும். இப்பரப்பும் நீர் வசதிக்குத் தகுந்தவாறு ஆண்டுதோறும் மாறும். இப்பரப்பு 9 இலட்சம் ஹெக்டேர்களாக இருந்தது. அடுத்த அண்டு மழையின்மையின் காரணமாக 6 இலட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்து போனது. நிலையானதும் நம்பகமானதுமான நீராதரம் இருந்தால் மட்டுமே இப்பரப்பு ஒரளவுக்கு நிலைத்திருக்கும்.

2012 – 13 ஆம் ஆண்டில் மொத்தமாக பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏறத்தாழ 72 விழுக்காடு பரப்பளவில் உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டன. மற்ற இடங்களில் உணவற்ற பயிர்கள் பயிரிடப்பட்டன.

**வேளாண்மைக்கான நீர் ஆதாரங்கள்:**
தமிழகத்தில் வற்றாத நதிகள் இல்லை. தமிழகம் தனது தேவைக்கான நீரை வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ மழைகளிலிருந்து பெறுகிறது. தென்மேற்கு பருவ மழைப்பொழிவு அபரிமிதமாக இருந்தால் காவிரி ஆற்றின் நீர்ப் பிடிப்பு பகுதிகளிலுள்ள கர்நாடக அணைகள் நிரம்பிவிட்டால் தமிழகத்தில் காவிரி ஆற்றில் நீர் பெருகும்.

பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற பரப்பளவு 57 விழுக்காடு ஆகும்.

தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது வடகிழக்குப் பருவ (அக்டோபர் - டிசம்பர்) மழையாகும். வடகிழக்குப் பருவமழை நீரைத் தேக்கங்களிலும், கண்மாய்களிலும், மற்றும் ஏரிகளிலும் தேக்கி வேளாண்மையை மேற்கொள்கின்றனர். தமிழக வேளாண்மைக்கான நீரை வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகியவை வழங்குகின்றன. தமிழகத்தில் 2,239 வாய்க்கால்கள் ஏறத்தாழ 9,750 கிலோமீட்டர் தூரம் பாய்கின்றன. சிறு ஏரிகள் 7,985 ம் பெரிய ஏரிகள் 33,142 ம் உள்ளன. திறந்த வெளி கிணறுகள் 15 இலட்சம் உள்ளன. இவையல்லாது 3,54,000 ஆழ்துளைக் கிணறுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆதாரங்களைக் கொண்டே தமிழகத்தில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது.

ஏரிகளிலிருந்து பாசன வசதி பெறும் நிலத்தின் பரப்பளவுதான் மிகவும் குறைவானது. ஏறத்தாழ 3.68 லட்சம் ஹெக்டேர் பரப்பு ஏரிகளின் வாயிலாக நீர் பெறுகின்றன. வாய்க்கால்கள் 6.68 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு நீர் வழங்குகின்றன. ஆழ்துளைக் கிணறுகள் 4.93 இலட்சம் ஹெக்டேருக்கும் திறந்த வெளிக் கிணறுகள் 11.91 இலட்சம் ஹெக்டர் நிலத்திற்கும் பாசன வசதி வழங்குகின்றன.

**மறை நீர்**
மறைநீர் எனும் பதம் 1990 ஆம் ஆண்டு டோனி ஆலன் என்வரால் அறிமுகப்படுத்தப்பட்டது. விவசாயம் அல்லது தொழிற்சாலை உற்பத்தியின் போது நுகரப்படும் நீர் மறைநீர் என அழைக்கப்படுகிறது.

மறைநீர் என்பது உணவு அல்லது மற்ற உற்பத்தி பொருட்கள் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு வாணிகம் செய்யப்படும்போது அவற்றோடு மறைமுகமாக அவற்றிற்காக செலவிடப்படும் நீரும் செல்கிறது. இதுவே மறைநீர் ஆகும். உதாரணமாக ஒரு மெட்ரிக் டன் கோதுமை உற்பத்தி செய்வதற்கு உலக அளவிலான சராசரியாக 1,340 கியூபிக் மீட்டர் நீர் தேவைப்படுகிறது. அப்படியெனில் ஒரு மெட்ரிக் டன் கோதுமை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் போது அதை விளைவிக்கப் பயன்படுத்தப்பட்ட 1,340 கியூபிக் மீட்டர் நீரும் அதனுடன் செல்கிறது என்பது பொருள்.

உலக அளவில் இந்தியா மிக அதிகமான நன்னீர் பயன்பாட்டாளராக உள்ளது. இது மிகவும் அதிகமான எச்சரிக்கக்கூடிய அளவாகும். உலகின் ஐந்தாவது மிகப்பெரிய மறைநீர் ஏற்றுமதியாளராக இந்தியா விளங்குகிறது.

தமிழக வேளாண்மை பெரும் அளவிற்கு நிலத்தடி நீரையே நம்பி இருக்கிறது. நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்துவது பல இன்னல்களையும் உருவாக்கவல்லது. நிலத்தடியிலிருந்து நீரை எடுக்கும் அளவும் மழை பொழிவின் போது நிலத்தடிக்குச் செல்லும் நீரின் அளவும் சமமாக இருந்தால் துன்பம் இல்லை. மாறாக எடுக்கும் அளவு கூடக் கூட நீர் மட்டம் கீழே செல்லும். ஒன்று நீர் முற்றிலும் வற்றிப் போகலாம் அல்லது பாசனத்திற்கு உதவாத நீராக மாறவும் வாய்ப்புண்டு.

நிலத்தடி நீரின் அளவையும் தன்மையையும் மத்திய நிலத்தடி நீர் வாரியம் தொடர்ந்து கண்காணிக்கிறது.
இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால்

1. தமிழக வேளாண்மை நிலத்தடி நீரை நம்பியுள்ளது.
2. நிலத்தடி நீரின் பயன்பாட்டைச் சீர் செய்வது மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும்.
3. வளம் குன்றா வேளாண்மைக்கு இது மிகவும் தேவை ஆகும்.

**பாசனமும் பயிர் வகைகளும்:**

**தமிழகத்தில் விளையும் பயிர்கள்:**

பயிரிடப்படும் பயிர்களை உணவுப்பயிர்கள் என்றும் உணவல்லாத பயிர்கள் என்றும் வகைப்படுத்தலாம். தமிழகத்தில் உணவு தானியம் பயிரிடப்படும் பரப்பில் 57 விழுக்காடு பாசனவசதி பெறுகின்றன. 2014 – 15 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்கள் 59 விழுக்காடும் உணவல்லாத பயிர்கள் 50 விழுக்காடும் பாசன வசதி பெற்றிருந்தன.

தமிழகத்தில் பயிரிடப்பட்ட நிலத்தின் மொத்தப் பரப்பளவில் 2014 – 15 ஆம் ஆண்டில் 59 இலட்சத்து 94 ஆயிரம் ஹெக்டேர்களாக இருந்தது. இதில் 76 விழுக்காடு பரப்பளவில் உணவல்லாத பயிர்கள் பயிரிடப்பட்டன.

நெல் சாகுபடி தான் பெரிய அளவில் 30 விழுக்காடு மேற்கொள்ளப்படுகிறது. இதர உணவுப் பயிர்கள் 12 விழுக்காடு பரப்பிலும் பயிரிடப்படுகின்றன. சிறுதானிய சாகுபடி குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது. சோளம் 7 விழுக்காடு நிலப்பரப்பிலும் கம்பு ஒரு விழுக்காடு பரப்பிலும் கேழ்வரகு 1.7 விழுக்காடு பரப்பிலும் இதர சிறுதானியங்கள் 6 விழுக்காடு பரப்பிலும் 2014 – 2015 ஆண்டில் பயிரிடப்பட்டன.

மழைப்பொழிவு, நீர் இருப்பு, காலநிலை, சந்தை விலை போன்ற பல காரணிகளின் விளைவாகப் பயிர்கள் பயிரிடப்படும் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு மாறும்.

- தென் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஆறு காவிரி ஆகும் இது 765 கிலோ மீட்டர் நீளம் கொண்டது.
- காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் மேட்டூர் அணை மற்றும் கல்லணை கட்டப்பட்டுள்ளன.

**நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம்:**

நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம் பாசன நீர் பற்றாக்குறைக்கு நல்ல தீர்வாக விளங்குகிறது. இத்தொழில்நுட்பம் பாரம்பரிய நீர்பாசன முறைகளைவிட பயிர்களில் அதிக மகசூல் கிடைக்க வழி செய்கிறது. சீரான கால இடைவெளியில் அளவாக நீர் பாய்ச்சப்படுவதால் உற்பத்தித் திறன் மற்றும் நீர் பயன்பாட்டுத்திறன் அதிகரிப்பதுடன் பணி ஆட்களின் செலவைக் கணிசமாக குறைத்து, களை வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துகிறது. நுண்ணீர் பாசனத்தின் மூலம் நீர் வழி உரமிடுவதால் உரப்பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பதோடு தரமான விளைபொருளும் கிடைக்கிறது. தமிழகம் ஒரு தண்ணீர் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால் நுண்ணீர் பாசனத் திட்டத்தினை, அதிக தண்ணீர் தேவைப்படும் விவசாய பயிர்களில் தீவிரமாக செயல்படுத்துவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

**பத்து ஆண்டுகால வேளாண் வளர்ச்சி:**

கடந்த 2014 – 15 ஆண்டில் தமிழகத்தில் மிகக் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்களின் அளவு ஒரு கோடியே 27 இலட்சத்து 35 ஆயிரம் டன்களாகும். நெல் மட்டும்

ஏறத்தாழ 80 இலட்சம் டன்கள் விளைந்தது. மொத்த உணவு தானிய உற்பத்தியில் நெல்லின் பங்கு 62 விழுக்காடு ஆகும். 20 விழுக்காடு அளவிற்கு மக்காச் சோளம் விளைந்தது. 7 விழக்காடு சோளமும் 3 விழுக்காடு கேழ்வரகும் விளைந்தன. மூன்று விழுக்காடு அளவிற்கு உளுந்து விளைந்தது. மற்ற உணவுப் பயிர்கள் சிறிய அளவில் விளைந்தன.

பயிரிடப்படும் நிலத்தின் அளவு மாறுவது போலவே உற்பத்தியின் அளவும் வேறுபடும்.

**உற்பத்தித் திறன்:**
பயிர்களின் விளைச்சல் பயிரிடப்படும் பரப்பளவு மட்டுமன்றி பயிர்களின் உற்பத்தித் திறனையும் சார்ந்து இருக்கிறது.

தமிழகத்தில் பெருமளவு பயிர் செய்யப்படும் நெல்லின் உற்பத்தித்திறன் 2014 – 15 ஆம் ஆண்டில் ஹெக்டேருக்கு 4,429 கிலோ என்ற அளவில இருந்தது. இந்தத்திறன் 2010 – 111 ஆம் ஆண்டில் 3,039 கிலோவாக இருந்தது. இதன் வாயிலாக உற்பத்தித் திறன் கூடியுள்ளதை நாம் அறியலாம். நெல்லுக்கு அடுத்தபடியாக அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம் ஹெக்டேருக்கு 8,824 கிலோ விளைந்தது.

சோளம் ஹெக்டேருக்கு 2,093 கிலோவும் கம்பு 3,077 கிலோவும் கேழ்வரகு 3,348 கிலோவும் இதே காலகட்டத்தில் விளைந்தன.

பருப்பு வகைகளில் அதிகமாக பயிரிடப்பட்ட உளுந்து ஹெக்டேருக்கு 645 கிலோ விளைந்தது. கரும்பு ஹெக்டேருக்கு 107 டன் விளைந்தது. மணிலா ஒரு ஹெக்டேரில் 2,753 கிலோ விளைந்தது.

பயிர்களின் உற்பத்தித்திறன் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது. எடுத்துக்காட்டாக நெல்லின் உற்பத்தித்திற்ன 1965 – 66 ஆம் ஆண்டுகளில் 1,409 கிலோவாக இருந்தது. இது 1975 – 76 ஆம் ஆண்டுகளில் 2,039 கிலோவாக உயர்ந்தது. 1985 – 86 ஆம் ஆண்டுகளில் 2,372 கிலோ என மீண்டும் உயர்ந்தது. பத்து ஆண்டுகள் சென்றபின் நெல்லின் உற்பத்தி திறன் 2,712 கிலோ 2014 – 15ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் 4,429 கிலோ. கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழகத்தில் நெல் உற்பத்தித்திறன் மூன்று மடங்கிற்கும் கூடுதலாக உயர்ந்துள்ளது. உணவு தானிய உற்பத்தித் திறனை நோக்கினால் 1965 – 66 ஆம் ஆண்டிற்கும் 2014 – 15 ஆம் ஆண்டிற்கும் இடையே ஏறத்தாழ 3.5 மடங்கு உயர்ந்திருப்பது தெரிகிறது.

தமிழகத்தின் உற்பத்தித்திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே தொடர்ந்து அதிகரித்துள்ளது நமக்குப் புலனாகிறது. ஆனால் இதே காலகட்டத்தில் உணவு தானிய உற்பத்தி செய்யப்படும் பரப்பளவு குறைந்துள்ளது. பரப்பளவு குறைந்த போதிலும் உற்பத்தி குறையாதது மட்டுமல்ல கூடியிருப்பதற்கும் உற்பத்தித் திறனின் உயர்வே காரணமாகும்.

## அலகு– 5 இடம்பெயர்தல்

**அறிமுகம்:**

**இடம்பெயர்தலின் கருத்துப் படிவம்:**

கிராமம் அல்லது நகரம் என அனைத்து விதமான குடியிருப்புப் பகுதிகளிலும் பிறப்பு, இறப்பு மற்றும் இடம் பெயர்தலின் காரணமாகமக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது. மக்கள்தொகை மாற்றத்தின் இம்மூன்று கூறுகளில் பிறப்பும் இறப்பும் கணக்கிடக்கூடிய வகையில் அைந்துள்ளவை. அதே சமயத்தில் இடம் பெயர்தல் என்பது கணக்கிடுத மற்றும் இடம் பெயர்தலின் காரணமாக மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது. மக்கள்தொகை மாற்றத்தின் இம்மூன்று கூறுகளில் பிறப்பும் இறப்பும் கணக்கிடக் கூடிய வகையில் அைந்துள்ளவை. அதே சமயத்தில் இடம் பெயர்தல் என்பது கணக்கிடுதல் மற்றும் வரையறைப் படுத்துவதில் அதிகளவிலான சிக்கல்களை உருவாக்குகிறது. பெரும்பாலும் அவைரும் அதிகமான நேரங்களில் ஓர் இடம் விட்டு இன்னொரு இடம் நகர்ந்து கொண்டே இருப்பதால் இடம் பெயர்தலுக்கான நகர்வு எது என்பதை வரையறுப்பது சுலபமான காரியமாக இருப்பதில்லை.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடம்பெயர்வு இரண்டு அடிப்படைகளில் கணக்கிடப்படுகிறது.

1. பிறப்பிடம் அடிப்படையில் - கணக்கெடுப்பின் போது இருக்கும் இடமும் பிறந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழ்நாள் இடப்பெயர்வு என்று அழைக்கப்படுகிறது.
2. வாழிடம் அடிப்படையில் - கணக்கெடுப்பின்போது இருக்கும் இடமும் கடைசியாக வாழ்ந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழிட அடிப்படையிலான இடப்பெயர்வு என அழைக்கப்படுகிறது.

**இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இடப்பெயர்தலின் பரவல்:**

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மொத்தமக்கள் தொகையான 121 கோடி மக்களினல் 45 கோடிமக்கள் வாழ்தலின் அடிப்படையில் இடம் பெயர்ந்தவராகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் 2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த 7.2 கோடி மக்களில் 3.13 கோடி மக்கள் இடம் பெயர்ந்தவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது நாட்டின் இடம் பெயர்வு 37% இருந்த சமயத்தில், தமிழ்நாட்டின் இடம்பெயர்வு உச்சமாக 43%திகழ்ந்தது.

பொதுவாக இடப்பெயர்வு நகரப் பகுதிகளோடு மட்டுமே தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால், இந்தியாவிலும் தமிழகத்திலும் இடப்பெயர்வின் பரவல் நகர்ப்புறங்களில் இருந்தைவிடகிராமப்புறங்களில் மிகஅதிகமாகக் காணப்படுகிறது. 2011-ல் இந்தியாவில் கிராமப்புறமக்கள் 37% இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்படும் அதேசமயத்தில், நகர்ப்புற இந்தியாவில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை27%உள்ளது. தமிழகத்தில் 41% கிராமப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும்,35%நகர்ப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும், 35% நகரப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தெரியவருகிறது. அதாவது நகர்ப்புறங்களை விட மக்களின் நகர்வு கிராமப்புறங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

மேலும் இடப்பெயர்வு பெரும்பாலும் பெண்களை விட ஆண்களோடு மட்டுமே தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால் தரவுகளை வைத்து ஆராயும் போதுமிக அதிக சதவிகித இடப்பெயர்வு ஆண்களைவிட பெண்களில் மட்டுமே காணப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்களின் ஒட்டுமொத்தக் கணக்கில் 53%பெண்கள் இடம்பெயர்ந்தவர்களாகவும், ஆண்களில் 23% இடம் பெயர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். இதே காலகட்டத்தில் தமிழகத்திலும் இம்மாதிரியான ஒரு சூழ்நிலையே காணப்படுகிறது. பாதிக்கும் மேற்பட்ட, அதாவது 52%பெண்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்றும் ஆண்களில் 35%பேர் இடம் பெயர்ந்தவர்கள் என்றும் காணக்கிடைக்கிறது.

பெண்களில் அதிக அளவிலான இடப்பெயர்வு காணப்படுவதுஏன்? இந்தியாவில் 70% பேர் தமிழ்நாட்டில் 51%பேர் அவர்களது இடப்பெயர்விற்கான காரணமாகத் திருமணத்தை குறிப்பிடுகின்றனர் பெண்கள். திருமணத்தை குறிப்பிடுகின்றனர் பெண்கள் இந்தியாவிலும் தமிழகத்திலும் திருமணமும் திருமணம் சார்ந்த இடப்பெயர்வும் பெண்களின் அதிக அளவிலான இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. வேலையம் வேலை வாய்ப்பும் ஆண்களுக்கு இடையில் இடப்பெயர்விற்கான உந்துசக்தியாக விளங்குகிறது. 2011 ல் இந்தியாவில், ஆண்களில் 28%பேர் தமிழகத்தில் 26%பேர் இடப்பெயர்வுகான முக்கிய காரணமாக வேலையைக் குறிப்பிடுகின்றனர்.

மொத்தத்தில் 2011 கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் ஐந்து பேரில் இருவர் இடம் பெயர்ந்தராக உள்ளனர். கிராமப்புறப் பகுதிகளிலும் பெண்களுக்கு மத்தியிலும் இடப்பெயர்வு மிக அதிக அளவில் காணப்படுகிறத. தமிழ்நாடு இடம பெயர்தலுக்கான ஒரு வரலாற்றை உடையது. வியாபாரம், வணிகம், வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு காரணங்களுக்காகத் தமிழர்கள் பல நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். காலனியாதிக்கத்தின் போது தொழிலாளர்கள் வேலை தேடியும், வருமானத்திற்காகவும் பிறகாலனி நாடுகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். அண்மைக் காலங்களில் தமிழகத்திலிருந்து வளைகுடாநாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு தமிழகத்தில் இடம்பெயர்தலின் அளவு,தன்மைமற்றும் முறைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள தன்னார்வலர்கள் மேற்கொண்ட ஆய்வு கீழ்க்கண்ட விவரங்களை நமக்குத் தெரியப்படுத்துகிறது.

- தமிழ்நாட்டின் மொத்த இடப்பெயர்வாளர்களில் 65மூ பேர் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கும், 35மூ பேர் நம் நாட்டிற்குள்ளும் இடம் பெயர்ந்துள்ளனர்.

- சென்னை மாவட்டம், அதிக எண்ணிக்கையிலான வெளி குடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கின்றது. சென்னையைத் தொடர்ந்து கோயம்புத்தூர், இராமநாதபுரம் மற்றும் திருச்சி மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

- கடலூர், கரூர், திருவண்ணமாலை, வேலூர், நாமக்கல், சேலம். திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள் மிகக்குறைந்த அளவிலான வெளி–குடியேற்ற எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளன.

இவ்வாய்வு தமிழகத்தில் இடம் பெயர்ந்தவர்களின் சேருமிடம் மற்றும் பாலினப் பிரிவுகுறித்தும் பல தகவல்களை நமக்குத் தருகின்றது.

- வெளிநாடுகளில் குடியேறுபவர்களின் 20% சிங்கப்பூரைத் தேர்வு செய்துள்ளனர். 18% ஐக்கிய அரபு எமிரேட்டிலும்,16% சவுத அரேபியா, 13% பேர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இடம் பெயர்ந்து குடியேற ி உள்ளனர். மலேசியா, குவைத், ஓமன், கத்தார், ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகியவை இடம்பெயர் வாளர்கள் சேரும் நாடுகளாக 2015 ஆம் ஆண்டு ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச குடியேறுபவர்களில் 15% பெண்களாகவும், 85% ஆண்களாகவும் உள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து குடியேறு பவர்களின் கல்வித்தகுதி குறித்தகேள்விக்கு 7% கல்வியறிவு அற்றவர்கள் என்றும், 30% பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் என்றும், பன்னிரண்டாம் வகுப்பு வரை முடித்தவர்கள் 10%என்றும் தொழில் பயிற்சிபெற்றவர்கள் 15%என்றும் பட்டப்படிப்புபடித்தவர்கள் 11%என்றும் தொழில்கல்வி முடித்தவர்கள் 12%என்றும் முதுகலைபட்டதாரிகள் 11%உள்ளனர் என்றும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

இவ்வளவு இடம்பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வேலையின் தன்மைகுறித்தும் வெளிப்படுத்துகிறது. மிகவும் திறமைவாய்ந்தவேலைகளிலும்,சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளிலும், நடுத்தரமான வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

**இடம்பெயர்தலுக்கான காரணிகள்:**

ஒரு சமுதாயத்தில் ஏற்படும் இடப்பெயர்வின் தன்மை மற்றும் அதன் அளவினை, அச்சமுதாயம், அடைந்த வளர்ச்சியின் போக்கைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. பொருளாதாரத்தில் விவசாயம் மற்றும் தொழில்துறைகளால் ஏற்பட்டிருக்கக கூடியவளர்ச்சியின் வீதங்கள் மற்றும் அதன் அளவுகோலைக் கொண்டே இடப்பெயர்வின் வடிவங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் விவசாயம் மற்றும் தொழில் துறையில் கடந்த ஆண்டுகளில் வளர்ச்ச ிஏற்பட்டு இருந்த போதிலும் இவ்வளர்ச்சியானது சொத்து மற்றும் வருமானப் பகிர்வில் உள்ளஏற்றதாழ்வுகளைச் சமன் செய்யும் விதமாக அமையவில்லை. மேலும் ஏழ்மைஎன்பதுதொடர் சிக்கலாகத் திகழ்ந்துவருகிறது.

| |
|---|
| உலகிலேயே மெக்ஸிகோ–அமெரிக்கஐக்கியநாடு இடையேயான இடப்பெயர்வு பாதையே 2010 ஆம் ஆண்டின் மிகப் பெரிய இடப்பெயர்வுப் பாதையாகும்.<br>உலகிலேயே நீண்ட தூரம் இடம் பெயரும் பறவை‘ஆர்டிக் டெர்ன்’ (Artic tern) பறவையாகும். |

வளர்ச்சிப் போக்கானது, வளர்ச்ச ிமண்டலங்களால் நிலம் சார்ந்த சமத்துவ மின்மையை உருவாக்கியுள்ளது இந்தியா போன்றவளர்ச்சியடையும் பொருளாதார சமூகத்தில் காணப்படும் இடப்பெயர்வுகளைவளர்ச்சிப் போக்குகளால் உருவாகியுள்ள பொருளாதார, சமூகமற்றும் இடம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் தீர்மானிக்கின்றன.

எனவே இடப்பெயர்வு நகர்வு பல்வேறு வகைப்பட்ட உள் நகர்வுகளைக் கொண்டதாக அமைகிறது. உதாரணமாக கிராம புறநகர்ப்புற இடப்பெயர்வு நகர்வை நாம் எடுத்துக்கொண்டால், அதற்குள் கிராமப்புற ஏழை,பணக்காரர் ஆகியோருக்கு அவரவருக்கான காரணங்கள், உந்துசக்தி, இடப்பெயர்வு முறை மற்றும் இடப்பெயர்வினால் ஏற்படக்கூடியவிளைவுகள் ஆகிய உள்ளோட்டங்களைக் கொண்டதாக உள்ளது. ஏழைமக்கள் கிராமப்புறங்களில் நிலவிவரும் தங்களது துயரநிலையிலிருந்து தங்கள் வாழ்வாதாரத்ஐ த மீட்டுக்கொள்ளும் உத்தியாக இடப்பெயர்வை மேற்கொள்கின்றனர். அதேசமயம் சற்று வசதிவாய்ப்புகள் உடையமக்கள் தங்களதுதுயரநிலையில் இருந்து மீள்வதற்காகவோ அல்லது வாழ்வாதார உத்தியாகவோ பயன்படுத்தாமல், தங்கள் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இடம் பெயர்தலை மேற்கொள்கின்றனர்.

நிலப்பரப்பு சார்ந்து நோக்கும் போது, நகர்ப்புறமானாலும் கிராமப்புறமானாலும் வளர்ச்சி அடைந்த நிலப்பகுதிகளில் குவியும் தன்மை உடையவர்கள் இடம் பெயர்ந்தவர்கள்.

இடம்பெயர்தலின் வடிவம் சிக்கலானபலதரப்பட்டநகர்வுகளைஉள்ளடக்கியதாகும்.

- கிராமப்புறத்தில் இருந்துகிராமத்திற்கு,கிராமப்புறத்திலிருந்துபுகர்ப்புறம் நோக்கி, நகர் புறத்திலிருந்துகிராமம் நோக்கி, நகர் புறத்திலிருந்து கிராமம் நோக்கி, நகர் புறத்திலிருந்துநகரம் நோக்கிய இடப்பெயர்வுகள்.
- குறுகிய, நடுத்தரமான மற்றும் நீண்ட தூர இடப்பெயர்தல் நகர்வுகள்
- நீண்டகால நிரந்தர இடப்பெயர்வுமற்றும் குறுகிய காலசுழற்சி முறையிலான நகர்வுகள்.

ஒவ்வொரு இடப்பெயர்வுநகர்வும் வெவ்வேறு வகையான வகுப்புசார்ந்த குடியேறுபவர்களை கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இடப்பெயர்தலும் அவற்றிற்கான சொந்த காரணங்களைக்

கொண்டவை. இடப்பெயர்தலின் அளவு மற்றும் தன்மை ஆகியவை கீழ்க்கண்டவற்றைச் சார்ந்துள்ளன.

- இடப்பெயர்தல் துவங்கும் இடத்தில் மக்கள் அனு பவிக்கும் அழுத்தம் மற்றும் விருப்பங்கள்
- இடப்பெயர்தல் துவங்குமிடத்தில் மக்களின் நகர்வு மீது திணிக்கப்படும் கட்டுபாடுகள்
- சேருமிடத்தில் கிடைக்கக் கூடியவாய்ப்புகள் மற்றும் அவை குறித்த தகவல்கள்
- குடியேற்றச் செலவு

**இடம்பெயர்வுகொள்கைகள்:**

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இடம்பெயர்தல் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான கொள்கைகளை உருவாக்கும் அடிப்படைகள்.

- இடம்பெயர்தலின் அளவை குறைப்பதற்கான வழிகள்: அதிக அளவிலான இடப்பெயர்தல் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையினைப் பிரதிபலிக்கிறது. எனவே கிராமப்புறங்களின் மீது தனிக்கவனம் இருத்தல் வேண்டும். ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையை குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவிலான இடம் பெயர்தலை குறைப்பதற்கு உதவியாக அமையும்.

- இடம் பெயர்ந்து நகர்தலைத் திசை திருப்புதல்: பெருநகரங்கள் நோக்கி குவியும் இடம் பெயர்தலைத் திசை மாற்றி அமைத்திடும் கொள்கைகள் விரும்பத்தக்க கொள்கை முடிவுகள் ஆகும். நிலப்பரப்புச் சார்ந்தகுடி பெயர்தலால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதற்கு, நகர்புறங்களை பரவலாக்கும் வடிவமைப்புகள் பொருத்தமான உத்திகளாக அமைகின்றன.

## 10th Book

### அலகு – 1 மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

**அறிமுகம்:**

நீங்கள் நீண்ட காலத்திற்க்கு பிறகு, வெளி நாட்டில் வசிக்கும் ஒரு நல்ல நண்பருடன் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்கிறீர்கள். அப்போது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்கிறார். ‘‘என்னுடைய உடல் ஆரோக்கியமாக உள்ளது, மேலும் நான் படிப்பில் முன்னேறிக் கொண்டு இருக்கிறேன், அதனால் நான் நன்றாக இருக்கிறேன் நன்றி” என்று பதில் அளிக்கலாம். அல்லது ”மிக நன்றாக இல்லை. என்னுடைய ஆரோக்கிய பிச்சனைகளுக்கு சிகிச்சைப் பெற வேண்டியுள்ளது. மேலும் என்னுடைய படிப்பை அது மிகவும் பாதித்துள்ளது” என உங்கள் பதில் இருக்கலாம்.

”இந்தியா எப்படி செயல்படுகிறது? இந்த கேள்விக்கு உங்கள் பதில் மிகுந்த சவாலாக இருக்கும். ஏனென்றால், நாட்டின் மொத்த நிலைமையை அவர் கேட்கிறார். அதிர்ஷ்டவசமாக, பொருளாதார வல்லுநர்கள் உங்களுடைய நண்பருடைய கேள்விக்கு பதிலளிக்க பல்வேறு நடவடிக்கைகளை வழங்கியுள்ளனர். இது GDP அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி மிக பரவலாக பயன்படுத்தக் கூடிய ஒன்றாகும். ”இந்தியா நன்கு செயல்படுகிறது” அல்லது ”நாம் விரும்புவது போல் இந்தியா நன்றாக செயல்படவில்லை” என மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பற்றி தெரிந்துக் கொள்ளவும் ஒரு வழியாகும்.

**GDP யின் வரையறை/ இலக்கணம்:**

இந்திய எவ்வாறு செயல்படுகிறது என்பதனை GDP விளக்குகிறது அதனால்,GDP என்றால் என்ன என்பதைப் பற்றி முதலில் நீங்கள் புரிந்துக் கெள்ள வேண்டும்.

ஹோட்டலில் இரண்டு வகையான பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கலாம். என்று ஒரு பொருளியல் வல்லுநர் கூறலாம். வெளிப்படையாக இட்லி மற்றும் தேனீர் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது. அவைகளை நீங்கள் தொடக்கூடியவை, பார்க்கக்கூடியவை மற்றும் தொட்ட உணரக்கூடியவைகளாகும். தொடக்கூடிய பொருள்களை ”பண்டங்கள்” என்று பொருளியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். இந்த பண்டங்கள் இலவசம் அல்ல, ஏனெனில் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

தொடக்கூடிய பொருட்களை. பண்டங்கள் என்று அழைத்தாலும், ஏதேனும் உற்பத்தி செய்யப்பட்டு இருந்தாலும் நீங்கள் அதை உணர முடியாது. சமையல்காரர்கள் செய்து முடித்த வேலை மற்றும் அந்த உணவைப் பரிமாறும் மக்கள், சமையல் மற்றும் சேவை நடவடிக்கைகளை பண்டங்கள் போல் யாரும் தொட்டு உணரக் கூடியது அல்ல. ஆனால், நீங்கள் உணவினை உண்டு அனுபவிக்கலாம். பொருளியல் வல்லுநர்கள் இந்த நடவடிக்கையை “பணிகள்” என்று அழைக்கின்றனர். பண்டங்கள் பொருத்தவரை, இவைகளும் மற்றும் பிற பணிகளும் இலவசம் அல்ல, ஏனெனில் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஹோட்டலில் என்ன நடக்கிறதோ அதே போல் நாடு முழுவதும் நடக்கிறது. பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்பட்டு அதனை நாம் பணம் செலுத்தி பெறுகின்றோம். இவற்றையே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவிடுகிறது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியை கீழ்க்கண்டவாறு வரையறுக்கலாம்:**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கிறோம்.

இந்த வரையறையில் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானதாகும்.

பண்டங்கள் மற்றும் பணிகள்: பண்டங்கள் என்பது தொடக் கூடிய பொருளும், பணிகள் என்பது தொட்டு உணர முடியாததத்துமான நடவடிக்கைகள் என்று இப்போது உங்களுக்கு தெரியும்.

அங்காடி மதிப்பு: அங்காடியில் விற்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை.

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளை அளவிடுவது மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும் (GDP). இதற்கான உற்பத்தி செய்கின்ற அனைத்து பண்ட பணிகளையும் சேர்க்க வேண்டும். எனினும், ஒரு நாடு அரிசி, காலணிகள், ரயில்கள், பால், கடிகாரம், புத்தகம் மற்றும் மிதிவண்டி போன்ற பரந்தபட்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது. அளவை மட்டும்ட கணக்கில் எடுத்துக் கொண்டால் இதை சேர்க்க அர்த்தமுள்ள வழிகள் ஏதுமில்லை. எடுத்துக்காட்டாக, எவ்வாறு 1000 லிட்டர் பாலுடன் 500 கடிகாரத்தை சேர்க்க முடியும்? இதைப்போல பணிகளின் அளவை சோக்க அர்த்தமுள்ள வழிகள் இல்லை. மருத்துவர்களின் பணிகள், காவலர்கள், தீயாணைப்பு படை, ஆசிரியர்கள், பேருந்து ஒட்டுநர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் போன்ற பரந்த பணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு வகைப் பண்டத்தின் அளவை மற்றொரு வகையான பண்டத்தின் அளவுடனோ அல்லது ஒரு வகை பணியை மற்றொரு வகையான பணிவுடனோ சேர்க்க முடியாது. கட்டாயமாக பண்டங்கள் உற்பத்தியையும், பணிகள் உற்பத்தியையும் கூட்டுவதற்கு எந்த ஒரு விவேகமான வழியுமில்லை. எப்படி ஒரு நாட்டில் உற்பத்தி செய்த பாலுடன், ஆசிரியர் பணியை சேர்க்க முடியும்.

நம் நாட்டில் இந்திய செலாவணியான ருபாயில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளை அளவிடுவதற்கு மொத்த உள்நாட் உற்பத்தியை பயன்படுத்தி இம்மாதிரியான பிரச்சனைகள் தீர்க்கப்படுகிறது. அங்காடியில் விற்கும் பண்டங்கள் மற்றும் பணிகளை பண மதிப்பால் அளவிடலாம். எந்த ஒரு பண்ட, பணிகள் அங்காடியின் மதிப்பில் சேர்க்கப்படுகிறதோ அது மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். (GDP).

இது எதைக் குறிக்கிறது என்றால், ஒரு பண்டத்தையோ அல்லது பணியையோ அங்காடியில் விற்கவில்லையெனில் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்ப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு கணினி மையத்தில் ஒரு கையெழுத்து பிரதியை தட்டச்சு செய்ய நீங்கள் ரூ 50 கொடுக்கிறீர்கள் என வைத்துக் கொண்டால், அதன் பணியை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்திடலாம். ஏனெனில் அது அங்காடியில் விற்கப்படுகிறது. நீங்களே அந்த கையெழுத்து பிரதியை தட்டச்சு செய்தால், அந்த தட்டச்சு செய்யும் பணியை மொத் உள்நாட்டு உற்பத்தியில் சேர்ப்பதில்லை. ஏன் எனில் நீங்கள் அங்காடியில் விலை கொடுத்து அதை வாங்கவில்லை என்பதேயாகும்.

**இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்:**

"இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்" என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகும். இது மற்ற பண்ட பணிகளின் ஒரு பகுதியாக அமையாது. எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறதோ மற்றும் மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய ஒரு பகுதியாகிறதோ அதை "இடை நிலை பண்டங்கள்" என்று டைலர் கோவன் மற்றும் அலெக்ஸ் டாபர்ராக் போன்ற பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறுதிநிலை பண்டங்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிட இடைநிலை பண்டங்களை கணக்கில் எடுப்பதில்லை. ஏனெனில் அவற்றின் மதிப்பு இறுதிநிலை பண்டத்தில் சேர்க்கப்படுகிறது. ஆகவே இடை நிலை பண்டத்தின் மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்தால், அதன் விளைவை "இரு முறை கணக்கிடுதல்" என அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஹோட்டலில் வாங்கும் ஒரு கோப்பை தேனீர் (Tea) இறுதிநிலை பண்டமாகும். ஏனெனில் இது நுகரப்படக்கூடியது. வேறு எந்த பொருளின் பகுதியாக இருக்காது. ஆகவே ஒரு கோப்பை தேனீரின் அங்காடி மதிப்பை இறுதிப் பண்டமாக இருப்பதால் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துள்ளனர். தேனீரில் கலக்கப்பட்ட சர்க்கரை ஒரு இறுதிநிலை பண்டம் இது தேனீர் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு தேனீரின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஒரு கோப்பை தேனீரின் விலை 10 என்றால் அதில் சர்க்கரையின் மதிப்பு 2 – ஆகவே ஒரு கோப்பை தேனீரின் விலையில், ஒரு தேக்கரண்டி சர்க்கரையின் விலை 2- சேர்க்கப்பட்டுள்ளது. சர்க்கரையின் மதிப்பை GDP –யில் கூட்டினால் ஒரு தேக்கரண்டி சர்க்கரை, மீண்டும் ஒரு கோப்பை தேனீர் என இருமுறை கணக்கிடப்படும். இதை "இரு முறை கணக்கிடுதல்" என்பர். இதை தவிர்ப்பதற்கு இடைநிலை பண்டமான சர்க்கரையை GDP யில் சேர்ப்பதில்லை.

கடைகளில் தேனீர் தயாரிக்கபயன்படுத்தப்படும் பாத்திரங்களின் சந்தை மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்பட வேண்டுமா? பாத்திரங்கள் இறுதிநிலைப் பண்டங்கள் அல்ல, ஆனால் தேனீர் தயாரிக்க இது ஒரு இடைநிலை பண்டமாக கருதப்பட்டு GDP யில் சேர்க்கக் கூடாது. ஒரு கோப்பை தேனீரில் பாத்திரங்கள் இறுதி நிலை பண்டத்தின் ஒரு பகுதியாக அமையாது. அதன் காரணமாக சர்க்கரையை மட்டும் GDP யில் சேர்க்க வேண்டும்.

**நாட்டு வருமானம்:**
நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானத்தை மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**நாட்டு வருமானத்தை அளவிட தொடர்புடைய பல்வேறு கருத்துகள்:**

1. **மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**
   மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள் மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.
   GMP = C + I + G + (X – M) + NFIA
   C -
   I -
   G -
   X – M –
   NFIA -

2. **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):**
   ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

3. **நிகர நாட்டு உற்பத்தி (NNP):**
   மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP)– தேய்மானம்.

## 10th பொருளாதாரம்
## தொகுதி I
## அலகு –2
## உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

**அறிமுகம்:**


நவீன நாட்களில் அரசியல்வாதிகள், பொருளியல் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்களிடையே அதிகமாக பேசக்கூடிய கருத்துக்களாக தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) இருக்கின்றன. இந்த மூன்று வெளிப்பாடுகளும் புதிய பொருளாதார கொள்கையின் தூண்களாக ஆதரவு தெரிவித்து நமது அரசாங்கம் 1991 லிருந்து இவற்றை அமைத்து நடைமுறைப்படுத்தியது.

**உலகமயமாக்கல்:**

உலகமயமாக்கல் என்பது பண்டங்கள் மற்றும் பணிகள், தொழில்நுட்பம், மூலதனம், உழைப்பு அல்லது மனித மூலதனம் ஆகியவற்றின் தடையில்லா ஓட்டத்தில், எந்த தடையும் ஏற்படாமல் உலகின் பல்வேறு பொருளாதாரங்களை ஒருங்கிணைப்பதற்கான செயல்முறையாகும். உலகமயமாக்கலின் கீழ் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான சர்வதேச சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**உலகமயமாக்கலின் வரலாறு:**

உலகமயமாக்கல் என்ற சொல் பேராசிரியர் தியோடோர் லெவிட் என்பவர் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளில் விவாதிக்கப்பட்டது.




**தொன்மையான உலகமயமாக்கல்:**

சுமர் மற்றும் சிந்து வெளி நாகரிகத்தின் இடையேயான வர்த்தக உறவுகள் உலகமயமாக்கல் என்ற ஒரு வடிவத்தை மூன்றாம் நூற்றாண்டுகளில் உருவாக்கியது. என்று ஆண்ட்ரே குந்தர் ஃபிராங்க்வாதிட்டார். உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் ஆரம்ப வடிவத்தை தொன்மையான உலகமயமாக்கல் என்று கிரேக்க (Hellenistic Period) காலத்தின் போது அழைக்கப்பட்டது. வணிக ரீதியாக நகர்ப்புற மையங்கள் கிரேக்க கலாச்சாரத்தின் மையத்தில் ஆர்வமாக சுற்றி வந்தன. இது இந்தியாவிலிருந்து ஸ்பெயினுக்கு பரந்து விரிந்து அலெக்ஸாண்டிரியா. ஏதென்ஸ் மற்றும் அந்தியோக்கி போன்ற நகரங்களில் அதன் மையத்தில் இருந்தது. ரோம் பேரரசுக்கும், பார்த்தியன் பேரரசுக்கும் மற்றும் ஹன் வம்சத்துக்கும் இடையேயான வர்த்தக தொடர்பில் உலகமயாக்கலின் ஆரம்ப வடிவம் இந்த பேரரசுகளுக்கு இடையேயனா வணிக உறவுகளால் பட்டு சாலையின் (Silk Route) வர்ச்சியை ஊக்கப்படுத்தியது.

இஸ்லாமிய பொற்காலம் கூடு உலகமயமாக்கலில் ஒரு முக்கிய ஆரம்பகட்டமாக இருந்து வந்தது. மங்கோலிய பேரரசின் வருகை, மத்திய கிழக்கு மற்றும் சீனாவின் வர்த்தக மையங்களுக்கு உறுதியற்றதாக இருந்தாலும் பட்டு சாலை வழியாக பயணிக்க வசதியாக இருந்தது. இந்த

நவீனத்திற்கு முந்தைய கால கட்டத்தில் நடந்த உலக பரிமாற்றத்தை சில நேரங்களில் தொன்மையான உலகமாயமாக்கல் என்றழைக்கப்படுகிறது.

**இடைப்பட்ட உலகமயமாக்கல்:**

உலகமயமாக்கலின் அடுத்த கட்டம் இடைப்பட்ட உலகமயமாக்கல் ஆகும். 16 மற்றும் 17 ம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய பேரரசுகளின் எழுச்சியால் முதலில் போர்ச்சுகீசியர்கள், ஸ்பானிஷ் பேரரசுகள்,டச்சுக்காரர்கள் மற்றும் பிரிட்டிஷ் பேரரசுகளின் கடல் வழி வாணிபம் மேற்கொண்டனர். உலகமயமாக்கல், 17ம் நூற்றாண்டில், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் (1600) தனியார் வணிக நிறுவனம் போன்று உருவாக்கப்பட்டு முதல் பன்னாட்டு நிறுவனம் என அழைக்கப்பட்டது. மேலும், முதல் டச்சு கிழக்கு இந்திய நிறுவனம் (1602) உருவாக்கப்பட்டு வாணிபம் நடைபெற்றது. 16ம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியா மற்றும் பிரேசில் வரை வர்த்தக நிறுவனங்களை (தொழிற்சாலைகள்) நிறுவ ஆரம்பித்தனர்.

**நவீன மயமாக்கல்:**

19ம் நூற்றாண்டில் உலமயமாக்கலின் வருகை நவீன வடிவத்தை நெருங்கியது. 19 மற்றும் 20 ம் நூற்றாண்டுகளுக்கு இடையே நடைபெற்ற உலகமயமாக்கல் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை கொண்டிருந்தன. அவை, இந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டது. மற்றொன்று, 20 ம் நூற்றாண்டில் வணிக உற்பத்தியில் அதிக பங்கினை பெற்றிருந்ததுடன், சேவைகள் வர்த்தகம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி வணிகத்தில் எழுச்சியுற்றிருந்ததாகும்.

சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற பன்னாட்டு வர்த்தக ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன. 1890 லிருந்து முதல் உலகப்போர் வரை நிலையற்ற வர்த்தகம் ஒரு பிரச்சனையாக இருந்தது. ஆனால் போருக்கு பிந்தைய காலத்தில் பெரும்பாலும் பொருளாதார விரிவாக்கத்தால் நிலைப்பு தன்மைக்கு வழிவகுத்தது.

**வரலாற்றுப் பார்வையில் தென் இந்தியாவில் வர்த்தகம் மற்றும் வணிகர்கள்:**

வர்த்தகம் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், விரிவுபடுத்தவும் வணிகர்கள் தென்னிந்திய வர்த்தகக் குழுக்களை உருவாக்கினர்கள். இந்திய கலாச்சாரத்தை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வழிகளாக வர்த்தகக் குழுக்கள் இருந்தன. தென்னிந்தியாவில் வர்த்தகம் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து பின்பு அது பல்லவர்கள் ஆதிக்கத்திற்கு மாறியது.

**ஆரம்பகால வர்த்தகர்கள்:**

1053 AD (CE) யில் கலிங்க வர்த்தகர்கள் (நவீன ஒரிசா) சிவப்பு வண்ண கல் அலங்கார பொருட்களை வர்த்தகத்திற்கு கொண்டு வந்தனர். மேலும், ஆரம்ப நாட்களில் பருத்தி ஜவுளியை தென்கிழக்கு ஆசியாவிற்கும் கொண்டு வந்து வர்த்தகம் செய்தனர். மத்திய காலத்தில் தெற்கு இந்தியாவில் வர்த்தகர்களாக கத்ரிகாஸ், நாகராஸ், மும்முரிதந்தாஸ், அய்யாவோலி 500, செட்டீஸ், பிருடாஸ், கோவாரஸ் போன்ற பல வர்த்தக குழுவினர் செயல்பட்டனர். தொகராஸ், கோவாரஸ் போன்ற சில வர்த்தக குழுவினர் ஆலய வளாகத்தில் மட்டுமே சந்தித்து வர்த்தகத்தை மேற்கொண்டனர்.

**தென் இந்தியாவில் ஐரோப்பிய வணிகர்கள்:**

இந்த காலத்தில் இந்தியாவிற்கு பல்வேறு ஐரோப்பிய நிறுவனங்கள் வருவதற்கு வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக இருந்தது. வாஸ்கோடா காமாவால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக புதிய கடல் பாதை கண்டுபிடிக்கப்பட்டது. அது நாகரீக உலகத்தின் மீது பல விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியாவின் கடலோர மற்றும் கடல் வர்த்தகம் ஐரோப்பியர்களால் முற்றுரிமை பெற்றிருந்தது.

**போர்ச்சுகீசியர்கள்:**

வாஸ்கோ-டா-காமாவின் தலைமையின் கீழ் போர்ச்சுகீசியர்கள் மே 17, 1498 ல் கோலிக் கோட்டில் வாணிபத்திற்காக வந்தனர். வாஸ்கோ-டா-காமாவால் போர்ச்சுக்கல்லுக்கு கொண்டு வந்த பொருட்களின் லாபமானது, இந்தியா முழுவதும் பயணம் செய்த செலவைவிட60 மடங்காகும்.

1500 AD (CD) ல் பெட்ரோ ஆல்வாரேஸ் கபரல் இந்தியாவிற்கு வருகைப் புரிந்தார். மேலும் 1502ல், வாஸ்கோ – டா-காமாவின் இரண்டாவது பயணத்தினால் இந்தியாவில் காலிகட், கொச்சின் மற்றும் கண்ணனூர் ஆகிய இடங்களில் வர்த்தக நிறுவனங்கள் நிறுவுவதற்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் தலைநகரமாக கொச்சின் இருந்தது.

**தென்னிந்தியாவில் டச்சுக்காரர்கள்:**

1596 ல் இருந்து டச்சுக்காரர்கள் பல பயணங்கள் மேற்கொண்டு, டச்சு கிழக்கு இந்திய நிறுவனத்தை 1602 ல் உருவாக்கினர். அட்மிரல் வான் டெர் ஹகேன் என்பவரால் டச்சு நிறுவனம் மசூலிப்பட்டினம், பெத்தபோலி (நிஜாம்பட்டினம்) தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது. 1610 ம் ஆண்டில் சந்திரகிரி ராஜாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி புலிகாட்டில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவினர். இண்டிகோ, சால்ட்பேட்டர் மற்றும் வங்க கச்சா பட்டு போன்ற இதர பொருட்கள் டச்சுக்காரர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக புலிகாட் இருந்தது. 1659 ல் போர்ச்சுகீசியர்களிடமிருந்து தஞ்சாவூர் கடற்கரையில் இருந்த நாகப்பட்டினத்தை கைப்பற்றியது.

**பிரிட்டிஷ் நிறுவனம் (இங்கிலாந்து):**

டிசம்பர் 31, 1600 அன்று, கிழக்கு இந்திய கம்பெனிக்கு நிறுவனம் துவங்குவதற்கு எலிசபெத் ராணியால் பட்டயம் வழங்கப்பட்டது. தென் கிழக்கு கடற்கரையில், ஆங்கிலேயர்கள் 1611 ல் மசூலிப்பட்டினத்திலும், 1626 ல் புலிக்காட் அருகிலும் நிறுவினார்கள். கோல்கொண்டாவின் சுல்தான், ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ∴பயர்மேன்" என்ற பட்டத்தை வழங்கி, 1632 ல் அவர்களை தங்கள் 'ராஜ்ய துறைமுகங்களில்" இலவசமாக வர்த்தகம் செய்யவும் அனுமதி வழங்கினார். 1639 ம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் சென்னையில் ஒரு வலுவான நிறுவனம் கட்டப்பட்டது. பின்பு அது செயின்ட் ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்பட்டது. கோரமண்டல கடற்கரையிலுள்ள மசூலிப்பட்டினம் விரைவில் ஆங்கில குடியேற்றத்தின் தலைமையகமாக மாறியது.

**டேனிஷ்காரர்கள்:**

டேனிஷ்காரர்கள், 1616 ம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்து டேனிஷ் கிழக்கு இந்திய நிறுவனம் ஒன்றை உருவாக்கினர். 1620 ம் ஆண்டில் டேனிஸ், இந்தியாவில் டேனிஷ் குடியேற்றங்களால் டிராங்குபாரை (தமிழ்நாடு) தலைமையிடமாக நிறுவியது. ஆனால், அவர்கள் இந்தியாவில் தங்களை வலுப்படுத்த தவறியதால், 1845 ல் அனைத்து குடியேற்றங்களையும் ஆங்கிலேயர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு அவர்களுக்குகே விற்றுச் சென்றனர்.

**பிரரெஞ்சுகாரர்கள்:**

இந்தியாவில் பிரெஞ்சுகாரர்கள், 1668 ம் ஆண்டில் கோல்கொண்டாவின் சுல்தானிடம் அனுமதி பெற்று, முதல் பிரெஞ்சு தொழிற்சாலையை நிறுவினர். 1693 ம் ஆண்டு டச்சுகாரர்கள் பாண்டிச்சேரியை கைப்பற்றி மீண்டும் பிரெஞ்சுகாரர்களிடமே ஒப்படைத்தனர். 1701 ல் பாண்டிச்சேரி பிரெஞ்சின் தலைமையிடமாக மாறியது. 1742 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் நோக்கங்களைத் தொடர்ந்து கிழக்கு மாகாணங்களில் குடியேற்றங்கள் வணிக ஆதாயத்திற்கான விருப்பத்தை மறைக்கத் தொடங்கியது.

சமீபத்தில் இந்திய அரசு, தென்னிந்தியாவில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை (SEZ) குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் ஏற்படுத்தியது. ஏற்றுமதியை அதிகரிக்கும்

நோக்கில் நாங்குனேரி SEZ, எண்ணூர் SEZ, கோயம்புத்தூர் SEZ என தமிழ்நாட்டில் சில SEZ கள் ஆரம்பிக்கப்பட்டது.

**இந்தியாவில் உலகமயமாக்கல்:**

இந்தியாவில் 1980 – 81 க்கு பிறகு 1990 – 91 களில் நடைபெற்ற வளைகுடா போரின் காரணமாக எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் மேற்கு ஆசியாவில் போர்க்குணம் ஆகியவற்றின் காரணமாக கடுமையான அயல்நாட்டு வாணிபச் செலுத்து சமநிலையின் சிக்கல்கள் குறிப்பிடத்தக்கது.

புதிய அரசு ஜுன் 1991 ல் பொறுப்பு ஏற்றவுடன் இந்திய அயல்நாட்டு செலுத்து சமநிலையில் முன் எப்போதும இல்லாத நெருக்கடியை சந்தித்தது. மத்திய, மாநில அரசுகளின் நிதி கிட்டத்தட்ட ஒரு நிதியில்லா நிலைமையை அடைந்தது என்றும் கூறலாம்.

சில சர்வதேச நிறுவனங்களால் இந்தியாவின் கடன் மதிப்பீடு குறைந்ததுடன், இங்கிருந்து அதிகமான மூதனமும் வெளியே சென்றது.

இந்தியா சர்வதேச சந்தையில் தனது கடன் தரும் தகுதியை இழந்ததால், இங்கிலாந்து வங்கியில் (Bank of England) 40 டன் தங்கத்தை அடமானம் வைத்தது. இந்த சூழ்நிலையில், 1991 – 92 ல் அரசாங்கம் ஜுலை 1991ல் தனது வரவு செலவுத் திட்டத்தை தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) ஆகியவற்றின் தொடர்ச்சியான கொள்கை மாற்றங்களுடன் வழங்கியது. இந்த கொள்கைகள் இந்தியாவில் 1994 ம் ஆண்டில் “டங்கல் வரைவை” கையெழுத்திட்ட போது பலப்படுத்தப்பட்டது.

**உலகமயமாக்கல் சார்ந்த சீர்திருத்தங்கள்:**

**(இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை):**

1. சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
2. பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
3. இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
4. வெளிநாட்டு தனியார் துறை நடப்பு கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
5. அயல்நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக திருத்தப்பட்டது.
6. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான நீர்மை விகிதம் (SLR) அதிகரிக்கப்பட்டது.

**பன்னாட்டு நிறுவனம்: (MNC):**

நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும். பன்னாட்டு நிறுவனங்களை (Multi National company) சர்வதேச நிறுவனங்கள் (Trans National Corporation) அல்லது பன்னாட்டு அமைப்பு (Multi National Enterprise) எனவும் கூறலாம்.

## MNC யின் பரிமாண வளர்ச்சி:

கிழக்கு இந்திய நிறுவனம், இந்தியாவை ஒரு வர்த்தக நிறுவனமாகக் கொண்டு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது. 1920 களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களை கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன. 1950 களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறைகளிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளது. இவற்றில் மிகப்பெரியது அமெரிக்காவாகும்.

இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும். 1971 ஆம் ஆண்டில் அமெரிக்க நிறுவனங்கள் மொத்த உலக பங்குகளில், வெளிநாட்டு நேரடி முதலீட்டில் (FDI) 52 சதவீதத்தைக் கொண்டிருந்தன. மேலும், இங்கிலாந்து 14 சதவீதம், பிரான்ஸ் 5.0 சதவீதம் ஜெர்மனி 4.4 சதவீதம் மற்றும் ஜப்பான் 2.7 சதவீதம் பங்கினையும் கொண்டிருந்தன. 1969 ம் ஆண்டு அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் மட்டும் தோராயமாக 140 பில்லியன் டாலர் மதிப்புள்ள பண்டங்களை உற்பத்தி செய்தது.

ஆசிய நாடுகளில் 34 சதவிகிதமும் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் 22 சதவிகிதமும் கணிசமான வருமானம் பெறப்படுவதை அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் உணர்ந்தது. பின்னர் அவை புரவல் நாடுகளின் பெரும் அதிகாரங்களைப் பெற்றனர். நிறுவனங்கள் உணர்ந்தது. பின்னர் அவை புரவல நாடுகளின் பெரும் அதிகாரங்களைப் பெற்றனர். இது சர்வதேச எல்லைகளுக்குள் சுதந்திரமான நிதி ஓட்டத்தை சீராக்கியது. அவர்கள் இந்த நாடுகளின் சிறந்த அறிவாளிகளை (ஆற்றல் மிகுந்தவர்கள்) பெற்றுக்கொண்டு நியாயமற்ற நடைமுறைகளை மேற்கொண்டனர். அவர்களின் பெரிய ஆதாரங்களைப் பயன்படுத்தி பன்னாட்டு நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யவும், புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை சுரண்டிக்கொள்ளவும் மற்றும் புதிய செயல்முறையை கண்டறியவும் செய்தனர்.

### இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி:

இந்திய தொழில்துறையில் பன்னாட்டு நிறுவனம் ஒரு பொதுவான வடிவத்துடன், இந்திய தொழிலதிபர்களின் ஒத்துழைப்புடன் நுழைந்தது. 1980 களில் தாராளமயமாக்களின் போக்குகள் வெளிநாட்டு ஒத்துழைப்புக்கு கணிசமான பங்கினை அளித்தன. 1948 – 1988 ம் ஆண்டிற்கு இடையில் 40 ஆண்டுகளில் கையெழுத்தான 12,760 மொத்த வெளிநாட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இருந்து இது தெளிவாகிறது. சூலை – ஆகஸ்ட் 1991ல் அறிவிக்கப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையினால் (FIP) வெளிநாட்டு ஒத்துழைப்புகள் அதிகரித்து வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI) அதிகரித்துள்ளது.

### MNC யின் வளர்ச்சிக்கான காரணங்கள்:
### சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம்:

பெரிய அளவிலான நிறுவனங்கிளன் விரிவாக்கங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ள நாட்டின் புவியியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளை மேலும் விரிவாக்குகிறது.

**2018 ல் இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள்**

1. சோனி கார்ப்பரேசன்
2. ஹவுலக் பேக்கார்டு (HP)
3. டாட்டா குழுமம்
4. மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன்

5. ஐ.பி.எம்.
6. நெட்டில்
7. பிராக்டர் & கேம்பில்
8. சிட்டி குழுமம்
9. பெப்சி நிறுவனம்
10. கோகோ – கோலா நிறுவனம்

**அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச்சட்டம் 1974 (Foreign Exchange Regulation Act)**

இது 1973 ம் ஆண்டில் வெளியிடப்பட்டு, ஜனவரி 1, 1974 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாக குறிப்பிடுகிறது.

**அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 (Foreign Exchange Management Act)**

இது பாராளுமன்றத்தால் 1999ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'கட்டுப்பாட்டுக்கு'' மாறாக 'நிர்வாகத்தை''FEMA வின் கீழ் வலியுறுத்தியது.

**சந்தைப்படுத்தும் மேன்மை:**

ஒரு பான்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது. இது சந்தை மதிப்பினைப் பெற்று, அதன் தயாிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான சிரமங்களை எதிர் கொள்கிறது. மேலும் பயனுள்ள விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்கிறது.

**நிதி மேன்மை:**

இதில் நிதி வளங்களும், உயர்நிதி பயன்பாடுகளும் உள்ளன. அதனால், வெளிப்புற மூலதன சந்தைகளை எளிதில் அணுகமுடியும் மற்றும் அதன் சர்வதேச புகழ் காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

**தொழில்நுட்ப மேன்மை:**

பின்தங்கிய நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்க, ஊக்கமளித்ததற்கான முக்கிய காரணம் தேசிய தொழிற்துறைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுவதேயாகும்.

**வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் பன்னாட்டு நிறுவன்ங்கள்:**

| வ.எண் | நிறுவனம் | தலைமையகம் | தொழிலின் வகை | நிறுவனம் இயங்கும் நாடுகள் |
|---|---|---|---|---|
| 1. | ஹரோ மோட்டோகார்ப் | புதுடில்லி | ஆட்டோமோபைல் | கொலம்பியா, பங்களாதேஷ், ஆப்பிரிக்கா |
| 2. | பஜாஜ் | பூனா | ஆட்டோமோபைல் | ஐக்கிய அரபு நாடுகள், பங்களாதேஷ் |
| 3. | டி.வி.எஸ் (TVS) | சென்னை | ஆட்டோமோபைல் | பிரேசில், சிலி, கொலம்பியா, மெக்ஸிகோ, பெரு |
| 4. | பாரத ஸ்டேட் வங்கி | மும்பாய் | வங்கி | ஆஸ்திரேலியா, பங்காளதேஷ்,பெல்ஜியம் |
| 5. | பாரத் ஏர்டெல் | புதுடில்லி | தகவல் தொடர்பு | தென் ஆசியா, ஆப்பிரிக்கா |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | மைக்ரோ மேக்ஸ் இன்டர்மேட்டிக்ஸ் | கூர்கான் | மின்னணு பொருட்கள் | நேபால், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் |
| 7. | பாரத ஸ்டேட் வங்கி | ஆனந்த (குஜராத்) | உணவுப் பொருள் | ஐக்கிய நாடுகள், தாய்லாந்து, மலேசியா, ஹாங்காங், ஜப்பான் |
| 8. | ஓ.என்.ஜி.சி (ONGC) | புதுடெல்லி | எரிவாயு | பிரேசில், கொலம்பியா,ஈரான் |
| 9. | Dr. ரெட்டி மருத்துவ ஆய்வகம் | ஹைதராபாத் | மருத்து பொருட்கள் | பிரேசில். மெக்ஸிகோ, ஜமாலிகா |
| 10. | இன்போசிஸ் | பெங்களூரு | மென்பொருள் | அமரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா |

**பண்டங்களின் கண்டுபிடிப்புகள்:**

பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உயர்ந்த வடிவமைப்புகளாக உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் ஈடுபட்டுள்ளன.

**MNC யின் நன்மைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.
2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

**பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள்:**

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
2. பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
3. ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில் பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகும் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

**நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO):**

நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதிரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும். நியாயமான வர்த்தகம் என்பது விவசாய பொருட்கள் மற்றும் முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட கைவினைப் பொருட்களின் உற்பத்தியாளரும் மற்றும் வாங்குவோரும் தானாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் குறிக்கோள்களை முன்னெடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வணிக நடைமுறைகளேயாகும். அவைகள்,

- சிறிய அளவிலான விவசாயிகள், பண்ணை தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்துவது மற்றும் உறுதிப்படுத்துதல்.

- பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய பொருளாதால லாபங்கள், வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சமமாக விநியோகித்தல்.

- உற்பத்தியாளர் குழுக்களின் நிறுவன மற்றும் வர்த்தக திறன்களை அதிகரித்தல்.

- தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் தொழிலாளர்கள் சரியான முறையில் ஒருங்கிணைக்க ஏற்பாடு செய்தல்.

- பாதுகாப்பான மற்றும் நிலையான விவசாய முறைகள் மற்றும் பணி நிலைமைகளை ஊக்குவித்தல்

நியாயமான வணிகம் என்பது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த விலை, சிறந்த வேலைவாய்ப்பளித்தல் மற்றும் வர்த்தகம் தொடர்பான நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும். இவற்றின் ஆதரவு, வளர்ந்து வரும் விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்கத்தின் வாழ்விற்கும் மற்றும் அவர்கள் எதிர்காலத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மையமாகக் கொண்டிருக்கும்.

**நியாயமான வணிக நடைமுறைகளின் பயனாளிகள்:**
**நுகர்வோர்:**

நுகர்வோர், நியாயமான வர்த்தக அமைப்பை ஆதரித்தும் மற்றும் சர்வதேச வர்த்தக விதிகளின் பரந்த சீர்திருத்தத்தை ஒப்பிட்டும், அவர்கள் சிறந்த தயாரிப்புகளை வளர்ந்து வரும் வரம்பிலிருந்து தேர்வு செய்யலாம். நியாயமான வர்த்தக பெயரிட்ட தயாரிப்புகளை நுகர்வோர் வாங்குவதன் மூலம், தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த போராடும் தயாரிப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கலாம்.

**வர்த்தகர் / நிறுவனர்கள்:**

2002 ஆம் ஆண்டு முதல், இது வர்த்தகத்தில் மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டு சமூக மற்றும் முன்னேறிய அடையாளமாக மாறியுள்ளது. நியாயமான வர்த்தக நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்திற்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு நம்பகமான வழியை வழங்குகிறது.

**உற்பத்தியாளர்கள்:**

நிலையான விலையில் நிலையான உற்பத்தி செலவுகளை கட்டுப்படுத்தலாம். சந்தை அணுகுதல் என்பது சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்ட உற்பத்தியாளர்களிடம் வர்த்தகம் செய்ய வாங்குபவர்கள் உதவுதலாகும். பங்குதாரர், (உற்பத்தியாளர்கள் தங்கள் எதிர்கால முடிவுகளில் ஈடுபடுதல்) விவசாயிகள் மற்றம் தொழிலாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்து.

**நியாயமான வர்த்தக அமைப்பின் கோட்பாடுகள்:**

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.

- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு

- நியாயமான வர்த்தக / நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.

- குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

- பாகுபாடு அல்லாத, பாலின சமபங்கு மற்றும் சங்க சுதந்திரம் ஆகியவற்றுக்கு அர்ப்பணித்தல்.
- திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்.
- சுற்று சூழலுக்கு மதிப்பளித்தல்

| |
|---|
| காப்பி, டீ, கோகோ, தேன் மற்றும் வாழைப்பழம் போன்றவை நியாயமான வர்த்தக உணவுப் பொருட்களாகும். கைவினைப்பொருட்கள், ஜவுளி மற்றும் பூக்கள் போன்றவை உணவு அல்லாத பொருட்களாகும். |

**GATT (காட்) (General Agreement of Trade and Tariff): சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு:**

1947 இல் 23 நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. காட்டின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. ஏழாவது சுற்றில் 99 நாடுகள் பங்கேற்றது. 1986 ஆம் ஆண்டின் எட்டாவது சுற்றில் (உருகுவே சுற்று) 117 நாடுகள் பங்கேற்றன. காட்டின் இயக்குநர் ஜெனரல் ஆர்தர் டங்கல் கொண்டு வந்த இறுதி சட்ட / ஒப்பந்த வரைவு "டங்கடல் வரைவு" என்று அழைக்கப்பட்டது. டங்கல் வரைவிற்கு ஏப்ரல் 15, 1994 அன்று இறுதியாக, சட்டம் / ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. காட்டின் முக்கிய நோக்கம், அர்த்தமுள்ள விதிமுறைகளை பின்பற்றி பலவிதமான கட்டணங்களையும், ஒதுக்கீடுகளையும், மானியங்களையும் குறைப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை அதிகரித்தல் ஆகும்.

**காட்டின் (GATT) சுற்றுகள்**

- I வது ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1947
- II வது அன்னிசி (பிரான்ஸ்) – 1949
- III வது டார்க்குவே (இங்கிலாந்து) – 1950 – 51
- IV,V மற்றும் VI ஜெனிவா (சுவிசர்லாந்து) –1956, 1960 – 61, 1964 – 67
- VII வது டோக்கியோ (ஜப்பான்) – 1973 – 79
- 1986 – 1994 ல் VIII வது மற்றும் இறுதிச் சுற்று பன்டாடெல் எஸ் டீ (உருகுவே). இதை "உருகுவே சுற்று" என அழைத்தனர்.

**உலக வர்த்தக அமைப்பு (WTO):**

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (றுவுழு) அமைப்பதற்கு காட் உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த அமைப்பை அமல்படுத்திட உடன்படிக்கையை ஏற்று 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது. WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது. (தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்)

**உலக வர்த்தக அமைப்பு World Trade Organisation):**
தலைமையகம் : ஜெனிவா, சுவிசர்லாந்து
நோக்கம்: வணிகத்தினை கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிபம்
WTO உறுப்பினர்கள் : தலைமை இயக்குநர், துணை தலைமை இயக்குநர் - 4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்.

**WTO ஐந்து வகையான மானியங்களை குறிப்பிடுகிறது.**

1. பண மானியங்கள் அளித்தல்

2. விதி விலக்குகள், கடன்கள் அல்லது இடைநிறுத்தல் போன்ற வரி சலுகைகள் அளித்தல்

3. கடன் உத்தரவாதங்கள் போன்ற அபாயத்தை ஊகித்தல்

4. அரசு கொள்முதல் கொள்கைகள் சுதந்திர சந்தை விலையை விட அதிகமாக செலுத்துதல்.

5. பங்கு கொள்முதல் சந்தை பங்குகளை விட ஒரு நிறுவனத்தின் பங்கு விலை அதிகமாக இருத்தல்.
இவை அனைத்தும் மானியங்கள் எனக் கருதப்படுகின்றன, ஏனென்றால் அவை வணிகம் செய்வதற்கான செலவினை குறைக்கின்றன.

**WTO வின் குறிக்கோள்கள்:**

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- வர்த்தக தாராளமயமாக்கலுடனான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்.
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்.
- உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

**அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள் (TRIPs - Trade Ralated aspectes of Intellectual property Rights):**

அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது “ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல்” என வரையறுக்கலாம். TRIPs ன் கீழ், பண்டங்கள் அல்லது செயல்முறைகள், அனைத்து துறைகளின் தொழில் நுட்பங்களில், எந்தவொரு கண்டுபிடிப்புக்கும் காப்புரிமை வழங்குகிறது. TRIPs ஒப்பந்தத்தில் ஏழு பகுதிகள் அறிவார்ந்த சொத்து உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. அதாவது, நகல் உரிமைகள், வர்த்தக சந்தை, வர்த்தக ரகசியங்கள், தொழில் வடிவமைப்பு, புவியியல் முகவர்களின் ஒருங்கிணைந்த சுற்றுகள் மற்றும் காப்புரிமைகள் போன்றவைகள் ஆகும்.

**வர்த்தக தொடர்புடைய முதலீட்டு நடவடிக்கைகள் (TRIMs – Trade Related Investment Measures):**

உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சிக்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கு அந்நாட்டில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீட்டிற்கு சில நிபந்தனைகள் அலலது கட்டுபாடுகளை அரசு விதிக்கும் என்பதையே TRIMS குறிக்கறிது என உருகுவே சுற்று உடன்படிக்கை கூறுகிறது.

**உலகமயமாக்கலின் தாக்கமும் மற்றும் சவால்களும்:**
**நேர்மறைத் தாக்கம்:**

- ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
- வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.
- உலகமயமாக்கல் வேகமாக வர்த்தகத்தை அதிகரித்து, அதனால் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.
- இது பண்டங்களின் ஒட்டத்தை தாராளமாக அதிகரிக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

**எதிர்மறைத் தாக்கம்:**

- நாடுகளுக்கிடையே மிக அதிகமான மூலதனம், வருமானத்தின் நியாயமற்ற மற்றும் ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது.
- தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம், இருப்பதால், சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகின்றன என்பத அச்சத்திற்குரியதாகும்.
- முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களை பிரித்தெடுத்தலும் ஒரு பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்.
- அந்நிய செலாவணியை பெறுவதற்காக, இயற்கை வளங்கள் மிக அதிகமாக விரைவாக சுரண்டப்படுகிறது.
- சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

**உலகமயமாக்கலின் சவால்கள்:**

- உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் நீடிக்கப்படவேண்டும். அவை தன்னிச்சையாக செயல்படாது.
- வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.
- உலமயமாக்களினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள். வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கல் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.
- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவதலுக்கு இது வழிவகுக்கிறது.

## பொருளாதாரம்
## அலகு – 3 உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

**அறிமுகம்:**

மக்கள், வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பராமரிப்பதற்காக சாப்பிடும் மற்றும் அருந்தும் எந்தவொரு பொருளாகவும் உணவு வரையறுக்கப்படுகிறது. உணவு பாதுகாப்பு என்பது, ஒரு நபர் போதுமான அளவு சாப்பிடுவதையும் சுறுசுறுப்பாக இருப்பதையும் ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துவதையும் குறிக்கும்.

**உணவு பாதுகாப்பு:**

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு உணவு பாதுகாப்பினைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

“எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது”(FAO,2009)

இந்த விரிவான வரையறை உணவு சத்துமிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதோடு, அது பாதுகாப்புமிக்க ஊட்டச்சத்தினைப் பெற வேறு சில அம்சங்கள் தேவைப்படுவதையும் உணர்த்துகின்றன.

பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் கருத்துப்படி,“சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல்” என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்.

உணவு பாதுகாப்பு என்ற கருத்து கடந்த ஐந்து சகாப்தங்களாக தொடர்ச்சியாக உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் இது உலகளாவிய, வட்டார அல்லது தேசிய சூழலுக்கான ஒட்டு மொத்த உணவு வழங்குதலைக் குறிக்கிறது. ஒட்டுமொத்த போதுமான தன்மையை குறிக்கும் உணவு வழங்கல்/உணவு உற்பத்தி பற்றி விவாதித்த உணவு பாதுகாப்பு குறித்த இந்த சிந்தனைகளிலிருந்து, இந்த சொல் சமூகம்/வீட்டு/தனிநபர் மட்டத்தில் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

**உணவின் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு**

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகளை உள்ளடக்குவதற்காக இந்த சொல் விரிவுபடுத்தப்பட்டது. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.

1. உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.
2. உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே,ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துகள் மற்றும் கல்வியுடன் தொடர்புடையது.
3. உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும். ஊட்டச்சத்து. அறிவு, நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் நிலைகள் போன்ற பல காரணிகள் உணவு மற்றும் சுகாதார நிலையை திறம்பட உயிரியல் தீதியாக முழுஈடுபாட்டுடன் அனுமதிக்கிறது.

**உணவு தானியங்களின் கிடைத்தல் மற்றும் அணுகல்:**

ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கான உணவுப்பாதுகாப்பு என்பது கிடைக்கும் உணவின் அளவைப் பொறுத்தது மட்டுமல்லாமல், உணவை வாங்க/அணுக மற்றும் தாங்குவதற்கான மக்களின் திறனையும் சார்ந்துள்ளது. பொருத்தமான ஆரோக்கியமான சூழலில், பிற சிக்கல்களைப் போலவே, மக்களின் உணளவு பாதுகாப்பும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி செயல்முறையுடன் தொடர்புடையது. சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியைக் தேர்வு செய்தது.

விவசாயத்தில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய பின்னர். தொழில் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பு, திறந்த சந்தைக் கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை. பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோர வேண்டியிருந்தது. 1960-களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480(பி.எல்.480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை பிரபலமாக 'கப்பலுக்கு வாயில்' இருப்பு (ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

ஒரு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட பசியுடன் வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கான சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது. அமெரிக்கா நிர்வாகம் ∴போர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான (High Yielding Varieties) திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் நீர்ப்பாசனம் உறுதி செய்யப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டங்களின் முடிவுகள் உறுதி செயயப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.

இவ்வாறு, பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது. உயர் ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. மேலும் முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது. 1950களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்தி பரப்பளவு 98-மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக இருந்தது. நாடு 54-மில்லயன் டன் உணவு தானியங்களை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அப்போது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 547கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேருக்கு 547-கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது. சுதந்திர காலத்திற்கும் தற்போதைக்கும் இடையில் உணவு தானியங்களின் விளைச்சல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் இந்த வளர்ச்சி ஒரு தொகுப்பாக செயல்படுத்தப்பட்ட HYV திட்டத்தால் சாத்தியமானது. ஏற்புத்தன்மையுடைய உரங்கள் அதிக விளைச்சல் தரும் அரிசி மற்றும் கோதுமைகளை அறிமுகப்படுத்துவதைத் தவிர, மானிய விலையில் ரசாயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்தது. கூட்டுறவு வங்கிகள் மற்றம் கூட்டறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு மலிவான பண்ணைக் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு"உலகளாவிய பொது வழங்கல் முறை"யை (Universal PDS) ஏற்றுக் கொண்டது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை"(Targeted PDS) செயல்பாட்டில் இருந்தது. உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவு கோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம்

வழங்கப்படும் பொருட்களுக்கு மானியம் அளிக்கின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது. அதைத் தொடர்ந்து தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால்2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும். இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் (priority Households) என அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும். உணவினைப் பெறும் உரிமை உண்டு. மத்திய அரசினால் அரிசியை கிலோவிற்கு ரூ.3 என்ற விகிதத்திலும், கோதுமையை கிலோவிற்கு ரூ.2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு ரூ.1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து உலகளாவிய பொது வழங்கல் முறையைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

**தமிழ் நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்:**

இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், நவம்பர்-1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ் நாட்டில் துவங்கப்பட்டது. அக்டோபர்-27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், இச்சட்டத்தை அமல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

**பயோ மெட்ரிக் குடும்ப அட்டை (Bio Metric Smart Family Cards)**

தற்போதுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. தேசிய மக்கள் தொகையின் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் இயக்குநரின் தனித்துவமான அடையாள எண்ணை(UIN) வெளியிடுவதற்கு 10 விரல்கள் கைரேகை, இரண்டு கருவிழிகள் மற்றும் முகப்பதிவு செய்தல் ஆகியவற்றின் மூலம் பதிவேட்டில் பதிவிடப்படுகிறது. பயோ மெட்ரிக் பதிவு செயல்முறையை முடித்த பின்னர், இந்த தரவு பயோ மெட்ரிக் ஸ்மார்ட் குடும்ப அட்டைகளை வழங்க முன்மொழியப்பட்டது. இதன் நன்மை என்னவென்றால், இது தனிப்பட்ட அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உறுப்பினர்களின் தரவு நகல் மற்றும் போலி அட்டைகளை அகற்றலாம்.

**உணவு பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கு:**

பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் மூன்று அடுக்கு அமைப்புகளில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை,முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், மத்திய நுகர்வோர் கூட்டுறவுகடைகள் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள் ஆகும். கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருட்களை வழங்குவதில் 50,000க்கும் மேற்பட்ட கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. சுகாதாரம்,காப்பீடு, வீட்டுவசதி போன்ற பல வகையான நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. இந்தியாவில் உணவு பாதுகாப்பில் இந்த திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உதாரணமாக,தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில், சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்காக தாங்கியிருப்பு செய்யப்படுகிறது. உணவு தானியங்கள், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலை வெளியீட்டு விலை என்று அழைக்கப்படுகிறது. பாதகமான வானிலை அல்லது பேரழிவுக் காலங்களில் உணவு பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்க்க இது உதவுகிறது.

**தாங்கியிருப்பு(Buffer Stock)**

தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCIவாங்குகிறது. விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது. இந்த விலை குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price) என்று அழைக்கப்படுகிறது. இந்த பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக விதைப்பு பருவத்திற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் MSP அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறது. வாங்கிய உணவு தானியங்கள் களஞ்சியங்களில் சேமிக்கப்படுகின்றன.

**நியாய விலைக் கடைகள்:(Fair Price Shops)**

தற்போது 33,222 நியாய விலைக் கடைகள் 1.98 கோடி குடும்பங்களுக்கு சேவை புரிகிறது. 33.222 நியாய விலைக் கடைகளில் 31,232 கடைகள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன. 596 கடைகள் பெண்கள் சுய உதவி குழுக்களால் நடத்தப்படுகின்றன. பொது வழங்கல் முறைக்கு அணுகலை மேம்படுத்த, நியாய விலைக் கடைகள் வாழ்விடங்களுக்கு அருகிலேயா அமைந்திருப்பது அவசியம். அதன்படி, எந்தவொரு அட்டைதாரரும் 1.5 கி.மீக்கு மேல் நடந்து செல்லாத வகையில் புதிய நியாய விலை கடைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாங்குதிறன்:**

வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருட்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு விலை ஏறும் போது வாங்கும் திறன் குறைகிறது. மாறாக, இது நேர் மாறனது.

**வாங்கு திறனைப் பாதிக்கும் காரணிகள்:**

**1. அதிக மக்கள் தொகை:**

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1000க்கும் 1.7ஆக உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை. எனவே, சாதரண விலை நிலை,அதிகமாக இருக்கும். எனவே, இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

**2. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்தல்:**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்தியாவில் பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாகப் பாதிக்கிறது. 2015-16 ஆம் ஆண்டில் சராசரியாக 2%பணவீக்கத்தினால், பருப்பு வகைகளின் விலை சுமார் 40% உயர்ந்தது.

**3. பொருட்களுக்கான தேவை:**

பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

**4. பொருட்களின் விலை நாணய மதிப்பைப் பாதிக்கிறது:**

விலை அதிகரிக்கும் போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது. மாறாக, இது நேர்மாறானது.

**5. பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:**

பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

6. **வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

இந்திய பொருளாதாரத்தில் ஒரு மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்கு சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. இது சமுதாயத்தில் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் பொதுவாக வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

வாங்கும் சக்தி பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கிறது. நுகர்வோர் பொருட்கள் வாங்குவது முதல் முதலீட்டாளர்கள் வரை மற்றும் பங்கு விலைகள் ஒரு நாட்டின் பொருளாதார செழிப்பு வரை பாதிக்கிறது. எனவே, ஒரு நாட்டின் அரசாங்கம் நாணயத்தின் வாங்கும் சக்தியைப் பாதுகாக்க மற்றும் பொருளாதாரத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க கொள்கைகளையும், ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்த உதவுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டு எண் என்பது வாங்கும் சக்தியைக் கண்காணிப்பதற்கான ஒரு முறையாகும்.

**வாங்கும் சக்தி சமனிலை (Purchasing Power party)**

வாங்கும் சக்தி சமனிலை(PPP) என்பது வாங்கும் சக்தி தொடர்பான ஒரு கருத்தாகும். வாங்கும் சக்தி சமநிலை என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். இது ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது. இரு நாடுகளின் மாற்று விகிதங்கள் கொடுக்கப்பட்டால், ஒவ்வொரு நாணயத்தின் வாங்கும் சக்தியுடனும் பரிமாற்றம் பொருந்த வேண்டும்.

நாடுகளின் வருமான நிலைகள் மற்றம் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொரளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலையை பயன்படுத்தப்படலாம். சமீபத்தில் வாங்கும் சக்தி சமநிலையின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக மாறி, அமெரிக்காவை இண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கை:**

விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாயக் கொள்கை 2018-ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பெரும்பாலான கரிம மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவித்தது.

கரிம அல்லது பதப்படுத்தப்பட்ட விவசாயப் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி, ஏற்றுமதி தடை மற்றம் ஒதுக்கீடு கட்டுப்பாடு போன்ற எந்தவொரு ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளின் கீழும் இருக்காது என்ற உறுதி மொழியே முக்கிய காரணமாகும்.

ஒரு நாட்டின் விவசாயக் கொள்கை பெரும்பாலும் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை விவசாயத்துறையின் அனைத்து வட்டங்களிலும், விரிவான வளாச்சிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான குறிக்கோள்கள் பின்வருமாறு:**

**1. உள்ளீடுகளின் உற்பத்தித்திறனை உயர்த்துதல்:**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**2. ஒரு ஹெக்டேருக்கு மதிப்புக் கூட்டப்பட்டவை:**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் உடல் ரீதியிலான உற்பத்தியை உயர்த்துவதை விட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

**3. ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நிலச் சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

**4. விவசாயத் துறையை நவீன மயமாக்குதல்:**

விவசாயக்கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் HYV விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**5. சுற்றுச்சூழல் சீரழிவு:**

இந்தியா விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக் கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

**6. அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்:**

விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது. இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

**வறுமையின் பல பரிமாணத்தின் இயல்பு:**

ஒரு விரிவான வடிவத்தினை உருவாக்க பல பரிமாண வறுமை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது. யார் ஏழை,அவர்கள் எப்படி ஏழை, அவர்கள் அனுபவிக்கும் தீமைகளின் வீச்சு ஆகியவற்றை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அத்துடன் வறுமையின் தலைப்பின் கீழ், ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு துணைக்குழு மக்களிடையேயும் காணப்படும் வறுமையின் அளவினை பல பரிமாண நடவடிக்கைகளினால் வெளிப்படுத்தி உடைக்க முடியும்.

பல பரிமாண வறுமை குறியீடு (MPI)ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme)மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (oxford Poverty and human Development Initiative) ஆகியவற்றால் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படை தத்துவமும், முக்கியத்துவமும் என்னவென்றால், வறுமை என்பது ஒற்றை பரிமாணமல்ல, அது பல பரிமாணத்தினைக் கொண்டது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

உடல் நலம்,கல்வி, வாழ்க்கைத் தரம், வருமானம் அதிகாரமளித்தல், பணியின் தரம் மற்றும் வன்முறையினால் அச்சுறுத்தல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.

**இந்தியாவின் பல பரிமாண வறுமை குறியீடு 2018:**

ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPHI) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீடு 2018 அறிக்கை, இந்தியாவைப் பற்றி பின்வருமாறு கூர்ந்து உருவாகியுள்ளது.

1. இந்தியா தனது வறுமை விகிதத்தை 10ஆண்டுகளில் 55% லிருந்து 28% ஆக வெகுவாக குறைந்துள்ளது. 2005-2006 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டிற்கு இடையில் 271மில்லியன் மக்களை வறுமையிலிருந்து விடுவித்தனர்.

2. இந்தியாவில் 2015-2016 ஆம் ஆண்டில் 364 மில்லியன் ஏழை மக்கள் இருந்தனர். இது எந்த ஒரு நாட்டிற்கும் மிகப்பெரியதாகும். இருப்பினும் 2005-2006ஆம் ஆண்டில் 635 மில்லியனாக இருந்ததை குறைத்துள்ளது.

3. 2015-2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும். 2005-2006 ஆம் ஆண்டில் இந்தியாவில் 292 மில்லியன் ஏழைக் குழந்தைகள் இருந்தனர். இது 47% குறைவு அல்லது பல பரிமாண வறுமையில் வளர்ந்து வரும் 136 மில்லியன் குறைவான குழந்தைகளை குறிக்கிறது.

4. பழங்குடியினரைச் சேர்ந்த 80% மக்கள் 2005-2006 ஆம் ஆண்டில் ஏழைகளாக இருந்தனர், அவர்களில் 2015-2016 ஆம் ஆண்டில் 50% பேர் இன்னும் ஏழைகளாகவே உள்ளனர்.

5. 2015-2016 ஆம் ஆண்டில் வறுமையால் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.

6. பீகார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களைக் கொண்டுள்ளன. இது இந்தியாவில் உள்ள அனைத்து பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களில் பாதிக்கும் மேலானதாகும்.

7. 2006ஆம் ஆண்டில் கேரளா மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களில் ஒன்றாக இருந்தது. அது பல பரிமாண வறுமை குறியீட்டை சுமார் 92% குறைத்துள்ளது.

**தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை குறியீடு அறிக்கை-2018**

கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை உயர் வறுமை மாவட்டங்கள் (வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகையில் 40%க்கும் அதிகமானோர்), மிதமான ஏழை மாவட்டங்கள்(30% முதல் 40% வரை) மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் (30%க்கும் குறைவு) ஆகும்.

1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை படிப்படியாகக் குறைந்துள்ளது, மற்றும் இந்தியாவில் அதன் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது சிறிய ஏழ்மைப் பங்கினைக் கொண்டுள்ளது. 2005-க்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களை விட வறுமைக் குறைப்பு தமிழ்நாட்டில் வேகமாக உள்ளது. 2014-2017 வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தற்போது, இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

இந்த கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்ந்து இருந்தால் மாநிலத்தின் வறுமையை முற்றிலுமாக ஒழிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாதிரி மாநிலமாக மாற வாய்ப்புள்ளது.

**தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்**

| வ.எண் | அதிக மாவட்டங்கள் | தரம் | குறைவான மாவட்டங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | தர்மபுரி | 32 |
| 2 | சென்னை | 2 | பெரம்பலூர் | 31 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | கடலூர் | 3 | இராமநாதபுரம் | 30 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | விருதுநகர் | 29 |
| 5 | நாகப்பட்டினம் | 5 | அரியலூர் | 28 |

**ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை:**

உணவு பாதுகாப்பில் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் அடங்கும் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தாலும், மக்களின் ஊட்டச்சத்து நிலையில் அந்த அளவிலான முன்னேற்றங்களை அடையவில்லை. 2015-2016ஆம் ஆண்டில், 27% கிராமப்புறப் பெண்களும் மற்றும் 16% நகர்ப்புற பெண்களும் (15-49 வயதுக்குட்பட்டவர்கள்) ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் அல்லது நீண்ட கால ஆற்றல் குறைபாடு என தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பினால் கண்டறியப்பட்டது.

இந்தியாவில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இனப்பெருக்க வயதுக் குழுவில் (15-49 வயது) பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 2015-2016 ஆம் ஆண்டில் இரத்தசோகைக்கு ஆளானார்கள். குழந்தைகளைப் பொறுத்தவரை கிராமப்புறங்களில் 60% மற்றும் 56% நகர்ப்புற குழந்தைகள் (6-59மாதங்கள்) 2015-2016 ஆம் ஆண்டில் இரத்த சோகை உடையவர்கள் எனப் கருதப்பட்டனர். கிராமப்புறங்களில் சுமார் 41% மற்றும் 31% குழந்தைகள் குன்றியிருக்கின்றனர். அதாவது அவர்களின் வயதுக்கு ஏற்ப தேவையான உயரத்தை கொண்டிருக்கவில்லை. ஊட்டச்சத்தின் குறைபாட்டினால் மற்றொருக் குறியீடாக குழந்தைகளிடையே வயது தொடர்பான எடையை விட ''எடை குறைவாக'' உள்ளனர். இந்தியாவில் 2015-2016ஆம் ஆண்டில் சுமார் 20% குழந்தைகள் (6-59 மாத வயகுக்குட்பட்டவர்கள்) எடைக் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நமது உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டியிருந்தாலும், நாம் அனைவருக்குமான உணவு பாதுகாப்பு என்ற நிலையை இன்னும் அடையவில்லை.

**ஊட்டச்சத்து மீதான தமிழ்நாடு அர்ப்பணிப்பு:**

இந்தியாவில் பசி என்ற ஒன்று மட்டுமே அரசியல் முன்னுரிமைக்கு போதுமானதாக இல்லை என்பதனை நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென் உற்றுநோக்கியுள்ளார். சுகாதாரத்திற்கான பொதுச்செலவு மிகவும் குறைவு, குழந்தை ஊட்டச்சத்து போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படாமல் உள்ளது. ''ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலம்'' என்ற நிலையை அடைவது போன்ற குறிக்கோள்களை அமைப்பதன் மூலம் இந்த பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கான அரசியல் விருப்பத்தையும், அர்பணிப்பையும் அவர் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மட்டுமே காண்கிறார்.

**தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தின் நிலை:**

மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும், மக்கள்தொகையின் ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாக உள்ளன. ஏராளமான இந்திய குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் எடைகுறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணோட்டச் சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (integrated child Development Services), மதிய உணவுத் திட்டம், இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் சுகாதார திட்டங்கள் (Reproductive and Child Health Programmes), மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி (National Rural health Mission) போன்ற திட்டங்களில் கணிசமான வளங்களை கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் ஊட்டச்சத்து குறைவான நிகழ்வுகளைத் தணிக்க இந்த முயற்சிளைத் திறம்பட அளவிடுவது அவசியமாகும்.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடி பங்கைக் கொண்டுள்ளது. ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த வரவுசெலவுத்திட்ட செலவினங்கள் நாட்டிலேயே மிக அதிகமாகும். ICDSதிட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.

'ஒரு ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு' என்ற தமிழ்நாட்டின் கொள்கை, ஊட்டச்சத்துக் குறைபாட்டை அகற்றுவதற்காக மாநிலத்தின் நீண்டகால பல துறைக் கொள்கைகளை செயல்படுத்துகிறது. 'அனைத்து வகையான மனித ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்குக் குறைப்பது' என்பது இதன் குறிக்கோளாகும். "அனைத்து வகையான மனித ஊட்டச்சத்து குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்கு குறைப்பது" என்பது இதன் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில், 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகளில் (385 கிராமப்புற, 47 நகர்ப்புற மற்றும் 2 பழங்குடியினர்) 54,439 குழந்தை மையங்கள் (49,499 அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDSசெயல்படுத்தப்படுகிறது.

அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன்,ICDS இப்போது உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது மற்றும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒரு மாதிரியாகும். சேவைகள் நோக்கம் கொண்ட பயனாளிகளை அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த திட்டம் உலகமயமாக்கப்பட்டு, சுகாதாரம், கல்வி, குடிநீர், சுகாதாரம் போன்றவற்றைக் கையாளும் தொடர்புடைய துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது.

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது. நாட்டின் பிற மாநிலங்கள், தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின் படி மதிய உணவுத் திட்டங்களை வடிவமைத்துள்ளன.

**சக குழு ஈடுபாடு அதிகரித்தல்:**

- பெண் குழந்தைகளை மேம்படுத்துவதற்கும் மாற்றத்தின் தூண்டுதலான வினையூக்கிகளாக மாற்றுவதற்கும் 'பதுமையர் குழு' வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இளம் பருவப் பெண்களை இத்திட்டத்திற்கு ஈர்ப்பது, பல்வேறு பணிகளில் அவர்களை இணைப்பது மற்றும் செயற்பாடுகளில் அவர்கள் பங்கேற்பதை ஊக்குவிப்பது போன்ற புதுமையான அணுகுமுறைகள் பரிசீலிக்கப்படும். ஒன்பது மாவட்டங்களில் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக நடமாடும் மையங்கள் உருவாக்கப்பட்டது,
- 'பதுமையர் அட்டை' வழங்கப்பட்டு, மேலும் கண்காணிப்பு பலப்படுத்தப்படும்.

**தமிழ்நாட்டில் முக்கியமான திட்டங்கள்:**

1. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டத்தின் (Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme)** கீழ், ஏழை கர்பிணிப் பெண்களுக்கு ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. சக்திமிக்க உணவிற்கான செலவுகளை மேற்கொள்ளுதல் பிரசவக் காலத்தில் வருமான இழப்பினை ஈடுசெய்வது, மற்றும் புதியதாக பிறக்கும் குழந்தைகளின் குறைந்த எடை பிறப்பினை தவிர்க்க மூன்று தவணைகளில் பிறப்பிற்கு முந்தைய கவனிப்பைப் பெறுதல், அரச நிறுவனங்களின் குழந்தைகளை பிரசவித்தல் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்குதல் போன்றவை இதன் குறிக்கோளாகும்.

2. **முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டத்தின் (chief Minister's Comprehensive Health Insurance Scheme)** மூலம் அரசாங்கத்தால் இலவச மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்கி அனைவருக்கும் உலகளாவிய உடல் நலம் வழங்கும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு குறைவாக இருந்தால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்கிறது.

3. **தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் (Tamil Nadu health Systems Projects)** இலவசமாக ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. (108 அவசர ஆம்புளன்ஸ் சேவை)

4. **'பள்ளி சுகாதார திட்டம்' (School Health Programme)** முக்கியமாக விரிவான சுகாதார சேவையை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை வலியுறுத்துகிறது.

5. **தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் (National Leprosy Eradication Programme)**மூலம் அனைத்து தொழு நோயாளிகளையும் கண்டறிந்து தொடர்ச்சியான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாட்டின் சில ஊட்டச்சத்து திட்டங்கள்:**

1. **புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம் (Purachi Thalaivar M.G.R Nutrition Meal Programme):** கிராமப்புறங்களில் ஜூலை 1, 1982 முதலும், நகர்ப்புற பள்ளி மாணவர்களுக்கு 1984 முதலும், ஓய்வூதியதாரர்களுக்கு 1983 முதலும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 1995 முதலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2. **ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்: (National Programme of Nutritional Support to primary Education)**

3. **பொது ICDSதிட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்: (General ICDS Projects and World bank Assisted Integrated Child Devgelopment Services)** 24 மாவட்டங்களை உள்ளடக்கிய 318 வட்டாரங்களில் 1991இல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. 318 கிராமப்புற வட்டாரங்கள் மற்றும் 19500 மையங்களுக்கும் 1991ல் இது விரிவாக்கப்பட்டது.

4. **பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம் ( Pradhan Manthri Gramodays Yojan Scheme):** 6மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான குழந்தைகளுக்கு உணவில் ஊட்டச்சத்து வழங்கப்படாத குக்கிராமங்களில் வழங்கப்படுகிறது.

5. **தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் (Tamil Nadu Integrated Nutrition Programme):** இத்திட்டம் 1980இல் ஆரம்பிக்கப்பட்டு 6-36 மாத வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் ஆகியோரை இலக்காக வைக்கப்பட்டது.

6. **மதிய உணவுத் திட்டம் (Mid-Day Meal Programme)** : இந்த திட்டம் 2-14 வயதுக்குட்பட்ட அங்கன்வாடி அல்லது பள்ளி குழந்தைகளுக்கு ஒரு பயனாளிக்கு தலா ரூ.0.90 வீதம் செலவழிக்கப்படுகிறது. இந்த திட்டம் 4426 வட்டாரங்களில் 5.57 கோடி குழந்தைகளை உள்ளடக்கியது.

## அலகு-4 அரசாங்கமும் வரிகளும்

**அறிமுகம்:**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகிறது. அரசின் வருமானம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளைச் சார்ந்து உள்ளது. நேர்முக வரி தனி நபரின் வருமானத்திலும், மற்றும் மறைமுக வரி பண்டங்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கம் அதன் ''நிதி ஆதாரங்களை'' திரட்டுகிறது.

**வளர்ச்சிக் கொள்கைகளில் அரசாங்கத்தின் பங்கு:**

இந்தியாவில் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆகிய மூன்று நிலையிலான அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றன. இவற்றின் பணிகள் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. **பாதுகாப்பு (அ) இராணுவம்:**

எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பு முறைகளில் தரைப்படை, கப்பல்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று சேவைகள் உள்ளது. நம் அனைவரக்கும் தெரிந்த ஒன்றாகும். பாதுகாப்புப் படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பானதாகும்.

2. **அயல்நாட்டுக் கொள்கை:**

இன்றைய உலகில், நாம் அனைத்து உலக நாடுகளுடன் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும். உலக அமைதிக்காக இந்தியா உறுதி ஏற்றுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றம் உழைப்பைப் பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க முடியும். இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழி வழங்குகிறது.

3. **அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல்:**

இந்தியா ஒரு ஜனநாயக நாடு, நாம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். மத்திய அரசு சட்டங்களையும், நிர்வாக அமைப்புகளையும் உருவாக்கி இந்த இரண்டு சட்ட அமைப்புகளுக்கும் தேர்தல்களை நடத்துகிறது. இதேபோல், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை மாநிலத்திற்குள் நடத்துகிறது.

4. **சட்டம் மற்றும் ஒழுங்கு**:

மத்திய மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன. மத்திய அரசு தேசிய, மாநில மற்றும் கீழ் நிலைகளில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நீதி அமைப்பின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களில் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்கின்றன.

5. **பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல்:**

அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது. வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள், கிராம வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும். மத்திய மற்றும் மாநில அரசாங்கத்

துறைகளின் அதிகார வரம்புகளின் பட்டியல் பொதுத் தளத்தில் கிடைக்கிறது. உள்ளூர் சாலைகள், வடிகால், குடிநீர், குப்பை சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொதுப்பண்டங்களை வழங்குகின்றன.

### 6. வருமான மறுபகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு:

முன்னதாக குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க அரசாங்கங்கள் பல்வேறான வரிகளை வசூலிக்கின்றன. அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிகவரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது. சில அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகின்றது. மேலும், அரசு வரிகளை வசூலிப்பது மற்றும் ஏழைகளுக்கான செலவினைச் செய்வது, அரசு எவ்வாறு வருமானத்தை மறுபகிர்வு செய்கிறது மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றினை செயல்படுத்துகிறது.

### 7. பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல்:

மத்திய அரசு, பணத்தின் அளிப்பு, வட்டி வீதம், பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி ஆகியவற்றை இந்திய மையவங்கி மூலம் கட்டுப்படுத்துகிறது. இதன் விகிதங்களில் அதிக ஏற்ற இறக்கங்களை களைவதே மையவங்கியின் முக்கிய நோக்கமாகும். இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்(SEBI) மற்றும் இந்திய போட்டி ஆணையம்(CCI) போன்ற பல்வேறு முகவர்கள் மூலமாகவும் மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து அரசாங்கங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மலிவுவிலையில் அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

### வரி:

''வரி'' என்ற சொல் ''வரிவிதிப்பு'' என்பதிலிருந்து உருவானது. இதன் பொருள் மதிப்பீடு என்பதாகும்.

வரி விதிப்பு என்பது அரசாங்கம் தனது செலவினங்களுக்காகப் பொது மக்களிடமும், பெரு நிறுவனங்களிடமும் வரிகளை விதித்து வருவாயை உருவாக்கும் ஒரு வழிமுறையாகும். அரசு இயந்திரங்களின் செயல்பாட்டிற்காக வரியின் மூலம் நிதி திரட்டுவது வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாகும். வரிவிதிப்பு முறை ''நல அரசு'' என்ற கருத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. தற்கால அரசாங்கங்கள் அதன் எல்லைக்குட்பட்ட சட்டம் மற்றம் ஒழுங்குக்கு மட்டுமே கட்டுப்படுவதில்லை. சமீபத்திய ஆண்டுகளில் பொது நிதிக்கு(வரி) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பெருமளவில் வருவாய் அதிகரித்துள்ளது.

வரிகள் என்பது எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணமேயாகும். பேராசிரியர் செலிக்மேன் கருத்துப்படி,''வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துவகையாகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாகச் செலுத்த வேண்டியதே வரி'' என வரையறை கூறுகிறார்.

### வரிகள் ஏன் விதிக்கப்படுகிறது?

வரி விதிப்பு என்பது அரசுக்கு நிதியளிப்பதற்காக வருவாயை உயர்த்துவதையோ அல்லது தேவையை பாதிக்கும் பொருட்டு விலைகளை மாற்றுவதையோ நோக்கமாகக் கொண்டுள்ளது. வரலாற்று காலத்திலிருந்தே நாடுகளும் அதற்கு இணையாக செயல்படும் அரசுகளும் வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதியிலிருந்தே பல செயல்களை நிறைவேற்றியிருக்கின்றது. அவைகளில் சில பொருளாதார உள்கட்டமைப்புச் செலவுகள், (போக்குவரத்து, துப்புரவு, பொது பாதுகாப்பு, கல்வி, உடல்நலம்) இராணுவம், அறிவியல் ஆராய்ச்சி, கலாச்சாரம், கலைகள், பொதுப்பணிகள், பொதுக் காப்பீடுகள் மற்றும் அரசாங்க செயல்பாடுகள் பொன்றவைகளாகும். வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை 'நிதித்திறன்' என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டை கால வரி முறையை அடிப்படையாகக் கொண்டது.

**வரி அமைப்பு**

ஒவ்வொரு வகையான வரியும் சில நன்மைகள் மற்றும் தீமைகளைப் பெற்றுள்ளன. எனவே நாம் கொண்டுள்ள வரி அமைப்பு, பல்வேறு வகையான வரிகளின் தொகுப்பாகும். அனைத்து நாடுகளும் பல விதமான வரிகளைப் பயன்படுத்துகின்றன. வரிமுறையை வடிவமைக்கும் போது எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதும் வரிமுறைகளில் சில பண்புகள் உள்ளன. இந்த பண்புகள் வரி விதிப்பு கொள்கைகள் என அழைக்கப்படுகின்றன. ஆடம் ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரி விதிப்புக் கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். அவைகளில் பொதுவான வகைகள்.

**1. சமத்துவ விதி:**

வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். சமத்துவ கோட்பாடு கூறுகையில், பணக்காரர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்த வேண்டும். ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது. மேலும் வரி செலுத்திய பிறகு பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான பொருளாதார வேறுபாடு குறைக்கப்படுவதை நாம் காண்போம். எந்த வரி சமத்துவ வரிக்கு ஒத்துப்போகிறது என்பதை அறிய நீங்கள் ஒரு பயிற்சியை செய்யலாம்.

**2. உறுதி விதி:**

ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வுளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், அரசாங்கம் வரி முறையை அடிக்கடி மாற்றக்கூடாது மற்றும் வரி அமைப்பில் திடீர் மாற்றங்களை அறிவிக்கக் கூடாது.

**3. சிக்கன மற்றும் வசதி வீதி:**

இந்த இரண்டு விதிகளும் தொடர்பானவை. வரி செலுத்துவோர் என்ற வகையில், நமது கணக்குகளைச் செயலாக்குவதற்கும் வரி செலுத்துவதற்கும் ஒரு செலவு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக கணக்காளர்கள் மற்றும் தணிக்கையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதாகும். இதே போல் அரசாங்கம் தனக்கு வரி செலுத்துவோருக்கு ஊதியத்தினை வழங்கி பெரிய நிறுவனங்களையும் நடத்துகிறது. வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரிசெலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும். மேலும், ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும். இது வசதிக்கான வரி என்று அழைக்கப்படுகிறது. ஒரு வசதியான வரி, வரி வசூலிக்கும் செலவை குறைக்கிறது.

**4. உற்பத்தித் திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி:**

அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி அதிக வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும். மேலும் அவை ஒவ்வொன்றும் ஒரு சிறிய வரி வருவாயைப் பெறுகின்றன. இது உற்பத்தித் திறன் வரியாகும். மக்கள் தங்கள் வருமானத்திலிருந்து வரி செலுத்துகிறார்கள். எனவே, மக்கள் வருமானம் அதிகரித்தால் தானாகவே அதிக வரி வருவாயை செலுத்தும் வகையில் வரி அமைப்பு வடிவமைக்கப்பட்ட வேண்டும். இது நெகிழ்ச்சி வரி எனப்படுகிறது. ஒரு பரந்த பொருளில்,

பொருளாதாரம் வளர்ந்து வருவதால் மக்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதன் விளைவாக வரி முறை நெகிழ்ச்சியாக இருந்தால் அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயையும் செலுத்துவார்கள்.

செலவு, வரி வருவாயை விட அதிகமாக இருக்கும்போது ஒரு அரசாங்கம் கடனை திரட்டுகிறது. வரிகளின் ஒரு பகுதி கடந்த காலப் பணிகளுக்கான கடன்களுக்குப் பயன்படுத்தபடலாம். அரசாங்கம் மக்களின் நலனிற்கும் பொது சேவைகளுக்கும் வரிகளைப் பயன்படுத்தினர். இந்த சேவைகளில் கல்வி முறைகள், முதியோருக்கான ஒய்வூதியம், வேலையின்மை சலுகைகள் மற்றும் பொது போக்குவரத்து ஆகியவை அடங்கும். ஆற்றல், நீர் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவை மக்களுக்கான பயன்பாடுகளாகும்.

பணத்தை உருவாக்கும் கோட்பாட்டின் ஆதரவாளர்களின் கூற்றுப்படி, கேள்விக்குரிய அரசாங்கத்தால் ஒப்புறுதியளிக்கப்பட்ட பணத்தை வழங்க முடியும்வரை அரசாங்க வருவாய்க்கு வரி தேவையில்லை. வரி விதிப்பின் நோக்கம், நாணயத்தின் நிலைத்த தன்மையைப் பேணுதல், செல்வத்தைப் பகிர்வது தொடர்பான பொதுக் கொள்கையை வெளிப்படுத்துவது, சில தொழில்கள் அல்லது நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற சில பயன்களின் செலவுகளைத் தனிமைப்படுத்துதல் போன்றதாகும்.

**வரிகளின் வகைகள்:**

**நேர்முக வரிகள்:**

நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர் மீது புரட்டிவிட முடியாது. பேராசிரியர் ஜே.எஸ்.மில்லின் கருத்துப்படி, நேர்முக வரி என்பது ''யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும். வரி செலுத்துபவரே வரிச்சுமையை ஏற்க வேண்டும்''. சில நேர்முக வரிகள்: வருமான வரி, சொத்து வரி மற்றும் நிறுவன வரி ஆகியனவாகும்.

**வருமான வரி:**

வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரி முறையில் மிக முக்கியமான வரியாகும். இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

இந்தியாவில் அரசாங்கத்தினால் மூன்று அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசால் எளிதில் வசூலிக்கக்கூடிய வரிகள் உள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசால் வசூலிக்கப்படுகின்றன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. சொத்துக்களுக்கான வரி உள்ளூர் அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது.

இந்தியாவில் நேரடி வரிகளை விட மறைமுக வரி மூலம் அதிக வரி வருவாயை வசூலிக்கின்றோம். இந்தியாவின் முக்கிய மறைமுக வரி சுங்க வரி மற்றும் GST ஆகும். இந்த இரண்டு வரிகளும் வெவ்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொண்டுள்ளன. பணக்கார நுகர்வோர் ஏழைகளை விட அதிக வரி செலுத்தும் வகையில் அரசாங்கங்கள் வடிவமைக்க முயற்சிக்கின்றன. இருப்பினும் ஏழைகள் இன்னும் இந்த வரிகளின் மூலம் அதிக பணம் செலுத்துகிறார்கள் எனவே, நாம் மறைமுக வரிகளைக் குறைத்து நேரடி வரி மூலம் வசூலை அதிகரிக்க வேண்டும் என்று பலர் வாதிடுகின்றனர்.

இந்திய வரிமுறை வரிவிதிப்புகளுக்கான அனைத்து நியதிகளையும் பின்பற்றுகிறது.

ஆனால் பெரும்பாலும் சமத்துவக் கொள்கை சமரசம் செய்யப்படுவதாகவும், ஒரு சிலரின் நன்மைக்காக வரி முறையுடன் நாம் சரி செய்யும் போது உற்பத்தித்திறன் இழக்கப்படும் என்றும் வாதங்கள் உள்ளன. வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் வருடத்திற்கு ஒரு முறை வரி முறையை அறிவிக்கிறோம். ஆண்டு நடுப்பகுதியில் வரி மாற்றங்களை அறிவிப்பதன் மூலம் இது மிகவும் அரிதாகவே மீறப்படுகிறது. எனவே, இந்திய வரி முறை எல்லாவற்றையும் விட உறுதியான நியதியை கடைபிடிக்கிறது,

**நிறுவனவரி:**

இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதான சொத்துகளின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும் ஈவுத் தொகைகளுக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

இந்த வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது அல்லது இவ்வரியானது இந்தியாவில் தோன்றுவதாக கருதப்படுகிறது.

| வருமானம் | இந்திய நிறுவனங்கள் | அயல்நாட்டு நிறுவனங்கள் |
|---|---|---|
| ரூ.50 கோடிக்குள் | 25% | 40% |
| ரூ.50 கோடிக்கு மேல் | 30% | 40% |

**சொத்துவரி (அ) செல்வ வரி:**

சொத்து வரி (அ) செல்வ வரி என்பது தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**மறைமுக வரிகள்:**

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுகவரி" எனப்படும். வரி விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**சில மறைமுக வரிகளாவன**: முத்திரைக் தாள் வரி, பொழுது போக்கு வரி, சுங்கத் தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகளாகும்.

**முத்திரைத்தாள் வரி:**

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

**பொழுதுபோக்கு வரி:**

எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக திரைப்படங்கள் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற கட்டணம், பொழுது போக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு அரங்கம், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரியாகும்.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:(GsT – Goods and Service Tax)**

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது மறைமுக வரிகளில் ஒன்றாகும். இவ்வரி இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச்29, 2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜூலை-1 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் குறிக்கோள் "ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி" என்பதாகும்.

GST என்பது, நுகர்வோர் பண்டங்கள் அல்லது பணிகளை வாங்கும் போது விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி வழங்குதல் மீதான வரிகளின் அடுக்கு விளைவுகளை GSTநீக்குகிறது. இது மதிப்பு கூட்டப்பட்ட வரி(VAT) போன்று 'பல முனை வரி' இல்லாமல் இது 'ஒரு முறை வரி' ஆகும்.

1954ஆம் ஆண்டு முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமுல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும். 1970-80களில் பல ஐரோப்பிய நாடுகள் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அறிமுகப்படுத்தியது.

**வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது?**

வளர்வீத வரி விதிப்பு முறை, விகித வரி விதிப்பு முறை மற்றும் தேய்வுவீத வரி விதிப்பு முறை என அரசாங்கம் வரிகளை விதிக்கின்றன.

**வளர்வீத வரி விதிப்பு முறை:**

வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும்போது (பெருக்கப்படும்) வரி விகிதமும் (பெருகி) அதிகரிக்கிறது. வரி விகிதத்தை வரி அளவுடன் பெருக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வரியின் அளவு கணக்கிடப்படுகிறது. ஒரு வளர்வீத வரியைப் பொறுத்த வரையில் பெருக்கல் (வருமானம்) அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும்போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறை என்று அழைக்கப்படுகிறது.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் அமைப்பு:**

**மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): (மாநிலத்திற்குள்)**

மதிப்பு கூட்டு வரி (VAT).∴விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பரவரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:**

மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி,ஈடு செய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நலைக் கல்வி வரி)

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): (மாநிலங்களுக்கு இடையே)**

நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. 5%,12% மற்றும் 28% காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

| வரி அடிப்படை | வரிவிகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ரூ.10,000 | 10% | ரூ.1000 |
| ரூ.20,000 | 15% | ரூ.3000 |
| ரூ.30,000 | 25% | ரூ.7500 |
| ரூ.40,000 | 40% | ரூ.16000 |

**விகித வரி விதிப்பு முறை அல்லது விகிதாச்சார வரி விதிப்பு முறை:**

**வரி விதிப்பு முறை:**

ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, விகித வரி விதிப்பு முறை எனப்படுகிறது. அனைத்து வரி செலுத்துவோரும், தங்கள் வருமானத்தில் அதே விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர். இந்த முறையில் வருமானத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் வரி விதிப்பு விகிதம் ஒரே மாதிரியானதாகும். பெறப்பட்ட வரித் தொகை வருமானத்தின் அதே விகிதத்தில் மாறுபடும்.

**எடுத்துக்காட்டு:**

| வரி அடிப்படை | வரிவிகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ரூ.10,000 | 10% | ரூ.1000 |
| ரூ.20,000 | 10% | ரூ.2000 |
| ரூ.30,000 | 10% | ரூ.3000 |
| ரூ.40,000 | 10% | ரூ.4000 |

**தேய்வுவீத வரி விதிப்பு முறை:**

இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

**தேய்வுவீத வரிவிதிப்பு முறை:**

இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

| | | | |
|---|---|---|---|
| **வளர்வீத வரி விதிப்பு** | வருமான அதிகரிப்பு | வரியும் அதிகரிக்கும் | எ.கா.வருமான வரி |
| **விகித வரி விதிப்பு** | வருமான அதிகரிப்பு | வரி குறையும் | எ.கா.நிறுவன வரி |
| **தேய்வுவீத வரி விதிப்பு** | வருமான மாற்றம் | எப்போதும் ஒரே வரி | எ.கா.விற்பனை வரி |

**கருப்பு பணம்:**

கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் “கருப்பு பணம்’ என்று அழைக்கப்படுகிறது.

**கருப்பு பணத்திற்கான காரணங்கள்:**

கருப்பு பணத்திற்கு பல ஆதாரங்கள் காரணங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

1. **பண்டங்கள் பற்றாக்குறை:**

கருப்பு பணம் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலகாரணமாக உள்ளது. கருப்பு பணத்தை கட்டுப்படுத்துவதற்கு அடுத்தடுத்து தடைகள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

2. **உரிமம் பெறும் முறை:**

கட்டுப்பாட்டு அனுமதி, ஒதுக்கீடு மற்றும் உரிமங்களின் அமைப்பு, பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகத்துடன் தொடர்புடையது என்று உறுதியாக நம்பப்படுகிறது. இதன் விளைவாக கருப்பு பணம் உருவாகிறது.

**3. தொழில்துறையின் பங்கு:**

கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது தொழில் துறையாகும். உதாரணமாக வரையறுக்கப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டாளர் பண்டங்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்க முயற்சி செய்வதுடன், அப்பொருளுக்கு அதிக கட்டணம் வசூலிப்பதுடன், அவ்வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் காண்பிப்பதில்லை.

**இந்தியாவில் கருப்பு பணத்தைக் கட்டுப்படுத்த சமீபத்திய சட்ட முயற்சிகள்:**

1. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் இரண்டு முன்னாள் நீதிபதிகளின் தலைவர் மற்றும் துணை தலைவரின் கீழ் கருப்பு (Special Investigation Team) அமைக்கப்பட்டது.
2. ஒரு விரிவான சட்டத்தை இயற்றுவது – கருப்பு பணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துகள்) மற்றும் வரி விதித்தல் சட்டம்,2015)
3. பனாமாவில் சமீபத்திய காகித கசிவுகளின் வெளிப்பாடுகளை விசாரிப்பதற்காக மத்திய நேரடி வரி வாரியம் (CBDT), இந்திய ரிசர்வ் வங்கி(RBI), அமலாக்க இயக்குநரகம்(ED) மற்றும் நிதி புலனாய்வு பிரிவு(FIU) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியலமைப்பு அதிகாரிகளைக் கொண்ட பல நிறுவனக்குழு(MAG) அமைக்கப்பட்டது.
4. இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (DYAAs)/வரித் தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் (TIEAs)/பலதரப்பு மாநாடு
5. வெளி நாட்டு கணக்கு வரி இணக்கச் சட்டம் (FATCA).
6. பண மோசடி சட்டம் 2002 மூலம் நிதிச் சட்டம்-2015
7. பினாமி பரிவர்த்தனைகள் (தடை) திருத்தச்சட்டம்-2016 தொடக்கம்.
8. “சுத்தமான பணச்செயல்பாடு “(Operation of money) ஜனவரி-31,2017ல் தொடங்கியது.
9. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்
10. ரியல் எஸ்டேட்(ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

**கடத்தல்**

கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும். இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளைக் கொண்டிருந்தபோது விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னனுப்பொருட்கள் ஆகியவற்றுக்கு சுங்கத்தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது. அதிகாரிகளை மீறி இந்தப் பொருட்களைக் கொண்டுவருவது கடத்தலாகும்.

**வரிஅமைப்பு:**

தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு வரி ஏய்ப்பு எனப்படும். வரி ஏய்ப்பு பெரும்பாலும் வரி செலுத்துவோர் தங்கள் வரி பொறுப்பைக் குறைக்க வரி அதிகாரிகளிடம் தங்களின் உண்மையான விவகாரங்களை வேண்டுமென்றே தவறாக சித்தரிப்பதை உட்படுத்துகிறது. மேலும், குறைந்த

வருமானம், இலாபங்கள் அல்லது ஆதாயங்களை உண்மையில் சம்பாதித்த தொகையை விட அறிவித்தல் அல்லது விலக்குகளை மிகைப்படுத்துதல் போன்ற நேர்மையற்ற வரி அறிக்கையையும் உள்ளடக்கியது. என்பது பொதுவாக முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும். வரி ஏய்ப்பு அளவின் ஒரு நடவடிக்கை, பதிவு செய்யப்படாத வருமானத்தின் அளவு, வரி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசமாகும்.

வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை:

- வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
- விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது,
- மறைக்கப்பட்ட பணம்.
- கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

**வரி ஏய்ப்பிற்கான காரணங்கள்:**

1. கருப்ப பணத்தின் விளைவாக வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளைத் தடுக்கிறது. நிதிப் பற்றாக்குறை வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்துவதை சிதைக்கிறது. மற்றும் பொதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருந்தால், பற்றாக்குறை நிதியுதவியை நாடும்படி அரசாங்கத்தை கட்டாயப்படுத்துகிறது.
2. இது சேமிப்பு மற்றும் முதலீட்டு முறைகளை சிதைப்பதன் மூலமும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கான வளங்களின் கிடைக்கும் தன்மையினாலும், அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில் தலையிடுகிறது.
3. வரி ஏய்ப்பு, வரி அமைப்பின் சமத்துவப் பண்புகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது. நேர்மையான வரி செலுத்துவோர் விகிதாசார வரிச்சுமையை விருப்பத்துடன் சுமக்கிறார்கள். அவர்களை மனச் சோர்வடையச் செய்து வரி ஏய்ப்பு செய்பவர்களின் முகாமில் சேர ஈர்க்கப்படுகிறார்கள்
4. வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளாதார சக்தியைக் குவிப்பதை ஊக்கவிக்கின்றன. இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்துதலாகும்.
5. வரி ஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி, வரி ஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

**வரி ஏய்ப்பும், அபராதமும்:**

1. ஒரு நபர் வரி ஏய்ப்பு செயலை முழுமையாகச் செய்தால், அவர் மோசமான குற்றச்சாட்டுகளை சந்திக்க நேரிடும். வரி ஏய்ப்பு அபராதங்களில் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிக அளவு அபராதமும் அடங்கும்.
2. பிரதிநிதிகள், வழக்கு விசாரனைக்கான செலவுகளைச் செலுத்த உத்தரவிடப்படலாம்.
3. பிற வரி ஏய்ப்பு அபாராதங்களில் சமூக சேவை, நன்னடத்தை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்து மறுசீரமைத்தல் ஆகயவை அடங்கும்.
4. வரி ஏய்ப்பு அபராதம், குற்றத்தின் தன்மை, மற்றும் அதன் தீவிரத்தினைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

**வரி மற்றும் கட்டணங்கள்:**

வரி என்பது வரி செலுத்துவோர் நேரடி வருவாய் அல்லது நன்மை என்று எதையும் எதிர்பாராமல் அரசாங்கத்திற்குக் கட்டாயமாக செலுத்திடும் கட்டணமேயாகும்.

| வ.எண் | வரி(Tax) | கட்டணம் (Payments) |
|---|---|---|
| 1 | வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு செலுத்துகையாகும். | கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும். |
| 2 | பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி | கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் |

| | | |
|---|---|---|
| | மேலோங்கியுள்ளது. | பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| 3 | வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | கட்டணம் (Fee) என்பது தன்னார்வக் கட்டணமாகும். |
| 4 | ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார் | மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 5 | வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது. உதாரணம்: வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி(VAT) | கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர். உதாரணம்: முத்திரை வரி, ஓட்டுநர் உரிமக் கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம். |

பொது நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பங்கீடு செய்தல் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம், நிர்வாக நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஆகியவை கட்டணங்களில் அடங்கும். வரி வருமானம் தவிர்த்து, வரி அல்லாத மூலங்களிலிருந்து பெறக்கூடியவை கட்டணங்கள் ஆகும்.

சில செலுத்துதல்கள், கட்டணங்கள் (Fees), அபராதங்கள், தண்டனைகள் மற்றும் பறிமுதல்கள் ஆகும்.

**வரிகளும் முன்னேற்றமும்:**

பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் வரி விதிப்பின் பங்கு பின்வருமாறு:

**1. வளங்களைத் திரட்டுதல்:**

வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது. உதவுகிறது. குறிப்பாக நேர்முக வரிமுறையான தனிநபர் வருமானவரி, நிறுவன வரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

**2. வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்:**

வரியின் மூலம் சமத்துவமுறையை உருவாக்கலாம். குறிப்பாக, நேர்முக வரியில் வளர்வீத வரி முறை பின்பற்றப்படுகிறது. அதேபோல் சில மறைமுக வரியான ஆடம்பரப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி வளர்வீத வரியின் தன்மையுடையதாகும்.

**3. சமூக நலன்:**

வரி விதிப்பு சமூக நலநன உருவாக்குகிறது. சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

**4. அந்நியச் செலாவணி:**

வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்கவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது. பொதுவாக, வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளும் ஏற்றுமதி பொருட்களுக்கு வரிகளை விதிப்பதில்லை.

**5. வட்டார முன்னேற்றம்:**

வட்டார வளர்ச்சியில் வரி விதிப்பு முக்கியப் பங்கினை வகிக்கிறது. பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்காக வரிச் சலுகையையும், வரி விலக்குகளையும் அளிப்பதன் மூலம், அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது,

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்:**

வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது, அரசாங்கம் பண்டங்கள் மீதான வரி விகிதத்தை குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

## அலகு-5

## தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்:

### அறிமுகம்:

பொதுவாக மூலப்பொருட்களை எளிதில் பயன்படுத்தக் கூடிய பொருட்களாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு மனித நடவடிக்கையையும் நிறைவேற்றுமிடம் ''தொழிற்சாலை'' என்று அழைக்கப்படுகிறது. நுகர்வோருக்கும் மற்ற உற்பத்தியாளர்களுக்கும் தேவைப்படும் பொருட்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திப் பெருமளவில் உற்பத்திச் செய்வது தொழில்மயமாதல் எனப்படும். தொலைபேசிகள் மற்றும் தொலைகாட்சிப் பெட்டிகள் போன்ற நுகர்வுப் பொருட்கள் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்திச் செய்கின்ற அதே வேளையில் தொழிற்சாலைகள் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உதிரிபாகங்கள் போன்றவற்றை உற்பத்திச் செய்கின்றன. ஒரு நாட்டின் உற்பத்தியானது எண்ணிக்கையையும் அதன் அளவையும் அதிகரிக்க ஒரு வரலாற்று அணுகுமுறையை நீண்ட காலமாக கொண்டுள்ளது, இதற்கு பல்வேறு முக்கிய காரணங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் தொழில்மயமாதலின் தன்மை, தொழில் தொகுப்புகளின் முக்கியத்துவம் மற்றும் தமிழ்நாட்டில் தொழில் தொகுப்புகள் எவ்வாறு முன்னேறின என்பதையும் தொழில்களை மேம்படுத்துவதில் அரசு எடுக்கும் முயற்சிகளையும் அதன் பங்கினைப்பற்றியும் இப்பாடப்பகுதியில் நாம் அறிந்து கொள்வோம்.

### தொழில் மயமாதலின் முக்கியத்துவம்:

தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும் முன் நாம் ஏன் வேளாண்மையின் வளர்ச்சியுடன் அதன் பொருளாதார வருவாய் மற்றும் வேலைவாய்ப்பு குறைகிறது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக உணவுத் தேவையுடன் வருமானத் தேவையும் நிலையானதாக உள்ளது. எனவே, ஒரு நாட்டின் பொருளாதாரம் வளர்ந்து வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வோர் வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் செலவிடுகிறார்கள்.

இரண்டாவதாக, நுகரப்படும் உணவும் பொருளாதார விரிவால் பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. அதனால் பல வட்டாரங்களுக்கிடையேயும், மக்களுக்கிடையேயும் வேளாண் தொழிலில் அதிக வேலைவாய்ப்பு முறை காணப்படுகிறது. உணவுப்பொருட்கள் நீண்ட தூரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பதப்படுத்தி முத்திரையிடப்படுகிறது. இதன் விளைவாக நுகர்வோர்கள் வாங்கும் விலையைவிட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.

மூன்றாவதாக, நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டே வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக்கொள்வதில் ஆட்களை ஏற்பதில் சில வரையறைகள் பின்பற்ற நேரிடுகிறது. இதன் விளைவாக வேளாண்மை துறையில் உழைப்பாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடிவதில்லை. பெருமளவிலான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை நம்பியிருப்பதாலும், கூலியை அதிகரிக்க வாய்ப்பில்லாததாலும் அதன் விளைவாக வறுமையின் அளவு தொடர்ந்து அதிகரிக்கிறது.

இந்த அனைத்து காரணிகளின் விளைவாக வேளாண்துறையில் இருந்து விலகி, பொருளாதாரமானது உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பின் அடிப்படையில் ஒரு தேவையை ஏற்படுத்துகிறது. எனவே, பொருளாதார முன்னேற்றத்தில் அமைப்பு ரீதியிலான மாற்றத்தின் அவசியத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வேளாண்துறை அல்லாத துறைகளின் பங்கு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தொழில்மயமாதலால் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் பொருளாதாரத்தின் வளர்ச்சியைக் காண்பதால் தொழில்மயமாதலின் முக்கியத்துவத்தைக் காணமுடிகிறது.

தொழில்மயமாதல் ஒரு பொருளாதார வளர்ச்சிக்கு என்னென்ன நன்மைகளைத் தருகிறது.

முன்னர் கூறியதுபோல் ஒரு பொருளாதாரத்தில் பிற உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உள்ளீடுகளை உருவாக்குது அவசியம். வேளாண் உற்பத்தித்திறன் அதிகரிக்க உரங்கள் மற்றும் டிராக்டர்கள் போன்ற தொழில்களுக்கு உள்ளீடுகள் தேவைப்படுகிறது.

இரண்டாவதாக, உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் மற்றும் நுகர்வோர் பண்டங்கள் ஆகிய இரண்டிற்கும் இடையே ஒரு சந்தை நிலவுகிறது. அதே போல் வங்கி, போக்குவரத்து மற்றும் வர்த்தகம் போன்ற பணிகள் தொழிற்சாலைகளின் உற்பத்தியைச் சார்ந்தே உள்ளது.

மூன்றாவதாக, நவீன உற்பத்தி முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழில்கள் சிறந்த உற்பத்தித்திறனை அளிக்கின்றன. இதனால் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பண்டங்களின் உற்பத்தி செலவும் குறைகிறது. இதன் காரணமாக மலிவான விலையில் பண்டங்களை வாங்கிட உதவவும் மற்றும் அதிகளவு உற்பத்தித் தேவையை உருவாக்கவும் உதவுகிறது.

நான்காவதாக, அத்தகையப் பண்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் தொழில்மயமாதல் வேளாண்மையில் ஈடுபடும் அதிக உழைப்பாளர் சக்தியை ஈர்க்க உதவுகிறது. எனவே வேலைவாய்ப்பை உருவாக்குவது ‘‘தொழில் மயமாதலின்’’ ஒரு முக்கிய நோக்கமாகும்.

ஐந்தாவதாக, தொழில்மயமாதலுக்கு நன்மை தருவது ‘‘தொழில்நுட்ப மாற்றமே’’ ஆகும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்மயமாதலின் முறைகளையும் அதன் வளர்ச்சியையும் அறிந்து கொள்ள முடிகிறது. அவற்றின் விளைவாக உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் அதாவது. உழைப்பாளர்களின் உள்ளீடு அதிகரித்தது. இதனால் தொழிலாளர்கள் அதிக வருமானம் ஈட்ட உதவுகிறது.

ஆறாவதாக, வருமானம் அதிகரிப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைக்கு வழி வகுக்கிறது. பொருளாதாரம் அத்தகைய தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமான அளவு பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாவிட்டால் அது இறக்குமதியை நம்பியிருக்க வேண்டும். இதன் காரணமாக அதிகளவு அந்நிய செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதாரம் ஏற்றமதியில் போதுமான வருமானம் ஈட்டவில்லையென்றால் வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்வது கடினம். எனவே தொழில்மயமாதல் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டவும் உதவுகிறது.

**தொழிற்சாலைகளின் வகைகள்:**

**தொழிற்சாலைகளை கீழ்க்கண்ட வகைகளில் வகைப்படுத்தலாம்.**

**அ. பயனர்கள்:** வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது ‘‘நுகர்வோர் பண்டங்கள் துறை’’ என்றும் வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளரால் பயன்படுத்தப்பட்டால் அது ‘‘மூலதன பண்டங்கள் துறை’’ என்றும் அழைக்கப்படுகிறது. சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற பிற தொழில்களுக்கு மூலப்பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தகைய தொழில்களை அடிப்படை பண்டங்கள் தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**ஆ. பயன்படுத்தப்படும் உள்ளீடுகளின் வகை:**
‘‘வேளாண் பதப்படுத்துதல்’’ ஜவுளித்துறை, ரப்பர் உற்பத்தி, தோல் பொருட்கள் போன்ற மூலப் பொருட்களை பயன்படுத்தும் அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துகின்றனர்.

**இ. நிறுவன உரிமையாளர்கள்:**
தொழிற்சாலைகளானது தனியாருக்கு சொந்தமான, பொது உரிமையாளர்(மத்திய அல்லது மாநில அரசாங்கத்தால்) தனியார் மற்றும் பொதுத்துறை (கூட்டுறவாக) இரண்டிற்கும் சொந்தமானது அல்லது கூட்டுறவுக்கு சொந்தமாதாகவும் உள்ளன.

**ஈ.அளவு:** நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி, விற்பனை, முதலீடு அல்லது வேலைவாய்ப்பு அவற்றின் அளவின் அடிப்படையில் பெரியதாகவோ, சிறியதாகவோ அல்லது நடுத்தரமாகவோ இருக்கலாம். ஒரு நிறுவனம் சிறியது,நடுத்தரம் அல்லது பெரியது என்பதைத் தீர்மானிக்க இந்திய அரசு பொதுவாக முதலீட்டை அளவுகோலாகப் பயன்படுத்துகிறது, சிறிய நிறுவனங்களை விட அளவில் சிறயதாக இருக்கும் நுண்ணிய அல்லது மிகச்சிறிய நிறுவனங்களும் உள்ளன. இந்த வகைப்பாடு

முக்கியமானது, ஏனென்றால் சிறிய நிறுவனங்களுக்கு அவற்றை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பெருமளவு நிதி, உள்கட்டமைப்பு அல்லது மானிய உதவிகளை வழங்குகிறது.

சிறிய நிறவனங்கள் இரண்டு காரணங்களால் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, இது பெரிய அளவிலான துறையை விட அதிக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது என்று நம்பப்படுகிறது. பெரிய நிறுவனங்களானது மிகவும் மேம்படுத்தப்பட்ட மற்றும் தானியங்கி தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதால் அது போதுமான அளவு வேலைவாய்ப்பை உருவாக்குவதில்லை. இரண்டாவதாக, சிறிய அளவிலான துறை குறைந்த எண்ணிக்கையிலான சலுகைப் பெற்றப் பின்னணியில் இருந்து ஏராளமான தொழில் முனைவோரை வெளிப்படுத்த அனுமதிக்கிறது.

1980 ஆம் ஆண்டு வரை பெரிய நிறுவனங்கள் மிகவும் திறமையானவை மற்றும் சிறிய நிறுவனங்களை எதிர்த்துப் போட்டியிட முடியும் என்று பரவலாக நம்பப்பட்டது. ஆனால் தற்போது உலகின் பல்வேறு பகுதிகளில் தொழில்மயமாதல் அனுபவங்களின் அடிப்படையில் ஒரு துறையில் நிபுணத்துவம் வாய்ந்த சிறிய நிறுவனங்கள் புவியியல் ரீதியாக குறிப்பிட்ட இடங்களில் குவிந்து உற்பத்தி மற்றும் கற்றலின் மூலம் பெரிய நிறுவனங்களின் திறன் இல்லாவிட்டாலும் அதற்கு ஈடு கொடுக்கும் அளவில் உள்ளதென நம்பப்படுகிறது. இத்தகைய சிறிய நிறுவனங்களின் தொகுப்புகளே "தொழில்துறை தொகுப்புகள்" என்று அழைக்கப்படுகின்றன.

### தொழில் தொகுப்புகள் (Industrial Clusters):

தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளை பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும். தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களுக்கிடையேயான ஒரு பரஸ்பர தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். சிறப்பான தொழில் தொகுப்பினைப் பெற்றிருக்கும் நிறுவனங்கள் உற்பத்திச் செயல்முறைகளுக்கு உள்ளீடுகளை வழங்குதல் அல்லது தொகுப்புகளிடையே மற்றொரு நிறுவனத்தின் வெளியீட்டை ஈர்த்தல் போன்றவை தொகுப்புகளின் போட்டித்தன்மைக்கு முக்கியமானதாகும். இங்கிலாந்தில் உலோகம் மற்றும் நெசவு தொழிலில் ஈடுபட்ட சிறிய நிறுவனங்களின் செயல்பாடுகளின் தொகுப்பினை புரிந்துகொள்ள 1920களில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞரான ஆல்.்பிரட் மார்சல் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்த பொழுது தொழில் தொகுப்பு அல்லது மாவட்டங்களின் நன்மைகளை முதன் முதலில் கண்டறிந்தார். 1980-களில் இத்தாலியில் சிறிய நிறுவனங்கள் வெற்றி பெற்ற பின்னர்தான் மார்ஷலின் "தொழில்துறை மாவட்டம்"(Industrial District) என்ற கருத்து பிரபலமாக்கப்பட்டது. இந்தியா போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் கொள்கை-வகுப்பாளர்கள் தங்களுடைய நாட்டில் இது பொன்ற பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்பினை உணர்ந்ததால் அவற்றினை ஊக்குவிக்கத் தொடங்கினர்.

**வெற்றிகரமான தொழில் தொகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:**

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.(SMEs)
- துறை சார்ந்த சிறப்பு கவனம்
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்
- சுய உதவி குழுக்கள் செயல்படுதல்
- வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு

போன்றவற்றால் நிறுவனங்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரமாக ஒத்துழைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேலையில் பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் அவர்கள் தங்கள் திறனை விரிவுபடுத்த முடியும். போட்டியின் மூலம் அவர்கள் மிகவும் திறமையானவர்களாக மாற கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். சென்னை வட்டாரத்தைத் தவிர தொழிற்துறை வளர்ச்சியானது

மாநிலம் முழுவதும் பல்வேறு சிறிய நகரங்களில் தொழில் தொகுப்புகள் மேற்கு வட்டாரத்திலேயே குவிந்துள்ளன. இந்த தொகுப்புகளின் பல்வேறு செயல்பாடுகளாக ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்காரப் பொருட்கள் உற்பத்தி, ஜவுளி, தோல், கோழி வளர்த்தல், கயிறு தயாரித்தல், போக்குவரத்து உபகரண பணிகள், பொறியியல் பணிகள், தானியங்கி உதிரி பாகங்கள் தயாரித்தல் போன்றவைகள் ஆகும்.

**தொழில்தொகுப்பு எவ்வாறு தோன்றுகிறது?**

தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. ஒரு சில தொழிற் தொகுப்புகள் தோன்றிய இடங்களில் கைவினைஞர்கள் குடியேறி நெடுங்காலமாக அங்கு தங்கி இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சி இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இல்லையெனில், சில துறைகளில், ஒரு பெரிய நிறவனம் நிறுவப்படும்போது, அதன் உள்ளீடு மற்றும் பணிகளின் தேவைகளை கவனித்துக் கொள்வதற்காக ஒரு தொழில் தொகுப்பு நிறுவனங்கள் தேன்றக்கூடும். சில நேரங்களில், வட்டாரத்திலிருந்து மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை ஊக்குவிக்க அரசாங்கங்கள் முடிவு செய்யலாம், இது தொழில் தொகுப்பு தோன்றுவதற்கு வழிவகுக்கும்.

**தமிழ்நாட்டின் தொழில்மயமாதலின் முன்னேற்றம் பற்றிய வரலாறு:**

தமிழ்நாட்டில் காலனித்துவ முன்காலத்தில் ஜவுளி, கப்பல் கட்டுமானம், இரும்பு மற்றும் எ.்.கு தயாரித்தல் மற்றும் மண்பாண்டங்கள் தயாரித்தல் போன்ற தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான ஏராளமான சான்றுகள் உள்ளன. தமிழ்நாடு பரந்துவிரிந்த கடற்கரையைக் கொண்டுள்ளதால், பல நூற்றாண்டுகளாக தென் கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டது. தொழிற்புரட்சிக்கு பிறகு இங்கிலாந்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரங்களின் இறக்குமதியின் காரணமாகப் போட்டி நிலவி கைத்தறி நெசவுத்தொழில் வீழ்ச்சிக்கு காலனித்துவ கொள்கைகளும் பங்களித்தன. இருந்தபோதிலும் சில தொழில்கள் காலநித்துவ காலத்தில் வளர்ந்தன. மேலும் மாநிலத்தில் தொழில்மயமாதலுக்கான அடிப்படையாக விளங்கியது.

**காலனித்துவ காலத்தில் தொழில்மயமாதல்:**

காலனித்துவ காலத்தில் தொழில் மயமாதலில் இண்டு காரணிகள் பெரும்பங்கு வகித்தது. முதலாவதாக,மேற்கு மற்றும் தெற்கு தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பருத்தி சாகுபடி அதிகளவு நெசவுத்தொழில் தோன்றுவதற்குக் காரணமாகவும் இருந்தது. இந்த பருத்தி நெசவுத்தொழிலில் விதை நீக்குதல், அழுத்துதல், நெசவு மற்றும் நூற்பு போன்ற செயல்பாடுகளில் ஈடுபட வழிவகை செய்தது. மேலும் ரயில்வே துறையின் அறிமுகமானது பருத்தி நூல் சந்தையை விரிவுபடுத்தவும், இந்த தொழில் வளர ஒரு காரணமாகவம் இருந்தது.

இரண்டாவதாக, இந்த காலகட்டத்தில் வாணிபத்தின் வளர்ச்சியானது சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுக வட்டாரங்களின் அருகாமையில் தொழிற்சாலைகள் உருவாக காரணமாகவும் இருந்தது. மேலும் சென்னையை சுற்றி வாகனங்கள் மற்றும் தோல் தொழிற்சாலை வளர்ச்சியைக் கண்டது. தென் தமிழ்நாட்டில் வெல்லம் உற்பத்தி தொழிற்சாலையின் வளர்ச்சி மற்றொரு சிறந்த உதாரணமாகும். மேலும்,காலனித்துவ காலத்தில் சிவகாசியில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு பின்னர் பட்டாசு உற்பத்தி மற்றும் அச்சுத் தொழிலுக்கு முக்கிய மையமாக மாறியது. துறைமுகம் சார்ந்த தொழில்களும் இதே காலகட்டத்தில் இப்பகுதியின் வளர்சிக்குக் காரணமாகவும் இருந்தது. தோல் உற்பத்தித் தொழிலானது திண்டுக்கல், வேலூர், ஆம்பூர் ஆகிய பகுதியில் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் நெசவுத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியானது, இயந்திரங்களின் தேவையையும் அதற்கான தொழிற்சாலைகளையும் நிறுவ காரணமாகவும் இருந்தது. இந்த நெசவு இயந்திரத் தொழிற்சாலைகளுக்கான இயந்திர உதிரி பாகங்கள், பழுது பார்த்தல் மற்றும் உற்பத்தி செய்வதற்கான சிறிய அளவிலான தொழிற்சாலைகள் அதிக அளவில் வளர்ச்சி அடைந்தன. 1930களில் தமிழகத்தின் மேற்குப் புகுதியில் நீர் மின் சக்தியில் இருந்து மின்சாரம் உற்பத்தி மற்றொரு முக்கிய தொழில் வளர்ச்சி ஆகும். நிலத்தடிநீரை உறிஞ்சுவதற்கு பயன்படத்தப்படும் எண்ணெய் இயந்திரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மின்சாரம் கிடைத்தமையால்,

வேளாண்மைத் தொழில் விரிவடைந்ததுடன் எண்ணெய் இயந்திரங்களின் தேவையும் அதிகரித்தது. இதன் காரணமாக, இதனை சார்ந்த எண்ணெயங் இயந்திர உதிரிபாகங்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் அதிகளவில் உருவாயின. இதனால் உலோகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேளாண்மை சார்ந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டன.

**சுதந்திரத்திற்குப் பின் 1990களின் முற்பகுதியில்:**

தொழில் வளர்ச்சியானது சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய மற்றும் மாநில அரசுகளால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. சென்னையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் ரயில் பெட்டித் தொழிற்சாலையும் திருச்சிராப்பள்ளியில் கொதிகலன் மற்றும் விசையாழிகள் தயாரிப்பதற்காக பாரத கனரக மின்சாதன நிறுவனத்தை (Bharat Heavy Electricals Limited (BHEL) மத்திய அரசு நிறுவியது. BHELநிறுவனம் அதனுடைய உள்ளீட்டுப்பொருட்கள் தேவைகள் தொடர்பாக பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்புகளின் தோற்றத்திற்கு வழிவகை செய்தது. சென்னை புறநகரில் உள்ள ஆவடியில் போர் தளவாடங்கள் தயாரிக்க கனரக வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனமும் சென்னையில் மகிழுந்துகளை உற்பத்திச் செய்யத் தொடங்கியது. அசோக் மோட்டார்ஸ் (பின்னர் ஆசோக் லேலண்ட்) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் இணைந்து சென்னை வட்டாரத்தில் வாகனத்தொழில்துறை தொகுப்புகள் வளர்ச்சிக்கு உதவியது. மேலும் இது வாகன உதிரி பாகங்களின் நகரமாக மாறியது. 1950களில் இப்பகுதியில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வாகன கூறுகளை வழங்குவதற்கு சிறிய மற்றும் நடத்தர அளவிலான நிறவனங்களுக்கு உதவியாக ஆவடியில் தொழில் தோட்டங்கள் நிறுவப்பட்டது. மாநிலத்தில் அதிக நீர் மின்சக்தி திட்டங்கள் மூலம் மின்மயமாதலை பரவலாக அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது, இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு பெரும் பங்கு வகித்தது. 1973-ஆம் ஆண்டில் எஃகு உற்பத்தி செய்வதற்காக சேலத்தில் இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்டது.
கோயம்புத்தூர் பகுதியில், ஜவுளி, ஜவுளி இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள் மற்றும் நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கான பம்ப் குழாய்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பன்முகத் தன்மையின் வளர்ச்சியைக் கண்டது.

1970 மற்றும் 1980களில் கோயம்புத்தூர் பகுதியில் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் அதேபோல் திருப்பூரில் பின்னலாடைத் தொழில் தொகுப்புகள் விரிவாக்கம் மற்றும் கரூரில் வீட்டு அலங்காரப் பொருட்கள் தொழில்துறை தோட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறவனங்கள் ஊக்கப்படுத்தப்பட்டது. மாநிலத்தில் பின்தங்கிய வட்டாரங்களில் தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கு இத்தகைய கொள்கை முயற்சிகளை பயன்படுத்தி வெற்றி பெறச் செய்வதற்கு ஒரு உதாரணமாக தமிழகத்தில் ஓசூரில் விரிவாக்கப்பட்ட தொழில் தோட்டங்களை சான்றாகக் கூறலாம்.

**தமிழ்நாட்டின தொழில்மயமாதல்:**

**தாராளமயமாதல் கட்டம்:**

1990களின் முற்பகுதியில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற தொழில் மயமாதலின் இறுதி கட்டம் ஆகும். இந்த சீர்திருத்தங்கள் மாநில அரசாங்கங்கள் வளங்களை திரட்டுவதற்கு பொறுப்பேற்கச் செய்தன. மேலும் அவை தொழில் மயமாதலுக்கு தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஒருவருக்கொருவர் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மலிவான நிலம், வரிச்சலுகைகள் மற்றும் மானியங்கள் போன்ற சலுகைகள், ஆனால் தரமான சக்திகள் மூலம் முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க ஊக்கப்படுத்தின. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவை ஏற்றுமதி சந்தைகளைத் திறக்க உதவியது. இது இரண்டு பெரிய முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.

முதலாவதாக,வர்த்தக தாராளமயமாக்கலின் நடவடிக்கைகள் காரணமாக ஜவுளி, வீட்டு அலங்கார பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி விரைவாக வளரத் தொடங்கியது. இரண்டாவதாக, முதலீடுகளை ஈர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Companies – MNCs) தமிழகத்தில் குறிப்பாக வாகனத்துறையில் நுழைவதற்கு

வழிவகுத்தன. வாகனத் தொழில்துறை வாகன பொருட்கள் தயாரிப்பவர்களையே பெரிதும் நம்பி இருந்தன. பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவு மற்ற பன்னாட்டு நிறுவன வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பவர்களை கொண்டு வரவில்லை. நகரின் புற நகரில் நோக்கியா, ஃபாக்ஸ்கான், சாம்சங், மற்றும் பிலக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற ஆலைகள் பன்னாட்டு நிறுவனங்களுடன் சென்னை வட்டாரத்திலும் மின்னணுத் துறையின் மின்னணுத் துறையின் மையமாக உருவெடுத்தது. ஆனால் உள்நாட்டு உதிரிபாக பொருட்கள் தயாரிப்பளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கத் திறந்தது. ஒரு குறிப்பிடத்தக்க பங்கு முதலீட்டினால் சென்னை எல்லையில் உள்ள மாவட்டங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones-SEZs) உருவாக்கப்பட்டன. உற்பத்தி முதலீடுகளை ஈர்ப்பதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (SEZs) வழிகளைப் பயன்படுத்தி வெற்றியடைந்ததில் ஒரு முன் மாதிரியாக விளங்கிய தமிழ்நாடு பெரிதும் பாராட்டத்தக்கது.

தமிழகத்தில் மிக நீண்ட காலமாக உருவாகிய முக்கிய தொழில்களான சர்க்கரை, உரங்கள், சிமெண்ட, விவசாயக் கருவிகள், இரும்பு மற்றும் எஃகு ரசாயனங்கள், மின்மாற்றிகள் மற்றும் காகிதங்கள் போன்றவையாகும்.

இந்த காரணிகளின் விளைவாக தற்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் விட தமிழ்நாடு அதிக தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. மேலும் உற்பத்தித் துறையில் வெலைப்பணி இடங்களிலும் அதிகப் பங்கினை பெற்றுள்ளது. முக்கியமாக மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற முன்னேறிய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இது அதிக உழைப்பு மிகுந்ததாகும். வாகன தொழில்கள், தானியங்கி கூறுகள், இலகுரக மற்றும் கனரக பொறியியல், இயந்திரங்கள், பருத்தி ஜவுளி, ரப்பர், உணவுப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள், இராசயனங்கள் மற்றும் தோல் பொருட்கள் போன்றவைகள் முக்கியத் தொழில்களாகும். மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் (13 மாவட்டங்களில் 27 தொழில் தொகுப்புகள்) தொழில்துறைகள் பரவியிருக்கின்றன. மேலும் அவற்றுள் பல தொழில்கள் ஏற்றுமதி சார்ந்தவையாகும். மாநிலத்தின் சாலைகள், ரயில் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து மற்றம் முக்கிய துறைமகங்கள் அனைத்தும் போக்குவரத்து இணைப்பினால் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

தொழில்மயமாதல் பரவலினால் தொழில் முனைவோர்களின் சமூக நலத்தினை வரிவுபடுத்தியது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் வணிக சமூகங்கள் வட இந்திய தொழில் முனைவோர் மற்றும் வணிகக் குழுக்களைப் போல் அல்லாமல் ஒரு பின்தங்கிய சமூக பின்னணியில் இருப்பதனால் ஒரு வியாபாரத்தினைத் தொடங்குவதற்கு மூலதனத்தின் ஒப்பீட்டளவில் ஒரு சிறிய அளவிலேயே முதலீடு செய்யப்படுகிறது. ஆனால் தமிழ்நாடு தொழிற்சாலைகளின் அதிகப்படியான பரவலை பெற்றுள்ளது, தமிழகத்தில் பெரிய, சிறிய மற்றும் வீட்டு தொழில்கள் உள்ளது. இந்த பரவலான தொழில்மயமாதல் மற்றும் நகரமயமாதலின் செயல்முறைகளால் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் சிறந்த கிராம மற்றும் நகர்ப்புற இணைப்புகளுக்கு வழிவகுத்தது.

**தமிழ்நாட்டின் முக்கிய தொழில்துறை தொகுப்புகள் மற்றும் அவற்றின் சிறப்புகள்:**

**தானியங்கி தொகுப்புகள்:**

சென்னை பெரிய அளவிலான வாகனத் தொழில்துறை தளமாக இருப்பதால் "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுகிறது. சென்னையானது மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமை இடமாகத் திகழ்கிறது. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS,TI சைக்கிளஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஆகியன இதற்கு முன்னர் இருந்தன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின்னர் ஹுண்டாய், ஃபோர்டு, டைம்லர்பென்ஸ் மற்றும் ரெனால்ட்-நிசான் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்கள் (Multi National Companies) (MNC) இப்பகுதியில் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளன. எனவே வெளிநாடுகளிலிருந்து பல உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளரின் கவனங்கள் இங்கே ஈர்க்கப்பட்டுள்ளது. பல உள்நாட்டு நிறுவனங்களும் சேர்நது அனைத்து நிறுவனங்களுக்கான உதிரி பாகங்களின் உற்பத்தித் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.

ஓசூர் மற்றொரு தானியங்கி தொகுப்பாகும். இங்கு TVS மற்றும் அசோக்லேலண்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றன. கோயம்புத்தூர் பகுதி ஒரு தானியங்கிகளின் தொகுப்பாக வளர்ந்து வருகிறது.

**வாகன மற்றும பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள்:**

தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர் பெற்ற இடங்களாகும். சுமை தூக்கும் வாகனக் கட்டுமானத் துறையில் 150 தொழில்களில் 250அலகுகளில் இந்த தொகுப்பில் 12 பெரிய அளவிலான சுமை தூக்கும் வாகனக் கட்டுமான துறைகள் உள்ளன. 50க்கும் மேற்பட்ட அலகுகளைக் கொண்டு கரூர் மற்றொரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல தொழில் முனைவோர்கள் பெரிய அளவிலான வாகனக் கட்டுமானத் துறையில் பணி புரிந்து தற்போது தங்கள் சொந்த அலகுகளை அமைக்க முன்வந்துள்ளனர்.

**நெசவுத்தொழில் தொகுப்புகள்:**

இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத்தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் ‘‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’’ என அழைக்கப்படுகிறது. தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும். எனவே நமது நாட்டின் மிகப்பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.

கோயம்புத்தூரைச் சுற்றி அருகிலுள்ள பல்லடம் மற்றும் சோமனூர் சுற்றி சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் நன்கு செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீடுகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்கின்றன. ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத்தறித் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.

திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏாளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80/ பங்கினைக் கொண்டுள்ளது. 1980களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டுச் சந்தையில் ஒரு மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது. ஆரம்பத்தில் உள்ளூர் தொழில்முனைவோரால் பெரும்பாலான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

**உலகளாவிய தெற்கு நாடுகள்:(Global South)**
தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய தெற்கு நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

வாகனக் கட்டுமானத் தொழிலமைப்பைக் தவிர மேசைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது. மேலும் பவானி மற்றும் குமாராபாளையம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரை விரிப்புகளை உற்பத்திச் செய்யும் முக்கிய மையங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய நவீன தொகுப்புகளைத் தவிர பட்டு மற்றும் கைத்தறிப் புடவைகளுக்கு பிரபலமான மதுரை மற்றும் காஞ்சிபுரம் போன்ற பாரம்பரிய கைவினைத் தொகுப்புகளும் உள்ளன. இந்த விசைத்தறி தொகுப்புகளில் பல அலகுகள் பயன்படுத்தியதன் மூலம் புதுமைமயமாதலின் அளவை அடைந்தன.

**தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு:**

இந்தியாவின் 60% தோல் பதனிடும் உற்பத்தித்திறனையும் 38%தோல் காலனிகள் மற்றும் தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தியையும், தமிழ்நாடு பெற்றிருக்கிறது. வேலூர் அதனைச் சுற்றியுள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது. தோல் பொருட்கள் ஏற்றமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது. சென்னையிலும் பல தோல் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றமதி தொழிற்சாலை நிறுவனங்கள் உள்ளன. திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தோல் பதனிடுதல் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலையின் தொகுப்பு காணப்படுகிறது. தோல் உற்பத்தித் தொழிற்சாலையும் வேலைவாய்ப்பை அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு:**

தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும். சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக இதனையே சார்ந்துள்ளது. அச்சிடும் தொழிற்சாலை ஒவ்வொன்றும் அவற்றின் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொழிலானது தற்பொழுது அதிகளவில் வேலைவாய்ப்பை அளிக்கிறது.

**மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள்:**

1990-களில் ஏற்பட்ட பொருளாதார சீர்திருத்தத்திற்குப் பின் வந்த நோக்கியா, ஃபாக்ஸ்கான், மோட்டோரோலா, சோனி எரிக்ஸன், சாம்சங் மற்றும் டெல் போன்ற வன் பொருள் மற்றும் மின்னணு பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் கைபேசி கருவிகள், சுழல் பலகைகள், நுகர்வோர் மின் சாதனப்பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இந்நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியுள்ளன. பகுதிகளில் நிறுவனங்களை நிறுவின.

நோக்கியா நிறுவனம் மூடப்பட்ட போதிலும் சென்னை தொடர்ந்து நாட்டின் மின்னணு சாதனை உற்பத்தியின் மையமாகவே உள்ளது.

அதேபோல் மென்பொருள் உற்பத்தித்துறை விரிவாக்கம் சென்னையிலும் குறிப்பிட்ட அளவு கோயம்புத்தூரிலும் மென்பொருள் உற்பத்தி சேவையில் சிறந்த மையங்களாக விளங்குகிறது.

**குறிப்பிட்ட சில தகவல்தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள்:**

வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier-II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலம் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSECs (IT குறிப்பிட்ட பொருளாதார சிறப்பு மண்டலங்கள்) நிறுவியுள்ளது.

- சென்னை– சோழிங்கநல்லூர்
- கோயம்புத்தூர் - விளாங்குறிச்சி
- மதுரை - இலந்தை குளம்
- மதுரை –வடபாலஞ்சி, கிண்ணிமங்கலம்
- திருச்சிராப்பள்ளி – நாவல்பட்டு

மாநிலத்தின் அலகுகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் ELCOSEZs மூலம் வசதிகள் வழங்கப்படுகிறது. புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. (வரைபட தகவல் தொழில்நுட்பக் கொள்கை-2018-19)

- திருநெல்வேலி– கங்கைகொண்டான்
- சேலம் - ஜாகீர் அம்மாபாளையம்
- ஓசூர் - விஸ்வநாதபுரம்

**தமிழ்நாட்டில் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு உதவும் கொள்கைக் காரணிகள்:**

கொள்கைக் காரணிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**கல்வி:**

திறமை வாய்ந்த மனித வளங்கள் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகிறது. நமது மாநிலமானது தொடக்கக் கல்விக்காக அதிகமான கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், படித்தவர்களின், எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் அடிப்படை எண் கணித திறன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இது நாட்டில் மிக அதிகப்படியான தொழில்நுட்ப வல்லுநர்களைத் தருவதிலும் பெயர் பெற்ற இடமாகும். இந்தியாவில் அதிக அளவில் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில்நட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி மையம் போன்றவைகளின் புகலிடமாக தமிழகம் உள்ளது.

**உள்கட்டமைப்பு:**

மாநிலங்களில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தொழில்மயமாதல் பரவுதலுக்கு மின்சார வநியுயோகம் சிறப்பான பங்கினை வகிக்கிறது . மின்சார விநியோகம் மட்டுமல்லாது. தமிழ்நாடானது மிகச் சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்புக்குப் பெயர் போனது ஆகும். குறிப்பாக கிராமப்புற சிறு சாலை வசதிகளால் அருகிலுள்ள சிறு நகரங்களுடனும், பெரு நகரங்களுடனும் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் போக்குவரத்துத் துறைகள் ஒருங்கிணைந்து கிராமப்புற மற்றும் நகரபுறங்களின் இணைப்பை எளிதாக்கியுள்ளது. சிறு உற்பத்தியாளர்களை சிறந்த சந்தைகளோடு இணைத்து அவர்களுக்கு நற்பலனைக் கொடுக்கிறது.

**தொழில்துறை ஊக்குவிப்பு:**

கல்வி, போக்குவரத்து மற்றும் ஆற்றல் வாய்ந்த உள்கட்டமைப்புகளுக்கு முதலீடு செய்வது மட்டுமல்லாமல், சிறந்த தொழிற் பிரிவுக்கான தொழிற்சாலை விரிவாக்கங்களை சிறந்த தொழிற்சாலை விரிவாக்கங்களை சிறந்த பகுதிகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின் குறிப்பிட்ட காரணிகளான தானியங்கி, தானியங்கிக் கருவிகள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் செய்தி மற்றம் செய்தித் தொடர்புக்கான பிரிவுகள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பெரிய, சிறிய மற்றும் நடுத்தர பிரிவில் மேம்படுத்த உதவும் ஆதரவான உள்கட்டமைப்புகளை நாடு முழுவதும் பல இடங்களில் தொழில்துறை மேம்பாட்டு முகமைகளை அரசு நிறுவியுள்ளது.

**தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு:**

**திறவுகோலாக செயல்பாடுகள் முகமைகள்:**

**தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT – State Industries Promotion Corporation of Tamil Nadu), 1971.**

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (Sipcot) என்பது 1971இல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழிற் தோட்டங்களை அமைத்தது,

**தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO-Tamil Nadu Smal Industries Development Corporation) 1970**

தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) என்பது 1970ல் தமிழக அரசால் நம் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்த்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.

**தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO – Tamil Nadu industrial Development Corporation)1965**

நம் மாநிலத்தில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - வரையறுக்கப்பட்டது. (TIIC – Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949**

புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில் பிரிவுகளை பெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது. அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் என்றாலும் குறிப்பாக 90%மிகச்சிறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones-SEZs)**

நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. SEZ அலகுகளில் சுய சான்றிதழ் அடிப்படையில் அலகுகள் அமைக்கப்படலாம். பொதுத்துறை, தனியார் துறை அல்லது கூட்டுத் துறை அல்லது மாநிலங்களில் SEZ அமைப்பதற்கான கொள்கை வழங்கப்படுகிறது. தற்போதுள்ள சில ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக மாற்றப்படும்.

**அதன்படி, பின்வரும் இடங்களில் அமைந்துள்ள ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைத்துள்ளது.**

நாங்குநேரிSEZ- பல்நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி
எண்ணூர் SEZ- அனல்மின் திட்டம், வயலூர்
கோயம்புத்தூர் SEZ - தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள்
ஓசூர் SEZ- தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு
பெரம்பலூர் - பல்நோக்கு உற்பத்தி SEZ
தானியங்கி நகரம் (Auto city)SEC - தானியங்கள்/தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர்
இந்தியா-சிங்கப்பூர் கிடங்குகள்-திருவள்ளூர் மாவட்டங்கள் -IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும்
உயிரி-மருந்துகள் SEZ- மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி.

**மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone)**

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

**தமிழ்நாடு சிறுதொழில் கழகம் - வரையறுக்கப்பட்டது. (TANSI – Tamil Nadu Small Industries Corporation Ltd)1965**

தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, வரும் சிறுதொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு சிறுதொழில் கழகமானது (TANSI) தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.

**தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் பணிகள் துறை:**

தொழில்நுட்ப மாற்றங்களால், தொழிற்சாலைகளில் பணியாளர்களை பணிக்கு நியமிப்பது என்பது முடியாதது ஆகிறது. தானியங்கிகளின் பயன்பாட்டால், உற்பத்தியில் தொழிலாளர்களின் தேவையானது குறைத்துவிட்டது. கடந்த மூன்று சகாப்பதங்களாக மிக அதிகமான பணியாளர்கள், பணிகள் துறையினால் பணி அமர்த்தப்பட்டனர். சில முக்கியமான மற்றும் சக்தி வாயந்த தொழில் பிரிவுகளான மென்பொருள் பணிகள், சுகாதாரம் மற்றும் கல்வி துறைக்கான சக்தி வாயந்த இடமாக தமிழகம் திகழ்கிறது. சுகாதாரம் மற்றும் கல்வித் துறையானது சென்னை மற்றம் கோயம்புத்தூரிலும் பரவலாக செயல்படுகிறது. மென்பொருள் சேவைகள் மிக அதிகமாக சென்னையிலேயே குவிந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக, சில மென்பொருள் நிறுவனங்கள் கோயம்புத்தூருக்கு மாறியுள்ளன.

**தொழில்மயமாதலின் பிரச்சனைகள்:**

தமிழகம், நமது நாட்டின் சிறந்த தொழில்மயமான மாநிலமாக இருந்த போதிலும் சில குறைகளை சந்திக்க வேண்டியுள்ளது. வேதிப்பொருட்கள், ஜவுளித்துறை மற்றும் தோல் தொகுப்புகள் மூலம் வரும் திரவக் கழிவுகள் நமது சுகாதாரத்தை கெடுக்கிறது. இந்த திரவக் கழிவுகள் சேரும் நீர் நிலைகளை மட்டுமல்லாமல் அதையொட்டியுள்ள விவசாய நிறுவனங்களையும் மாசுபடுத்துகிறது. இந்த குறைகள் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியதாகும். உலகளாவிய அளவில் போட்டிப் போடுவதற்காக முதன்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதால் நிலையான வேலை வாய்ப்புக்கான குறை ஏற்படுகிறது. பணியாளர்களின் தரமானது இன்றைய காலகட்டத்தில் தற்காலிகமாக பணியமர்த்துவதால் குறை ஏற்படுகிறது. இந்த குறையும் உடனடியாக கொள்கை வகுப்பாளர்கள் கவனிக்க வேண்டிய ஒரு குறை ஆகும்.

**ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் (தொடங்கப்பட்டது: ஜனவரி 16,2016)**

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல்.

**ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (தொடங்கப்பட்டது: ஏப்ரல் 5,2016)**

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி (புசநநகெநைடன நுவெநசிசளைந)

நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 இலட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (ளுஊ) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ளுவு) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

**தொழில் முனைவோர்:**

ஒரு ‘‘தொழில் முனைவோர்’’என்பவர் புதிய சிந்தனைகளுக்கும், வணிக செயல்முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார். இவர்களிடம் சிறந்த நிர்வாகத் திறன்கள், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தேவையான தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

**தொழில் முனைவு:**

தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும். இவை ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

**தொழில் முனைவோரின் பங்கு:**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் தொழில் முனைவோரின் பங்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

1. தொழில் முனைவோர் கிராமப்புற மற்றும் பின்தங்கிய தொழிற்சாலைகளை முன்னேற்றுவதுடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிலவும் வட்டார ஏற்றத்தாழ்வுகளை நீக்குகிறார்கள்.
2. இவர்கள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தலா வருமானம் உயர்வதற்கு உதவி புரிகிறார்கள்.
3. வருமானம் மற்றும் செல்வத்தின் செறிவைக் குறைப்பதன் மூலம் அவை சமூகத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.
4. குடிமக்களின் அசையா சேமிப்புகள் மற்றும் நாட்டின் ஏற்றுமதி வியாபாரம் மூலமாக மூலதனத்தைச் செயல்பட வைக்கிறார்கள்.
5. தொழில்முனைவோர் கைவினைஞர்கள், தொழில் நுட்பத் தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறார்கள். தொழில்நுட்பத்தை மாற்றும் சூழலில் பணியாற்றி மேலும் புத்தாக்கத்தின் மூலம் இலாபத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றனர்.
6. தொழில்முனைவோர், குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களைப் பெற மக்களுக்கு உதவுகின்றனர். இதன் விளைவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுகிறது.